
# இந்து ஒளி
# HINDU OLI



தீபம் - 15    சுடர் - 04


## நல்லைக் கந்தன் மகோற்சவ சிறப்பிதழ்

*Quarterly of All Ceylon Hindu Congress*


அகில இலங்கை இந்து மாமன்றம் காலாண்டிதழ்


# யாழ். சிவதொண்டர் மாநாடு நிகழ்வுகள் (28.05.2011, 29.05.2011)







மாமன்ற யாழ். பணிமனையிலிருந்து சிவதொண்டர் அணியினருடன் புறப்படும் ஊர்வலத்தில் நல்லை ஆதீனமுதல்வர், இலங்கை இராமகிருஷ்ணமிஷன் தலைவர், துர்க்காதேவி தேவஸ்தான பிரதம குரு, மாமன்றத் தலைவர், பொதுச் செயலாளர், செஞ்சொற்செல்வர், பிரதம விருந்தினர் நீதியரசர் சி.வி. விக்னேஸ்வரன் மற்றும் பிரமுகர்கள்.






ஊர்வலம் செல்லும் காட்சி.





சிவதொண்டர் அணியினர் நல்லூர்க் கந்தசுவாமி கோயில் வீதியில் வரும் காட்சிகள்



சிவதொண்டர் மாநாட்டிற்கு இலங்கையின் நாலாபுறமிருந்தும் வருகை தந்திருந்த சிவதொண்டர் அணியினராலும், சைவப் பெரியார்களாலும் மண்டபம் நிறைந்த காட்சி.



மாமன்றப் பொருளாளர்
திரு. வி. கந்தசாமி அவர்கள்,
"செஞ்சொற்செல்வம்"
"நூலின் முதற் பிரதியை,
தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி
தேவஸ்தான நிர்வாகசபை
உப தலைவர்
திரு. ச. ஆறுமுகநாதன் அவர்களிடம்
வழங்குகிறார். அருகே பேராசிரியர்
பா. கோபாலகிருஷ்ண ஐயர்,
மாமன்றத் தலைவர்
மனிதநேயமாமணி
வி. கயிலாசபிள்ளை,
சைவஞானபானு செஞ்சொற்செல்வர்
ஆறு. திருமுருகன் ஆகியோர்.

உ

# பஞ்சபுராணங்கள்

*திருச்சிற்றம்பலம்*

## தேவாரம்

என்ன புண்ணியம் செய்தனை நெஞ்சமே இருங்கடல் வையத்து
முன்னை நீபுரி நல்வினைப் பயனிடை முழுமணித் தரளங்கள்
மன்னு காவிரி சூழ்திரு வலஞ்சுழி வாணனை வாயாரப்
பண்ணியாதரித் தேத்தியும் பாடியும் வழிபடு மதனாலே!

## திருவாசகம்

ஆயநான் மறையவனும் நீயே யாதல்
அறிந்துயான் யாவரினும் கடையன் ஆய
நாயினேன் ஆதலையும் நோக்கிக் கண்டும்
நாதனே நானுனக்கோர் அன்பன் என்பேன்
ஆயினேன் ஆதலால் ஆண்டு கொண்டாய்
அடியார் தாம் இல்லையே அன்றி மற்றோர்
பேயனேன் இதுதான் நின் பெருமை அன்றே
எம்பெருமான் என் சொல்லிப் பேசுகேனே !

## திருவிசைப்பா

இடர்கொடுத் தென்னை ஆண்டு கொண்டென்னுள்
இருட் பிழம்பற வெறிந்தெழுந்த
சுடர்மணிவிளக்கின் உள்ளொளி விளங்கும்
தூய நற்சோதியுட் சோதி
அடல் விடைப் பாகா அம்பலக் கூத்தா
அயனொடு மாலறியாமைப்
படரொளி பரப்பிப் பரந்து நின்றாயைத்
தொண்டனேன் பணியுமா பணியே!

## திருப்பல்லாண்டு

சீரும் திருவும் பொலியச் சிவலோக
நாயகன் சேவடிக்கீழ்
ஆரும் பெறாத அறிவு பெற்றேன் பெற்ற
தார் பெறுவார் உலகில்
ஊரும் உலகும் கழற உழறி
உமை மணவாழ னுக்காட்
பாரும் விசும்பும் அறியும் பரிசுநாம்
பல்லாண்டு கூறுதுமே!

## திருப்புராணம்

சென்ற காலத்தின் பழுதிலாத் திறமும்
இனி எதிர்காலத்தின் சிறப்பும்
இன்றெழுந் தருளப் பெற்ற பேறிதனால்
என்றைக்கும் திருவருளு டையேம்
நன்றியில் நெறியில் அழுந்திய நாடும்
நற்றமிழ் வேந்தனும் உய்ந்து
வெற்றி கொள் திருநீற் றொளியினில் விளங்கும்
மேன்மையும் படைந்தனம் என்பார்!

*திருச்சிற்றம்பலம்*

உ
*சிவமயம்*

# இந்து ஒளி

தீபம் - 15 சுடர் - 04

கர வருடம் ஆவணித் திங்கள் 8ஆம் நாள்

25.08.2011

## நல்லைக் கந்தன் அருள்வேண்டிப் பிரார்த்திப்போம்!

*"கருணைகூர் முகங்கள் ஆறும் கரங்கள் பன்னிரண்டும் கொண்டு ஒரு திருமுருகன் வந்தாங்கு உதித்தனன் உலகம் உய்க" என்கிறது கந்தபுராணம். இவ்வாறு தோற்றம்பெற்ற முருகப் பெருமான் யாழ்ப்பாணக் குடாநாட்டில் எழுந்தருளியிருக்கும் முப்பெரும் திருத்தலங்களுள் ஒன்றாக சிறப்புப் பெறுகிறது நல்லையம்பதி.*

*இப்போது நல்லைக் கந்தனின் மகோற்சவப் பெருவிழாக் காலமாகும். யாழ் மண்ணில் எமது சமயமும் பண்பாடும் பேணப்படுகிறது. அதற்கு நல்லூர் புண்ணிய பூமியில் எழுந்தருளியிருக்கும் முருகப்பெருமானின் திருவருளே காரணம். மாமன்றத்தின் காலாண்டிதழான "இந்து ஒளி"யை நல்லைக் கந்தன் மகோற்சவ சிறப்பிதழாக வெளியிடுவதில் மாமன்றம் பெருமகிழ்ச்சியடைகிறது. கடந்த வருடமும் நல்லைக் கந்தன் மகோற்சவ சிறப்பிதழாக "இந்து ஒளி" மலர்ந்திருப்பதை இந்து மக்கள் மறந்திருக்கமாட்டார்கள்.*

*மாமன்றத்தின் காலாண்டிதழாக மலரும் "இந்து ஒளி" தனது வளர்ச்சிப் பாதையில் பதினைந்து வருடங்களை நினைவுசெய்யும் வகையில் அறுபதாவது சுடராக ஒளிவிடும் இவ்விதழை நல்லூரான் பெருமைபேசுவதாக வடிவமைத்து, அவனது திருப்பாதங்களுக்கு சமர்ப்பணம் செய்வதும் ஒரு தெய்வீக நிகழ்வாகவே அமைந்துள்ளது.*

*முருகப் பெருமான் கோயில்கொண்டு எழுந்தருளியிருக்கும் நல்லூர் பிரதேசத்தில் மாமன்றத்தின் பிராந்திய பணிமனையை அமைத்து அதனூடாக சமய, சமூக நலப் பணிகளை சிறப்பாக முன்னெடுத்துச் செல்கிறோம். கடந்த மூன்று மாதங்களுக்கு முன்னர் யாழ் மண்ணில் சிவதொண்டர் மாநாடு நடத்தியிருந்தோம். யாழ் மண்ணை சிவபூமியாகப் பேணி காப்பாற்றிவரும் தொண்டர்-மாமன்ற துணைத் தலைவர் செஞ்சொற்செல்வர் ஆறு. திருமுருகன் அவர்களின் அகவை ஐம்பது நிறைவையொட்டி மாமன்றம் வழங்கிய சிறப்புக் கௌரவத்தின்போது, நல்லை ஆதீனம் "சைவ ஞானபானு" பட்டம் வழங்கி, தமிழகத்திலிருந்து வருகை தந்திருந்த பேராசிரியை சரஸ்வதி இராமநாதன் அவர்களது சொற்பொழிவால் மேலும் விழிப்புணர்ச்சி ஏற்படுத்தி, யாழ். பிராந்திய பணிமனையில் சைவ வித்தகர் பயிற்சியை ஆரம்பித்து, "இந்து ஒளி"யின் கடந்த இதழையும் அந்தப் புண்ணிய பூமியில் வெளியிட்டு வைத்தோம்.*

*இதே வேளையில் எங்கள் மன ஆதங்கங்களையும் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும். இப்போது யாழ் மண்ணில் கலாசாரச் சீரழிவுகளைத் தூண்டும் சில சக்திகள் தலையெடுத்திருப்பது மிகவும் வேதனைக்குரியது. இதற்கு முற்றுப்புள்ளி வைக்கப்படுவது அவசியமாகும்.*

*மாமன்ற அறங்காவலர் சபைத் தலைவரும், திருக்கேதீஸ்வர ஆலய திருப்பணிச் சபைத் தலைவருமான சைவப்பெரியார் இ. நமசிவாயம் அவர்கள் தனது 99 ஆவது வயதில் எம்மைவிட்டுப் பிரிந்து விட்டமையும் வேதனைக்குரியது. இவரது மறைவு மாமன்றத்திற்கு பேரிழப்பாகும். இவரைப்போன்று மன உறுதியும், சமயப்பற்று முள்ளவர்களே இன்று நமக்குத் தேவையாக உள்ளனர்.*

*"நல்லூர் வீதியில் வந்தொருகால் விழுந்து கும்பிட்டால் வில்லங்கம் எல்லாம் இல்லாமற்போகும்" என்று யோகர் சுவாமிகள் திருவாய் மலர்ந்திருப்பதனை மனதில் கொண்டு, நல்லனவே நடக்கவேண்டும் என்று நல்லைக் கந்தனை போற்றி வணங்கி, அவன் திருவருளைப் பெற்றுக் கொள்வோமாக!*

# இந்தச் சுடரில்...


| | |
|---|---|
| • பஞ்ச புராணங்கள் | 01 |
| • அடியவர் குறை தீர்க்க அவனி வந்த கந்தபெருமான் | 03 |
| • தோள் கொடுப்பான் கந்தவேள் | 04 |
| • அபயகரம் காட்டி அருள் புரிவான் நல்லைக் கந்தன் | 05 |
| • சுப்ரமண்ய ஆலய நிர்மாண விதி | 07 |
| • நல்லைக் கந்தனின் மகோற்சவப் பெருவிழா | 09 |
| • நல்லை முருகன் தேர்த் திருவிழா மகிமை | 10 |
| • கலியுக வரதன் ஆட்சிபுரியும் இடம் நல்லூர் | 13 |
| • அழகன் முருகன் உறையும் அற்புத நல்லூர் பதி | 15 |
| • சிறுவர் ஒளி–சிந்தனைக் கதைகள் | 17 |
| • மாணவர் ஒளி – பெரிய புராணக் கதைகள் | 18 |
| • ஆடி அமாவாசை விரத மகிமை | 20 |
| • நந்தி | 23 |
| • Aadi Amavasai | 24 |
| • சமூகத்தின் சமய ஆற்றலை வெளிப்படுத்தவே சிவதொண்டர் மாநாடு | 27 |
| • நீதியரசர் சி. வி. விக்னேஸ்வரன் உரை | 28 |
| • யாழ் மண்ணில் சிவதொண்டர் மாநாடு | 33 |
| • ஆறு. திருமுருகன் வாழ்த்துப்பா | 37 |
| • ஆறு. திருமுருகன் கௌரவிப்பு | 38 |
| • N.A. Vaithialingam | 41 |
| • பேராசிரியை சரஸ்வதி இராமநாதனுடன் கலந்துரையாடல் | 43 |
| • மாமன்றத்தின் அனுதாபம் | 45 |
| • மாமன்றம் வாழ்த்துகிறது | 46 |


**அடுத்த சுடர்**

**கர வருடம்**

**ஐப்பசி-மார்கழி**


ISSN : 2012-9645


## வாழ்த்து

ஆறிரு தடந்தோள் வாழ்க! ஆறுமுகம் வாழ்க! வெற்பைக்
கூறுசெய் தனிவேல் வாழ்க! குக்குடம் வாழ்க! செவ்வேள்
ஏறிய மஞ்ஞை வாழ்க! யானைதன் அணங்கு வாழ்க!
மாறிலா வள்ளி வாழ்க! வாழ்க சீர் அடியாரெல்லாம்!


**இந்து ஒளி**

அகில இலங்கை இந்து மாமன்றத்தின்
கர வருடம் ஆடி – புரட்டாதி இதழ்
**ஆவணித் திங்கள் 8ஆம் நாள்**
**25.08.2011**



ஆசிரியர் குழு :
பேராசிரியர் அ. சண்முகதாஸ்
கலாநிதி குமாரசாமி சோமசுந்தரம்
சிவஸ்ரீ ம. பாலகைலாசநாத சர்மா
திரு. கந்தையா நீலகண்டன்
திரு. த. மனோகரன்



| | | |
|---|---|---|
| ஒரு பிரதியின் விலை | ரூபா | 50.00 |
| வருடாந்தச் சந்தா [உள்நாடு] | ரூபா | 200.00 [தபாற் செலவு தனி] |
| வருடாந்தச் சந்தா [வெளிநாடு] | US டொலர் | 10.00 |



**அகில இலங்கை இந்து மாமன்றம்**
A.C. H. C. கட்டிடம்
91/5, சேர் சிற்றம்பலம் ஏ. கார்டினர் மாவத்தை,
கொழும்பு – 2, இலங்கை.
இணையத்தளம் : http:/www.hinducongress.lk
மின்னஞ்சல் : hinducongress@gmail.com
தொலைபேசி எண் : 0112434990, தொலைநகல் : 0112344720



இந்து ஒளியில் வெளியிடப்பட்டுள்ள கட்டுரைகளில்
தெரிவிக்கப்பட்டுள்ள கருத்துக்கள்
ஆக்கியோன்களுடையதே.



HINDU OLI
**Aadi-Puraddathy Issue of**
**ALL CEYLON HINDU CONGRESS**
**25th August 2011**



**Editorial Board :**
Prof. A. Shanmugadas
Dr. Kumarasamy Somasundaram
Sivasri M. Balakailasanatha Sarma
Mr. Kandiah Neelakandan
Mr. D. Manoharan



| | | |
|---|---|---|
| Price : | Rs. | 50.00 Per copy |
| Annual Subscription (Inland) | Rs. | 200.00 (Postage Exclusive) |
| Annual Subscription (Foreign) (Including Postage) | U. S. $ | 10.00 |



**ALL CEYLON HINDU CONGRESS**
**A.C.H.C. Bldg.**
91/5, Sir Chittampalam A. Gardiner Mawatha
Colombo - 2, Sri Lanka.
Website : http://www.hinducongress.lk
E-Mail : hinducongress@gmail.com
Telephone No.: 011 2434990, Fax No.: 011 2344720


Next Issue :
AIPASI - MARKAZHI


**Views expressed in the articles in Hindu Oli are those of the contributors.**



# அடியவர் குறைதீர்க்க அவனிவந்த கந்தப்பெருமான்

சைவப்புலவர் செ. கந்த சத்தியதாசன்
சைவ சித்தாந்த முதுகலைமாணி
சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் - வலிகாமம் கல்வி வலயம்

ஆதியானதும் அநாதியானதும் சைவசமயம். சிவபெருமானே உயிர்களின் நன்மைக்காக உலகத்தையும், உலகத்திலுள்ள போகப் பொருட்களையும், உயிர்களுக்கான உடல்களையும், உணரும் கரணங்களையும் வழங்கியவன்; கருணை வாரியாக இருப்பவன். இவ்வுலகில் வாழும் அனைத்துயிர்களும் ஆணவம், கன்மம், மாயை என்கின்ற மலங்களை நீக்கி மேலான முத்தியின்பத்தை வழங்க வேண்டும் என்பதே சிவபெருமானின் நோக்கமாகும். இதனாலேயே உமை, பிரம்மா, விஷ்ணு, உருத்திரன், மகேஸ்வரன் என்கின்றோரை தனியே உருவாக்கி அகில உலகங்களையும் இராஜாங்கம் செய்து வருகின்றான்.

இவ்வாறு பரம கருணாநிதியாக விளங்கும் பரம் பொருளாம் சிவபெருமான் தேவர்கள் துயர்போக்குவதற்காக சூரனாதியோரை அழித்து அவர்களுக்கு நல்வாழ்வு கொடுப்பதற்காக கருணையின் வெளிப்பாடாக தன்னையே வேறோர் உருவில் ஆக்கிக் கொண்டான். அவன்தான் பன்னிருதடந்தோள் வள்ளலாகிய முருகப்பெருமான்.

சிவபெருமானுக்கு ஈசானம், தற்புருஷம், அகோரம், வாமதேவம், சத்தியோஜாதம் என்னும் ஐந்து முகங்கள் காணப்படுகின்றது. இவற்றோடு அகில லோக நாயகியாகிய உமையம்மையாரின் அதோ முகத்தையும் இணைத்து ஆறுமுக சாமியாகிய சண்முகப் பெருமானைத் தோற்றுவித்தார். இதனையே "ஐந்து முகம் தோன்றில் ஆறுமுகம் தோன்றும் வெஞ்சமரில் அஞ்சேல் என வேல் தோன்றும்" என நக்கீரர் காட்டுகின்றார்.

சிவபெருமானின் ஐந்து முகங்களும் நான்கு திக்குகளையும் நான்கு முகம் நோக்க, உச்சி முகம் மேல் நோக்கி இருக்கின்றது. ஆனால் ஆறுமுகசுவாமியில் அதோ முகமோ கீழ்நோக்கி எம்மையெல்லாம் நோக்குகின்றது. "கூறும் அடியார்கள் வினை தீர்த்த முகம் ஒன்று" என திருப்புகழில் அருணகிரியார் இம் முகத்தை எடுத்துக் காட்டுகின்றார்.

இவ்வாறு எத்திசையும் நோக்கும் பெருமான் அவதரித்தமையை கச்சியப்பர்,

*"அருவமும் உருவமாகி அநாதியாய்*
*பலவாய் ஒன்றாய்ப்*
*பிரமமாய் நின்றசோதிப் பிளம்பதோர்*
*மேனி யாகிக்*
*கருணைகூர் முகங்களாறும் கரங்கள்*
*பன்னிரண்டும் கொண்டே*
*ஒரு திரு முருகன் வந்தாங்கு உதித்தனன்*
*உலகம் உய்ய"* எனப் பாடுகின்றார்.

இவ்வாறு தன்னுடைய அடியவர் குறை தீர்க்க அவனி வந்த பெருமான் கந்தன். அவனது மார்பிலே கடம்பமாலை காணப்படுகின்றது. இதனால் கடம்பன் என்றும், செந்நிறமான திருமேனி கொண்டமையினால் செவ்வேள் என்றும், கையில் வேலைத் தாங்கியமையினால் வேலவன் என்றும், கலியுகத்திலே நல்லருள் பாலிப்பதால் கலியுகவரதன் என்றும், ஆறுமுகங்களை கொண்டமையினால் ஆறுமுகசுவாமி (சண்முகன்) என்றும், சரவணபவ எனும் ஆறெழுத்து மந்திரத்தை மூல மந்திரமாகக் கொண்டமையினால் சரவணபவன் என்றும் பலநாமங்கள் காரண காரியத்தோடு அமைகின்றது.

இத்தகு சிறப்புமிகு கருணைமிகு கந்தப் பெருமான் வழிபாடு பழந்தமிழர் எனப்படும் சங்ககாலத்து மக்களாலேயே வழிபடப்பட்டிருக்கின்றன. சங்க காலத்தில் குறிஞ்சி நிலமக்கள் தமது பிரதான தெய்வமாக சேயோனாகிய செவ்வேளைப் போற்றி வழிபட்டார்கள். தேனும் தினைமாவும் முருகனுக்கு நிவேதனமாகப் படைத்தனர். இதனாலேயே இன்றும் தேனையும், தினைமாவையும் சேர்த்து விளக்குச் செய்து நெய்விட்டு மாவிளக்கு ஏற்றி வழிபாடு செய்கின்றனர். இதற்கு முன்னரேயே இருக்கு வேதம் "சுப்ரம்மண் ஓம், சுப்ரம்மண் ஓம், சுப்ரம்மண் ஓம்" என மூன்று தடவை சுட்டுவதையும் காணமுடிகின்றது. வடமொழிப் புராணங்களில் ஸ்காந்த புராணம் முருகனைப் பற்றிய பல்வேறு விடயங்களையும் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றது.

கி.பி. 14ஆம் நூற்றாண்டில் முருகப் பெருமான் திருவருளாலேயே காஞ்சி குமர கோட்டத்தின் சிவாச்சாரியராக விளங்கிய கச்சியப்ப சிவாச்சாரியாருக்கு வழிகாட்டி அடியெடுத்துக் கொடுக்க தமிழிலே கந்தப்புராணத்தைப் பாடி அருளினார்.

யாழ்ப்பாணத்து அரியாலைக் கச்சிக் கணேசையர் கந்த புராண அரங்கேற்றத்துக்குச் சென்று கந்தபுராண ஏட்டுப் பிரதியொன்றை எழுதி வந்து அரியாலை சித்தி விநாயகர் ஆலயத்தில் அப்பாடல்களைப் பாடி பொருள் விரித்துக் கூறினார். இது கந்தபுராண படனமாக வளர்ந்தது. இதனால் எல்லோரும் கந்தபுராணத்தை நன்கு தெரிந்து கொண்டனர். இதனால் கந்தபுராண கலாசாரத்தை தம் வாழ்வில் கடைப்பிடிக்கத் தொடங்கினார்கள். "யாழ்ப்பாணக் கலாசாரம் கந்தபுராண கலாசாரம்" என பண்டிதமணி கணபதிப்பிள்ளை கூறுமளவிற்கு முருகவழிபாடு யாழ்ப்பாணம் மட்டுமன்றி இலங்கை முழுவதும் சிறந்து விளங்குகின்றது.

இத்தகு முருக வழிப்பாட்டுத் தலங்களிலே முதலாவதாக அமைவது கதிர்காமம். அதற்கடுத்தபடியாக அமைவது செல்வச்

சந்நிதி. அதற்கடுத்து அமைந்த ஆலயங்கள் மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில், நல்லூர்க் கந்தசுவாமி கோயில் ஆகியன. கி.பி. 9ஆம் நூற்றாண்டில் அமையப்பெற்ற ஆலயங்கள் ஆகும்.

மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலயம் சிற்ப, ஓவிய செதுக்கங்களாலும் சாத்துப்படி, வாகன அலங்காரங்களாலும் ஆலயமும் உற்சவங்களும் அலங்காரமாக அமைந்தமையால் அலங்காரக்கந்தன் என்றும், செல்வச்சந்நிதி பல அன்னதான மடங்களைக் கொண்டு வருடம் முழுவதுமே செல்கின்ற அடியவர்களுக்கெல்லாம் அன்னதானம் வழங்கப்பட்டு வருவதால் அன்னதானக் கந்தன் என்றும், நல்லூர்க் கந்தசுவாமி கோயிலில் தினமும் ஏராளமான அபிஷேகங்கள் நடைபெற்றுவருவதால் அபிஷேகக் கந்தன் என்றும் அழைக்கப்பட்டது.

ஆனால் இன்று நல்லூர்க் கந்த சுவாமி கோயில் அலங்காரத்தில் தனித்துவம் பெறுகின்றது. யாழ்ப்பாணத்தின் சின்னமாக பலரும் நல்லூர்க் கந்தசுவாமி கோயில் முகப்புத் தோற்றத்தை வெளிப்படுத்துமளவிற்கு அலங்காரக் கந்தனாக விளங்குகின்றான். மேலும் சாத்துப்படி அலங்காரம், வாகனங்களின் அலங்காரம், திருமஞ்சம், கைலாச வாகனம், சப்பரம், தேர் என்பவற்றாலும், மூன்று இராஜ கோபுரங்களாலும் அழகு பெறுவதால் அலங்காரக் கந்தனாகி விட்டான். முன்னர், அறுபத்து மூவர் மடத்திலும், நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம், மூத்ததம்பி அன்னதான மடம் ஆகியவற்றிலுமே சிறப்பு உற்சவ காலங்களில் அன்னதானம் நடைபெற்றுவந்தது. இன்று இவற்றோடு, துர்க்கா தேவி மணி மண்டபம், மகேஸ்வரன் மண்டபம், நடராசா பரமேஸ்வரி மண்டபம் ஆகியவற்றிலும் மகோற்சவ காலம் எல்லா நாட்களிலும் அன்னதானம் நடைபெறுவதால் அன்னதானக் கந்தனாகியும் மாறி விட்டான்.

இத்தகு சிறப்போடு முருகு என்கின்ற சொல்லுக்கு அழகு என்கின்ற பொருள் அமைகின்றது. இதனால் முருகனை அழகன் என்று அழைக்கின்றோம். இந்த அழகனை காட்சிப் பொருளாக கண்ணால் பார்க்க வேண்டுமானால், அழகுக்கு வரைவிலக்கணம் காணவேண்டுமானால் நல்லூர்க் கந்தசுவாமி கோயிலுக்கு வாருங்கள். தேர்த்திருவிழாவன்று தேரில் ஆரோகணிக்க வரும் போது ஒரு அழகு; மீண்டும் பச்சை சாத்தி (ஆலயத்திற்குள்) ஜதாஸ் தானத்திற்கும் செல்லும் போது ஒரு தனி அழகு. இதைக் காண்பதே அரிது. கண்டாலும் எம்மிரு கண்கள் போதாது. அகலத் திறந்தாலும் கண்ணில் அடங்கிவிடுமா? இதனாலன்றோ அருணகிரிநாதர் “செங்கோடனைச் சென்று கண்டு கைகள் தொழ நாலாயிரம் கண்படைத்திலனே அந்த நான்முகனே” என்கின்றார். நாலாயிரம் கண் மட்டுமல்ல பல இலட்சம் கண்கள் நல்லூர்க் கந்தனை–அழகனை நோக்குகின்றதல்லவா. இத்தகு தரிசனத்தைக் காண நல்லூருக்கு வாருங்கள்; வழிபாடாற்றுங்கள்; நல்லூர் மண்ணில் நடமாடுங்கள்; விழுந்து கும்பிடுங்கள். துன்பம்போம், வல்வினைபோம். “பஞ்சம் படைவந்தாலும் பாரெல்லாம் வெந்தாலும் அஞ்சுவமோ நாங்களடி கிளியே ஆறுமுகன் தஞ்சமடி” என யோகர்சுவாமிகள் அனுபவித்த அனுபவம்தான் எமக்கும் வருகின்றது. நல்லைக்கந்தன் என்றும் தம் பக்தருக்கு நன்மை அருள்வான்.

## தோள்கொடுப்பான் கந்தவேள்!



த. பரமலிங்கம்
(நவாலியூர்க் கவிராயர்)

*நல்லை முருகன்தாழ் நாளாந்தம் வீழ்ந்துதுதி*
*இல்லை நடக்குமாம் எதுவுமாகில் - தொல்லையிலா*
*வாழ்வதும் தொடர்வதற்கு வாகனனாம் தோகைமயில்*
*தோள்கொடுப் பான்கந்த வேள் !*

*ஆவணியில் இருபத்தைந் தாகின்ற தினங்களிலாம்*
*தேவயானை ஸ்ரீ வள்ளி தோளொன்றும் - பாவமதாய்*
*விதவிதமோர் தண்டிகை விமானமேறி வீதியுலா*
*பதம்வரும் காட்சிகள் பார் !*

*பத்தாம்நாள் மஞ்சமும் பதினெட்டில் கார்த்திகையாம்*
*வித்தாகும் திருவிழாக்கள் விபரித்தால் - முத்துமுத்தா*
*கைலாச வாகனமாம் மாம்பழத் திருவிழாவாம்*
*மெய்யாகச் சப்பறமும் மேல் !*

*ரதபவனி தீர்த்தம் ரசனையாத் திருமணமும்*
*இதயத்தை முருகனடியாரிடமெலாம் - உதயவித்து*
*ஆட்கொள் திருவிழாக்கள் அகிலத்தை மெய்மறக்கும்*
*நீட்சியாம் என்றென்றும் நிலம் !*

*கற்பூரச் சட்டியும் காலடித் தொழுகையும்*
*அற்புதமாம் பிரதட்டை அணிவகுப்பு - சுற்றாடல்*
*எங்கனுமாய் பால்காவடி எழிலுறும் துலாக்காவடி*
*பங்களிப்பில் சுட்டெரி பகல் !*

*அடியார்கள் அரோகரா ஆர்ப்பரிக்கும் கோசங்கள்*
*துடிப்பதில் வெயில்சூடு தூளெரிக்கும் - மடியதிலும்*
*நெருப்பாகத் தகிக்கும் நெருக்கடி நினைவலைகள்*
*உருக்குமே பக்தியாம் உரு !*

## வண்ணமயிலேறும் வடிவேலா !


- சைவப்புலவர் செ. கந்த சத்தியதாசன் -



*வண்ண மயிலேறும் வடிவேலா - நீ*
*வலம் வந்தருள்வாய் நமக்கெல்லாம்*
*உண்ண வழிகாட்டும் நல்லூரா - நீ*
*உமைபெற்ற பாலகனே வெற்றிவேலா*
*மண்ணதனின் மகிமைதான் நல்லூரில் - நீ*
*நடந்து வந்து விளையாடி யதனாலோ*
*கண்ணதனால் பக்தனை நோக்கும் - உன்*
*திருப்பார்வை கவலைகளை மாய்த்துவிடும்*



# அபய கரம் காட்டி அருள் புரிவான் நல்லைக் கந்தன்



சிவத்தமிழ் வித்தகர் சிவ மகாலிங்கம்

தவயோகி திருமூலநாயனாரால் சிவபூமி என அழைக்கப்பட்ட ஈழமணித் திருநாட்டில் யாழ்ப்பாணக் குடாநாடு ஞானபூமியாக மிளிர்கிறது. யாழ்ப்பாணக் குடாநாட்டில் அருள் ஒளி வீசும் ஆலயங்கள் பல உண்டு. கலியுகவரதனாகிய கந்தவேல் பெருமான் வீற்றிருந்து அருளாட்சி புரியும் ஆலயங்களிலே நல்லைக் கந்தனின் ஆலயம் சிறப்பிடம் பெறுகிறது. தஞ்சமென வரும் அடியார்களை அஞ்சேல் என்று அபயகரம் காட்டி அருள் வழங்கும் ஞான பண்டிதனாக நல்லூர் முருகன் காணப்படுகின்றார். அருளாகும் கோயிலாகிய நல்லைக் கந்தன் ஆலயத்திலே நடமாடும் கோயில்களாகிய சித்த புருஷர்கள் பலர் வாழ்ந்து வந்தார்கள்; இன்றும் வாழ்ந்து வருகின்றார்கள். ஊனக் கண்ணால் மட்டும் பார்ப்பவர்களுக்கு இத்தகைய சித்தர்களை, ஞானிகளை இனம் கண்டு கொள்ள முடியாது.

தென் இந்தியாவின் தமிழ் நாட்டிலே உள்ள கிராமங்களின் பெயர்களைக் கொண்டவையாக யாழ்ப்பாணக் குடாநாட்டில் சில கிராமங்களின் பெயர்கள் காணப்படுகின்றன. அறநெறி பிசகாத நற்பண்புள்ள மக்கள் வாழ்ந்ததால் நல்லூர் என்ற காரணப் பெயரை இக் கிராமம் பெற்றது. நல்ல மக்கள் வாழ்ந்த கிராமம் ஆகையால்தான் சைவத்தின் காவலராகிய நாவலர் பெருமான் இம் மண்ணிலே திரு அவதாரம் செய்தார். தவத்திரு செல்லப்பா சுவாமிகள், யோகர்சுவாமிகள் போன்ற மகான்கள் நல்லூர் முருகப் பெருமானின் கோயில் சூழலிலே நடமாடித் திரிந்தார்கள். யாழ்ப்பாணத்து ஊர்களிலே நல்ல ஊர் நல்லூர். அது தலைசிறந்ததொரு புண்ணிய க்ஷேத்திரம். இந்தத் திவ்விய க்ஷேத்திரத்திலே முத்தியெய்திய மகானொருவரின் ஆத்மீக அலை ஈழநாடு முழுவதிலும் பாரதநாட்டிலும் அப்பாலேயும் பரவியிருப்பது பிரசித்தம். இங்கே முருகனின் திருவருள் வெள்ளம் பிரவாக்கிக்கின்றது. வருடந்தோறும் எண்ணிறைந்தவர்கள் அகமும் புறமும் தூயராய் உய்தி தலைக்கூடுகிறார்கள் எனப் பண்டிதமணி கணபதிப்பிள்ளை அவர்கள் நல்லூரைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார்.

நல்லூர் முருகப் பெருமானின் ஆலயத்தில் மகோற்சவம் ஆரம்பித்துவிட்டால் நல்லூர்க் கிராமம் மாத்திரமல்லாது சூழவுள்ள கிராமங்கள் எல்லாம் புனிதமாகிவிடும். இல்லங்கள் எல்லாம் தூய்மைப் படுத்தப்பட்டுத் தெய்வீக ஒளி வீசும் இடங்களாக மாறும். மக்கள் அனைவரும் சிவக்கோலத்துடனும் தவக் கோலத்துடனும் காட்சி தருவார்கள். நல்லூரான் வீதி நடந்தாலே "வினை தீரும்" என்பார்கள். ஆனால் நல்லைக் கந்தனின் அடியார்கள் சிறப்பாக இளைஞர்கள் அதிகாலை நான்கு மணி முதல் கந்தா, கடம்பா, கதிர்வேலா, நல்லைக் குமரா, ஞான பண்டிதா என்று நாவால் உச்சரித்த வண்ணம் அங்கப் பிரதட்சணம் செய்து அன்போடு முருகனை வழிபடுவார்கள். திருவிழா நிகழும் காலத்திலே நல்லூர்க் கோயில் பூலோக கைலாயமாகவே காட்சி அளிக்கும். தெரு வீதிகள் எல்லாம் புனித வீதிகளாக மாறிவிடும். திருவிழா வேளையில் எந்த மயமும் கந்தமயமாகவே காணப்படும்.

கீழைக் கோபுரம் வாயிலின் உச்சியில் ஓம் என்ற எழுத்தும், நடுவில் வேலின் வடிவமும் அதன் கீழ் முருகா என்ற எழுத்தும், பகல் இரவாக ஒளிவளர் விளக்காக நன்கு அமைக்கப்பட்டுள்ளது. தெற்குப் பக்கத்தில் இராஜகோபுரம் ஒன்பது அடுக்குகளில் மிகச் சிறப்பான முறையில் அமைக்கப்பட்டுள்ளது. பூசைகள் அபிஷேகங்கள், திருவிழாக்கள், நித்திய நைமித்திக் கிரியைகள் யாவும் குறிக்கப்பட்ட காலநேரம் தவறாமல் கிரமமாக இங்கு நடைபெற்று வருகின்றன. திருவிழாக்காரர்களின் வரவையோ, பிரதான ஆட்களின் வரவையோ எதிர்பார்த்துக் கிரியைகள் உற்சவங்கள் பின்போடும் வழக்கம் இக் கோயிலில் முற்றாகக் கிடையாது. கோயில் பூசை நேரம் தவிர்ந்த மற்றைய நேரங்களில் வரும் எந்தப் பிரமுகருக்காகவும் கோயில் கதவுகள் விசேடமாக திறக்கப்படமாட்டாது. யாராக இருந்தாலும் ஆண்கள் மேல் அங்கியை கழற்றிவிட்டே கோயிலுக்கு உள்ளே செல்ல வேண்டும் என்ற நியமம் மிக இறுக்கமாக கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. ஏழை எளியவர்களும் முருகப்பெருமானுக்கு அர்ச்சனை செய்யும் வசதி இங்குதான் காணப்படுகின்றது. அர்ச்சனை துண்டுக்கு உரிய பணம் ஒரு ரூபாய் மட்டுமே ஆகும். முருகப் பெருமானை வழிபட வரும் அடியார்களுக்கு இடையே வேறுபாடு காட்டாத உயர் நிலை இங்கு பேணப்பட்டு வருகிறது. இக் கோயிலில் உள்ள மணிக்கூடு காட்டும் நேரப்படி யாவும் குறிப்பிட்ட நேரத்திற்கு கிரமமாக நடைபெறுகின்றன.

"ஓசை ஒலியெலாம் ஆனாய் நீயே" என்பது அப்பர் பெருமானின் வாக்கு ஆகும். நல்லூர் ஆலயத்தில் உள்ள கண்டாமணி எழுப்பும் நாதம் பல மைல்களுக்கு அப்பால் உள்ள மக்களின் காதில் விழும். நல்லூரானின் மணியோசைச் சத்தம் கேட்டதும் அனைவருடைய உள்ளமும் தெய்வீகமயமாகிவிடும். தேரில் பவனி வருவதற்காக வள்ளி தெய்வானை சமேதராக ஆறுமுகப்பெருமான் கீழைக் கோபுர வாயிலை அடைந்ததும் கோயிலில் உள்ள ஆறு கண்டாமணிகளும் ஒருங்கே ஒலிக்க எழும் நாதம் பேரின்ப ஒலியாகவே இருக்கும்.

**நல்லூரும் நாவலரும்**

சைவ சேனாதிபதியாக, சைவத்தின் காவலராக விளங்கிய ஆறுமுக நாவலர் பெருமானுக்கு நல்லூர் முருகனே குல தெய்வம். இக்கோயிலின் தென்கிழக்குப் பகுதியில் நாவலர் பெருமான் சைவமடம் ஒன்றை ஸ்தாபித்தார். தமிழ் நாட்டின் திருவாவடுதுறை ஆதீனத்தில் இருந்து ஓதுவார் மூர்த்திகளை வரவழைத்து இந்த மடத்திலே தங்க வைத்து மகோற்சவ காலங்களில் சுவாமிக்குப் பின்னால் தெய்வத் தமிழாகிய திருமுறைகளைப் படிக்கும் மரபை ஏற்படுத்திவைத்தார். திருநீறு கண்டிகை தரித்த சிவக்கோலத்துடன் தானும் ஒருவராகத் திருமுறைப் பஜனையில் கலந்து கொண்டார். இதனைக் கண்ட சிவாசாரியார்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து வேத மந்திர கோசங்களை உச்சரித்தவாறு சுவாமிக்கு முன்னாலே சென்றார்கள். முன்னாலே வேதமந்திர கோஷம் ஒலிக்கப் பின்னாலே

தமிழ் வேதமாகிய திருமுறைகள் ஒலிக்க முருகப்பெருமான் பவனி வந்த காட்சி அற்புதமாக இருந்தது என நாவலர் சரித்திரம் எழுதிய கனகரத்தின உபாத்தியாயர் தனது நூலில் குறிப்பிட்டுள்ளார். நாவலர் காலத்திற்கு முன்பே யாழ்ப்பாணக் குடாநாட்டின் ஆலயங்களிலேயே நடைபெற்று வந்த புராணபடனமரபினை நாவலர் ஊக்குவித்தார். நல்லைக் கந்தன் ஆலயத்திலே நடைபெற்ற கந்தபுராணபடன நிகழ்விலே நாவலரின் மருமகன் வித்துவசிரோன்மணி பொன்னம்பலபிள்ளை பாடல்களைப் படிக்க நாவலர் பெருமான் பயன் சொல்லியிருக்கிறார். இப்புராண படனத்தினைக் கேட்பதற்காகப் பல நூற்றுக்கணக்கான மக்கள் ஆலய மண்டபத்திலே கூடுவார்கள் என நாவலரின் வரலாற்றில் கூறப்பட்டுள்ளது. நாவலர் பெருமான் ஆத்மார்த்த பூசையாகிய சிவ பூசையை நியமம் தவறாது நாள்தோறும் செய்யும் வழமை உடையவர். சிவபூசை நிறைவுற்றதும் தெய்வத் தமிழ் பாடல்களைப் பாடிய வண்ணம் தனது இல்லத்தில் இருந்து கால் நடையாகச் சென்று நாள்தோறும் நல்லூர் முருகனை வழிபட்டு வந்தார். 1969ஆம் ஆண்டு ஈழத்தில் வாழ்ந்த சைவப் பெருமக்கள் பலரின் கூட்டு முயற்சியினால் நாவலரால் ஸ்தாபிக்கப் பெற்ற சைவமடம் அமைந்திருந்த இடத்தில் நாவலர் மணிமண்டபம் அமைக்கப்பட்டு அவரின் திரு உருவச்சிலை வைக்கப்பட்டது. 1985 ஆம் ஆண்டு அச்சிலை அங்கிருந்து சிலரால் அகற்றப்பட்டது. சைவத் தமிழ் மக்கள் பலரும் மனம் நொந்து போய் இருந்தார்கள். நன்றி மறந்த சமுதாயமாக சைவத் தமிழ்ச் சமூகம் மாறிவிட்டதே என வெதும்பினார்கள். பண்டிதர் வித்துவான் கலாநிதி மு.கந்தையா அவர்கள் நாவலர் குரல் என்ற பத்திரிகையை நடாத்தி, நடைபெற்ற அதர்மச்செயலை அம்பலப்படுத்தினார். ஆனால் நல்லைக் கந்தனின் திருவருள் பலபேருக்கு உள்ளே நின்று செயற்பட்டதால் மீண்டும் கந்தவேல் பெருமானின் மகோற்சவ தினத்தில் கார்த்திகை விரத நன்னாளில் சிலை, முன் இருந்த மண்டபத்தில் கொண்டு வந்து வைக்கப்பட்டுள்ளது. நாவலர் பாரம்பரியத்தை இந்த மண்ணிலே நிலை நிறுத்த விரும்பும் சைவப்பெருமக்கள் அனைவரும் உளப்பூரிப்படைந்தார்கள். மீண்டும் நமது நாடு சிவபூமியாக மாறும் என்ற நம்பிக்கை சைவப் பெருமக்களிடம் தோன்றியுள்ளது.

**சித்தபுருஷர்கள் நடமாடிய இடம் நல்லையம்பதி**

''கடவுளைக் காணமுயல்பவர்கள் பக்தர்கள், கடவுளைக் கண்டு தெளிந்தவர்கள் சித்தர்கள்'' எனச் சித்த புருஷர்களுக்கு வரைவிலக்கணம் கூறப்பட்டுள்ளது. நடமாடும் கோயிலாகத் திரிந்த செல்லப்பா சுவாமிகள் நல்லூர்த்தேரடியிலே இருந்த வில்வமர நிழலிலேயே குரு மூர்த்தமாக வீற்றிருந்தார். சித்துக்கள் பல கைவரப் பெற்ற சித்த புருஷராகிய செல்லப்பா சுவாமிகள் இறையருளால் கிடைத்த சித்துக்களை விளம்பரம் செய்யவும் இல்லை; வியாபாரப்படுத்தவும் இல்லை. தத்வமஸ (நீயே அதுவாக இருக்கிறாய்), அகம் பிரமாஸ்மி (நானே பிரம்மம்), சோகம் அபஸ்மி (நானே அவன்) அயன் ஆத்ம பிரம்ம (ஆத்மாவேபிரம்மம்) என்ற உபநிடத மகாவாக்கியங்களைப் போல மகான் செல்லப்பா சுவாமிகளும் நான்கு மகா வாக்கியங்களை அருளினார். ''எப்பவோ முடிந்த காரியம். ஒரு பொல்லாப்பும் இல்லை, நாம் யாதும் அறியோம், முழுவதும் உண்மை'' என்பன அவை ஆகும்.

செல்லப்பா சுவாமிகளால் ஆட்கொள்ளப் பெற்ற ஞானச் செல்வராக தவத்திரு யோகர்சுவாமிகள் திகழ்ந்தார். நல்லைக் கந்தனுடைய திருவருளையும் செல்லப்பா சுவாமிகளின் குருவருளையும் யோகர் சுவாமிகள் ஒருங்கே பெற்றிருந்தார். தவத்திரு யோகர் சுவாமிகள் தன்னை ஆட்கொண்டருளிய செல்லப்பா சுவாமிகளின் அருட் சிறப்பினை ''எங்கள் குருநாதன்'' என்ற தலைப்பில் பாடியுள்ளார். மெய்யடியார்கள் நல்ல மலரெடுத்து நல்லூரை நாடிப்போய் நல்ல மனத்தோடு வணங்கினால் அலங்காரக் கந்தனாகிய நல்லூர் முருகன் தோகை மயில் வாகனத்தில் வந்து அடியார்களுக்கு காட்சி கொடுப்பான் என்பதை,

*நல்ல மலரெடுத்து நல்லூரை நாடிப் போய்*
*நல்ல மனத்தோடு நாம் பணிந்தால்– நல்ல மயில்*
*ஏறிவந்து காட்சி கொடுப்பான் எழில் முருகன்*
*தேறிவிடும் சிந்தை தெளி.*

என யோகர் சுவாமிகளின் நற்சிந்தனைப் பாடல் விளக்குகிறது.

வினைகள் நீங்க ஒரு வழி இருக்கிறது என்கிறார் யோகர் சுவாமிகள். நாளாந்தம் நல்லூரை வலம் வந்து வணங்கினால் வினைகள் அனைத்தும் பொசுங்கிவிடும் என்பதை

*''எந்நாளும் நல்லூரை வலம் வந்து வணங்கினால்*
*இடர்கள் எல்லாம் போமே''*

என யோகர் சுவாமிகள் பாடியுள்ளார்.

நல்லூரில் வீற்றிருந்து ஞான ஆட்சி புரியும் நல்லைக் கந்தனைத் திரிகரண சுத்தியுடன் நாள் தோறும் வணங்கும் அடியார்களுக்கு பசிப்பிணியும் தோன்றாது பஞ்சமும் ஏற்படாது, கொடியவர்களுக்கு அடங்கி வாழும் அச்சமும் நீங்கி விடும். நாமார்க்கும் குடியல்லோம் என்று கூறக் கூடிய சான்றாமை வீரமும் அகத்திலே தோன்றிவிடும் என்பதை,

*''பஞ்சம் படை வந்தாலும் பாரெல்லாம் வெந்தாலும்*
*அஞ்சுவமோ நாங்களடி கிளியே ஆறுமுகன் தஞ்சமடி''*

என யோகர் சுவாமிகளின் நற்சிந்தனைப் பாடல் குறிப்பிடுகிறது.

**பக்தர்களாகவும் தொண்டர்களாகவும் மாற்றம் பெறுவோம்**

ஆன்மா இறைவனிடம் லயப்படும் இடமே ஆலயம் ஆகும். இவ்வாறு இறைவனிடம் ஆன்மா ஒன்றி இறையருளைப் பெறுவதற்கு நாம் பக்தர்களாகவும் தொண்டர்களாகவும் மாற வேண்டும்.

*''பரம்பொருளின் பெரும் புகழைப் பாடிப் பணிதலன்றிப்*
*பிறவார்த்தை யாதொன்றும் பேசற்க ஆலயத்துள்''*

என்ற வாக்கிற்கு அமைய ஆலயத்தின் உள்ளே செல்லும் அடியார்களின் செயல்கள் அனைத்தும் அமைய வேண்டும்.

''பாடும் பணியே பணியாய் அருள்வாய்'' என்றே முருக மந்திரமாகிய கந்தரநுபூதியிலே அருணகிரிநாதரும் குறிப்பிடுகின்றார்.

''*ஆடுவதும் பாடுவதும் ஆனந்தமாக நினைத்தேடுவதும் நின்னடியார் செய்கை பராபரமே*'' என்றே தாயுமானவர் சுவாமிகளின் வாக்கிற்கு அமைய ஆடியும், பாடியும், அழுதும், தொழுதும் அடியார்கள் பக்திப் பரவசப்பட்டு நல்லைக் கந்தனை வணங்கும் காட்சியினை மகோற்சவ காலத்தில் காணலாம்.

''என் கடன் பணி செய்து கிடப்பதே'' என்ற அப்பர் பெருமானின் வாக்கிற்கு அமைய தாமே முன்வந்து பணி செய்யும் தொண்டர்கள் பலரை நல்லூரிலே காணலாம்.

ஈழத் தமிழ் சமுதாயத்தின் வாழ்வில் சாந்தியும் சமாதானமும் ஏற்பட்டு அனைவரும் மன அமைதியுடனும் தெய்வீக நினைப்புடனும் வாழ, பேசும் தெய்வமாக நின்று பேரருள் புரிகின்ற நல்லைக் கந்தனின் திருவருளை வேண்டி அனைவரும் இதய சுத்தியுடன் பிரார்த்திப்போமாக!



# சுப்பிரமண்ய ஆலய நிர்மாண விதி குமாரதந்திரத்தை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு

பிரம்மஸ்ரீ ம. பாலகைலாசநாதசர்மா
சிரேஷ்ட விரிவுரையாளர் - கிழக்குப் பல்கலைக்கழகம்
ஆய்வாளர் - காசி இந்துப் பல்கலைக்கழகம் - வாரணாசி

### அறிமுகம்

இந்துப் பண்பாட்டு மரபிலே வேதங்கள பொதுவானவை யென்றும் சிவாகமங்கள் சிறப்பானவையென்றும் அழைக்கப்படுகின்றன. சிறப்பான சிவாகமங்கள் இருபத்தெட்டும் பரமேஸ்வரனால் குருசிஷ்ய பாரமபரியமுறையில் உபதேசிக்கப்பட்டன. இவ்வாறு உபதேசிக்கப்பட்ட இருபத்தெட்டு சிவாகமங்களில் பதினேழாவது சிவாகமம் "லலிதாகமம்" ஆகும். இந்த லலிதாகமத்திற்கு லலிதம், லலிதோத்திரம், கௌமாரம் என்ற மூன்று உபாகமங்கள் இருக்கின்றன. ரிஷி முனிவரான கௌசிகர் பரமேஸ்வரனைப் பார்த்து முருகனைப் பற்றி எடுத்துக கூறும் குமாரதந்திரம் எனும் ஆகமத்தின் விபரங்களை எனக்கு உபதேசிக்க வேண்டும் எனக்கேட்டபோது பரமேஸ்வரன் அருளி அனுக்கிரகித்த நூலே கௌமாரம் என்னும் குமாரதந்திரமாகும்.

### குமாரதந்திரம்

ஸ்கந்த வழிபாட்டின் சகல விடயங்களையும் கூறும் ஆகமமே குமார தந்திரமாகும். இந்நூலானது மூல மந்திரங்களின் தொகுப்பாகக் காணப்பட்டு மந்திரங்களின் சிறப்பு விபரங்களைத் தருவதோடு தந்திர அவதாரப்படலம் தொடக்கம் சாயரக்ஷ பூஜா விதிப்படலம் வரையுள்ள ஐம்பத்தொரு படலங்களைக் கொண்டமைந்த ஆகம நூலாகும். குமார தந்திரத்திலுள்ள சிறப்பு என்னவெனில் உபாகமமாக இருந்தாலும் ஒருசிறிய மூலாகமம் போன்று முருகக் கடவுளுக்குரிய கர்ஷணாதி பிரதிஷ்டாந்தம், பிரதிஷ்டாதி உற்சவாந்தம், உற்சவாதி பிராயச்சித்தாந்தம் வரையுள்ள கிரியைகளின் கிரமங்களை தெளிவாக எடுத்துக்காட்டும் நூலாகக் காணப்படுகின்றது. அழகன் முருகனுக்குரிய பூஜை முறைகளையும், தீக்ஷை முதலிய கிரியைகளையும், உற்சவங்கள், பிரதிஷ்டை முறைகள், அவற்றால் வரும் குறைகளைநீக்கும் முறைகள், பலாபலங்கள் போன்ற கௌமார மரபு சார்ந்த விடயங்களையும் வழிபாட்டு நெறிகளையும் எடுத்துக் கூறும் நூலாக குமாரதந்திரம் அமைந்துள்ளது. "குமார" என்பது அழிவில்லாத இளமையுள்ளவன் என்பதும், "தந்திரம்" என்பது இயக்கம் என்ற கருத்தும் பெற்றுவரும்.

தமிழக முருகன் கோவிலகளான பழனி, திருச்செந்தூர், முதலான முருகன் கோவில்கள் அனைத்திலும் நித்திய பூஜை, உற்சவங்கள, பிரதிஷ்டைகள், வேண்டுதல் வழிபாடுகள் முதலியன குமாரதந்திர முறைப்படியே நடந்து வருகின்றன. குமாரதந்திரம் கூறும் சுப்பிரமண்ய ஆலய நிர்மாண விதிகளை எடுத்துக்காட்டும் வகையில் இவ்வாய்வுக் கட்டுரையும் அமைந்திருக்கின்றது.

### கர்ப்பக்கிரஹத்தின் பிரமாணம் (கருவறையின் அளவு)

சுப்பிரமண்ய சுவாமியின் ஆலய மூலஸ்தான அளவு மூவகைப்படும். அவை மாநாங்குலம், மாத்ராங்குலம், பேராம்குலம் எனப்படும். ஒரு ஹஸ்தம் என்பது இருபத்திநான்கு அங்குலமாகும் (இரண்டு அடியாகும்).

பூமிபூஜை செய்யப்பட்ட இடத்தில அஷ்டாதசக்கிரியைகள் நிறைவு செய்த பின்பு வாஸ்து சாஸ்திரமறிந்தவர்களினால் ஸ்கந்ததேவாலயம் கட்டப்படவேண்டும். மேற்கூறிய ஹஸ்த அளவைக் கொண்டு பார்க்கும்போது 2 ஹஸ்தம் முதல் 10 ஹஸ்தம்வரை கால்பிறவாய் அளவிருந்தால் ஏகதள விமானம் கர்ப்பக்கிருஹத்தின் மேலே கட்டப்பட வேண்டும். இரண்டு தளவிமானமாயின் 5 – 14 ஹஸ்தம் இருக்க வேண்டும். முறையே மூன்று தளமாயின் 7–16 ஹஸ்தமும், நான்கு தளமாயின் 13 – 22 ஹஸ்தமும் இருக்கவேண்டும்.

### விமானத்தின் உயரம்

விமானத்தின் உபாநம் (அடிப்பகுதி) முதல் ஸ்தூபிவரையுள்ள உயரமானது மூன்று பெயர்களினால் அவற்றின் உயரத்துக்கேற்ப வேறுபடும். அவை சாந்திகம், பௌஷ்டிகம், ஜயதம் என அழைக்கப்படும். ஸ்தூபி உயரம் ஐம்பது முழ அளவிற்கு குறைவாக இருந்தால் (க்ஷுத்ரவிமானம்) சாந்திகம் எனப்படும். 51 – 70 க்குள் இருந்தால் பௌஷ்டிகம் எனவும், 71 – 100 க்குள் இருந்தால் ஜயதம் எனவும் அழைக்கப்படும். மிகுதியாகவுள்ள உயரத்தைத் தவிர்க்க வேண்டும்.

கர்ப்பக்கிரகத்தின் நீள, அகல, உயர அளவுகளை 12, 10, 8 என்ற இரட்டைப் பட்டஎண்ணிக்கையுள்ள ஹஸ்த அளவுள்ளதாக விமானத்தின் மஹாபத்மம், பக்கச்சுவர்கள், விஸ்தாரத்தின் புறவாய் என்பன அமைக்கப்பட வேண்டும்.

### மண்டப அமைப்பு

அர்த்தமண்டபம், மஹாமண்டபம், அபிஷேகமண்டபம, ஸ்தம்பமண்டபம் என்பன முறையே இரண்டு, நான்கு,

ஆறு, எட்டு பங்குள்ளதாக சமநீளமாக அமையும். வாயிலானது உயரத்தின் பாதி அகலமுள்ளதாகவும், வாயிற்படி உயரத்தின் மூன்றில் ஒருபங்காகவும் அமைக்கப்பட வேண்டும். இரண்டு பக்கங்களிலும் துவாரபாலகர்களும் மூன்று மண்டபவாயிற் படிகளின் உயர் மேல் நிலையில் லஷ்மி, ஸரஸ்வதி, விநாயகர் ஆகியோர்களையும் அமைக்க வேண்டும்.

**கட்டிடப்பாணி**

கோவிற் கட்டிடப்பாணியானது நாகரம, திராவிடம், வேசரம் என்னும் பாணிகளில் அமையப் பெற்று மண்டபங்கள் எண்கோணம், அறுகோணம், நீண்டசதுரமாகவும் அமைய வேண்டும். ஆலயத்தின் வெளிக் கோஷ்ட்டத்தில் முறையே தெற்கில் சுப்பிரமண்யரையும, வடக்கில் குஹனையும், மேற்கில் ஸ்கந்தனையும் நிறுவவேண்டும். மண்டபத்தின் தென்மேற்கில் விநாயகரையும, வடக்கில் துர்க்கையையும் அமர்ந்த அல்லது நின்ற கோலமாக அமைக்கலாம்.

**பிரகாரம் அமையும் முறை**

ஆலயத்தின் விஸ்தாரத்திற்கும் பரிவாரதேவதைகளை நிர்மாணிப்பதற்கும், அழகிற்கும், இடத்திற்கும ஏற்றவகையில் சுப்பிரம்மண்ய ஆலயபிரகாரங்கள (வீதிகள்) அமையப்பெற வேண்டும். இரண்டு, மூன்று, ஐந்து பிரகாரங்கள் என இவை விரிந்து செல்லும். கருங்கல்லு அல்லது வெள்ளைக் கல்லு அல்லது செங்கல்லு இவற்றில் ஒன்றைக்கொண்டு பிரகாரம் அமைக்கலாம். பிரகாரம் அமைக்கப்படும் பிரமாணத்தின் பெயர் தண்டமெனப்படும். இரண்டாவது பரகாரம் முதற்பிரகாரத்தின் இரு மடங்காகவும, மூன்றாவதுபிரகாரம் இரண்டாவது பிரகாரத்தின் இருமடங்காகவும், ஐந்தாவது பிரகாரம் மூன்றாவது பிரகாரத்தின் இருமடங்காகவும அமையப்பெறவேண்டும்.ஒவ்வொரு பிரகாரங்களின் நான்கு திசைகளிலும் (கிழகது, தெற்கு, மேற்கு, வடக்கு) வாயில்களும், கோபுரங்களும் உத்தேசித்து அமைத்தல் வேண்டும்.

பிரகாரங்களில் தென்கிழக்கில் மடப்பள்ளியும், தான்யசாலையும், தெற்கில் ஜனசாலையும், புஷ்பமண்டபமும் அமையவேண்டும். தென்மேற்கில் ஆயுதசாலையும், வாகனமண்டபமும், வடமேற்கில் சயனசாலையும் வடக்கில் ஆஸ்தானமண்டபமும், கிழக்கில் நெய்சேகரிக்கும் இடமும், வடகிழக்கில் யாகசாலையும்; வடகிழக்கிற்கும் கிழக்கிற்கும் மத்தியில் வாத்தியங்கள் வைக்குமிடமும், வெளிப்பிரகாரங்களின் வடகிழக்கில் தீர்த்தக்குளம், தடாகம், கிணறு என்பனவும் அமைக்க வேண்டும்.

**பரிவாரதேவதைகள்**

பரிவார தேவதைகள் எட்டு, பன்னிரண்டு, பதினாறு, முப்பத்தியிரண்டு என விரிந்து அமையும். இரண்டு பிரகாரங்கள் உள்ள ஆலயமாயின் 8, 12 பரிவாரதேவதைகளையும், மூன்று பிரகாரங்களுள்ள ஆலயமாயின் 16 பரிவார தேவதைகளையும், ஐந்து பிரகாரங்களுள்ள ஆலயமாயின் 32 பரிவார தேவதைகளையும் ஸ்தாபனம் செய்ய வேண்டும்.

எட்டு பரிவார தேவதைகளாயின் நிருதியில் விநாயகரையும், ஸப்தமாதர்களையும் தெற்கில் பிரம்மா, விஷ்ணு, சிவன் ஆகியோர்களையும், வாயுதிசையில் துர்க்கையையும், வடக்கில், ஷேத்திரபாலரையும், வடகிழக்கில் சுமித்திரரையும் ஸ்தாபனம் செய்யவேண்டும்.

12 பரிவார தேவதைகளாயின் இவற்றுடன் மேலதிகமாக சூரியன், சந்திரன் (வடகிழக்கிற்கும் கிழக்கிற்கும் மத்தியில்), சாஸ்தா, யமன் (தெற்கில்) ஸ்தாபனம் செய்யவேண்டும்.

16 பரிவார தேவதைகளாயின் இவற்றுடன் மேலும் கிழக்கில் மஹாலஷ்மி, ஸரஸ்வதி, ஆகியோரையும், ஈசானத்தில் ஜயந்தனையும், வாயுதிசையில் சேஷனையும் நிறுவ வேண்டும்.

32 பரிவாரதேவதைகளாயின் மேலும் அஷ்டதிக்குகளிலும் இந்திராதி அஷ்டதிக்குப்பாலகர்களையும், அஷ்டதேவதைகளான வாசுகி, பிருங்கி, தக்ஷப்பிரஜாபதி, வீரதுர்க்கை, வீரபத்திரன், சுதேகன், சுரேசன், சுமுகன் ஆகியோர்களையும் எட்டுத்திசைகளிலும் ஸ்தாபிக்கவேண்டும். இவை மூன்று, ஐந்து பிரகாரங்கள் கொண்டுள்ள ஆலயத்தில் அமையப்பெறவேண்டும். பரிவார தேவதைகளின் விமானமும் கருவறையும் மூலமூர்த்தியின் அளவிற்கு பாதியளவாக அமைந்திருக்க வேண்டும். பரிவார விக்கிரகங்கள் மூல மூர்த்தியின் பிரதிமாலக்ஷண விதிக்கு ஏற்றவகையில் பொருத்தப்பாட்டுடன் அமையவேண்டும்.

**துவாரபாலகர்களின் அமைப்பு**

சுப்பிரமண்யருடைய கருவறையைச் சுற்றிலும் நான்கு திசைகளிலும் ஐந்து பிரகாரங்களிலும் துவார பாலகர்கள் நிறுவப்படுவார்கள். இவர்கள் சக்தியின் வஜ்ராயுதத்தை தாங்கியவர்களாகவும், சகல ஆபரணங்களையும் அணிந்தவர்களாகவும் பச்சை, சிவப்பு, மஞ்சள் கறுப்பு நிறமுள்ளவர்களாகவும் வர்ணம் தீட்டப்படுவார்கள். இவர்கள் ஜயன், விஜயன், ரஷன், கிருபன், ஸத்தியன், விஷக்ஷணன், அபயன், காமரூபன், வீரபாகு, வீரசேனன், வீரன், வீரகஞ்சுதன், வீரகேது மகாவீரன், வீரமௌலி, வீரியவான் எனப்படுவார்கள். இவர்களுட்பட நாற்பது துவாரபாலகர்கள் நான்கு திசைகளிலும ஐந்துபிரகாரங்களிலும் வாயில்களின் இரு மருங்குகளிலும் நிறுவப்படுவார்கள்.

**கஜமயூர ஸ்தாபனங்கள்:**

பிரகார முகப்புகளில் கஜமும் (யானை) மயூரமும் (மயில்) மூலவருக்கு அபிமுகமாக (மூலவரை நோக்கியதாக) அமைக்க வேண்டும்.

**ஸ்தம்ப பலிபீடஸ்தானம்:**

ஆலயத்தின் பாதியளவு உயரமுள்ளதாக ஸ்தம்பம் அமைய வேண்டும். ஸ்தம்பத்தின் காற்பங்கு உயரமுடையதாக பலிபீடம் அமையப் பெறவேண்டும்.

**சுப்பிரம்மண்ய ஆலய நிர்மான விதிப் பலாபலன்கள்**

இப் பூவுலகில் எவன் ஒருவன் அல்லது தர்ம பரிபாலனம் செய்வோர் மேற்கூறிய நிர்மாண விதி முறைகளுக்கு ஏற்றவகையில் சுப்பிரம்மண்யப் பெருமானுக்கு ஆலயம் நிர்மாணிக்கின்றார்களோ அவர்கள் அனைவருக்கும் பின்வரும் பலாபலன்கள் கிடைக்கப் பெறும் என்பதை குமாரதந்திரம் வலியுறுத்துகின்றது.

நற்கதி, நற்பிறப்பு, உயர்குடிவாழ்வு, புனிதமான பூமியையடைந்து புத்திர பௌத்திரர்களுடன் நல்ல சாம்ராஜ்ய பதவி, முன் ஏழு தலைமுறை, பின் ஏழுதலைமுறை, நடைமுறை தலைமுறையாக 21 தலைமுறைகளுக்கும், தலைமைத்துவ பதவி, எல்லா உலக அனுபவம் பெறல், திடகாத்திரம், நீண்ட ஆயுள், நிறைந்த செல்வம், சந்தான விருத்தி, நோயற்றவாழ்வு, உயர்பதவி,ஸ்கந்த லோகப் பிராப்தி என்பன கிடைக்கப் பெறுவார்கள்.

**முடிவுரை**

சுப்பிரமண்ய ஆலயத்தை நிர்மாணம் செய்வதற்கு முன்னராக அவை தொடர்பான விபரங்களையும் தரவுகளையும் குமாரதந்திரத்தில் இருந்து பெற்றுக் கொண்டு ஆலயத்தை நிர்மாணம் செய்கின்ற போது அவ்வாலயமானது எந்த விதமான பிரச்சினையும் இன்றி தேவதாசான் நித்தியமும், சாஸ்திர சம்பன்னமும் அமையப் பெறுகின்றது. எனவே கௌமார மரபுகளையும் சுப்பிரம்மண்ய வழிபாட்டு நெறிமுறைகளையும் அறிந்து கொள்வதற்கும் அவற்றைப் பின்பற்றுவதற்கும் குமார தந்திர ஆகமநூல் அவசியம் வேண்டப்படுகின்றது.

**துணை மூல நூல்கள்**


1. குமாரதந்திரம் - அருள்மிகு தண்டாயுதபாணி திருக்கோவில பழனி - 2003
2. குமாரதந்திரம்-(தேவநாகரி) –தென்னிந்திய அர்ச்சகர்சங்கம. சென்னை– 1974
3. சுப்பிரமண்ய பிரதிஷ்டாவிதி - ச. குமாரசாமிக் குருக்கள் யாழ்ப்பாணம் - 1963
4. சுப்பிரமண்ய பிரதிஷ்டாவிதி - எஸ். சம்பந்தக்குருக்கள கடலூர் - 1975
5. சுப்பிரம்மண்ய பரார்த்த பூஜாவிதி–கா.சுவாமிநாதக்குருக்கள் சென்னை – 1977
6. சுப்பிரமண்ய ஆலய நித்திய பூஜாவிதி - ச.குமாரசாமிக்குருக்கள் அச்சுவேலி-1964


# நல்லைக் கந்தனின் மகோற்சவப் பெருவிழா

**யா**ழ் குடாநாட்டிலுள்ள முப்பெரும் படைவீடுகளில் ஒன்றான நல்லையம்பதியில் கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் முருகப் பெருமானின் வருடாந்த மகோற்சவப் பெருவிழா இம்மாதம் (ஆகஸ்ட்) 4 ஆம் திகதியன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது. இலங்கையிலுள்ள கந்தகோட்டங்களுள் தனித்துவம் வாய்ந்த நல்லைக் கந்தன் திருக்கோயில் அமைந்திருக்கும் நல்லூர் பிரதேசம் வரலாற்றுப் பெருமையும் ஆன்மீகச் சிறப்பும் கொண்டது. தமிழ் அரசர்களது ஆட்சிக் காலத்தின்போது நல்லூர் இராசதானியாக அமைந்திருந்தது. தமிழ்த் தெய்வமாக போற்றப்படும் முருகப்பெருமான் எழுந்தருளியிருக்கும் ஆலயத்தைச் சூழ்ந்துள்ள வகையில் மேலும் பல திருக்கோயில்கள் அமைந்திருப்பதும், அத்தகைய புனிதமான பிரதேசத்திலிருந்து ஒலிக்கும் ஆலய மணியோசை இந்து மக்களுக்கு எந்நேரமும் இறை சிந்தனையைத் தோற்றுவித்துக் கொண்டிருப்பதும் தெய்வீகமானது.

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமான் அவதரித்த பெருமைக்குரியது நல்லூர். யாழ்ப்பாணத்து சித்தர் பரம்பரையில் தோன்றிய கடையிற் சுவாமிகள் நடமாடிய புண்ணிய பூமி. இவரது சீடரான செல்லப்பா சுவாமிகள் நல்லூர் தேரடியில் வாழ்ந்தவர். இவரது சீடரான யோகர் சுவாமிகளும் நல்லைக் கந்தன் திருவருள் பெற்றவர். இத்தகைய ஞான பரம்பரையினருக்கும் நல்லூருக்கும் இடையிலான தொடர்பு மேன்மையானது. இத்தகைய தனித்துவ மிக்க நல்லூரிலே நாவலர் பெருமானின் நினைவாக மணிமண்டபம், கலாசார மண்டபம் என்பன முக்கியத்துவம் பெற்று விளங்குகின்றன. இலங்கையின் ஒரேயொரு சைவ ஆதீனமான நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம், துர்க்காதேவி மணிமண்டபம், அகில இலங்கை இந்து மாமன்றம் உட்பட பல சமய கலாசார மன்றங்கள் என்பன நல்லூருக்கு நற்சிறப்பை ஏற்படுத்துகின்றன.

நல்லை நகரிலே இந்து ஆலயங்கள் பல இருந்தாலும் நல்லைக் கந்தன் ஆலயத்திற்கு ஒரு தனித்துவமுண்டு. நல்லைக் கந்தன் மகோற்சவ காலத்தில் நல்லூர் பிரதேசம் மட்டுமல்ல, யாழ்ப்பாணக் குடாநாடே புனிதம்பெற்று தெய்வீகப் பக்திக் கோலமாகக் காட்சிதரும் சிறப்பைக் காணலாம். விரத அநுட்டானத்துடன் பக்தர் கூட்டம் நல்லூர் நாடிவரும். திருநீற்றுப் பொலிவும், தெய்வீகக் காவடிகளும் எல்லையில்லாத பேரின்பத்தைத் தரும் அற்புதக் காட்சிகள். ஆலயத்தின் நேரந்தவறாத பூசை ஒழுங்கு சிறப்பாகச் சொல்லத்தக்கது.

நல்லைக் கந்தனின் வருடாந்த மகோற்சவம் ஆடி அமாவாசையைத் தொடர்ந்துவரும் சஷ்டி திகதியில் ஆரம்பமாவது வழக்கம். அந்த வகையில் இம்மாதம் 4 ஆம் திகதியன்று கொடியேற்றத்துடன் தொடங்கிய இவ்வருட மகோற்சவத் தொடரில் 13ஆம் திகதி மஞ்சத் திருவிழாவும், 21ஆம் திகதி கார்த்திகைத் திருவிழாவும், 23ஆம் திகதி காலை சந்தான கோபாலர் உற்சவமும், அதே தினம் மாலை கைலாசவாகன உற்சவமும், 24ஆம் திகதி காலை கஜவல்லி மகாவல்லி உற்சவமும், அதேதினம் மாலை வேல் விமானத் திருவிழாவும், 25ஆம் திகதி தண்டாயுதபாணி உற்சவம் என்று சொல்லப்படும் மாம்பழத் திருவிழாவும், 26 ஆம் திகதி மாலை சப்பரத் திருவிழாவும், 27ஆம் திகதி காலை இரதோற்சவமும், 28ஆம் திகதி காலை தீர்த்தோற்சவமும் நடைபெற்று, 29ஆம் திகதி நடைபெறும் பூங்காவன உற்சவத்துடன் இவ்வருட மகோற்சவம் நிறைவு பெறுகிறது.

நல்லைக் கந்தன் ஆலயத்தில் புதிதாக அமைக்கப்பட்டு வரும் தெற்கு வாசல் இராஜகோபுரத்தின் கும்பாபிஷேக வைபவம் கார்த்திகை உற்சவ தினமாகிய 21 ஆம் திகதியன்று காலை நடைபெறு கிறது. ஒன்பது தளங்களைக் கொண்டதாக இந்த இராஜகோபுரம் வடிவமைக்கப்பட்டுள்ளது.

யாழ். மண்ணிலிருந்து அ. கனகசூரியர்



# நல்லை முருகன் தேர்த் திருவிழா மகிமை

கலாநிதி குமாரசாமி சோமசுந்தரம்
(துணைத்தலைவர், அகில இலங்கை இந்து மாமன்றம்)

நல்லூர்க் கந்தன் தேரில் அமர்ந்து திருவீதியில் உலா வரும் திருநாள், அடியார்களுக்கு அருள் பாலிக்கும் பெருநாள் ஆகும். அடியார்கள் அலைமோத, அரோகரா ஒலி விண்ணைத் தொட்டு அதிர, ஆலயமணிகள் "டாண், டாண்" என ஓசை ஒலிக்க, மங்கள வாத்தியங்கள் முழங்க, காவடிகள் ஆடி வர, பஜனைகள் பாடிவர, அந்தணர்கள் வேதம் ஓத, திருமுறைப் பண்ணிசை பரவசமூட்ட, அங்கப் பிரதட்சணமும் அடியழித்தலும் பின் தொடர, கற்பூரசோதி ஒளிர, ஆறுமுகப்பெருமான், வள்ளி தெய்வயானை சமேதராய், ஞானசக்தியாகிய வேலினைக் கையிலேந்தியவராய், திருத்தேரில் அமர்ந்து பவனிவரும் திவ்வியத்திருக்காட்சி அழகுமிகு, அருள்மிகு கண்கொள்ளாக் காட்சியாகும்.

இந்த இலங்கை மணித்திருநாட்டினைச் சிவபூமி என்று திருமூலர் குறிப்பிட்டுள்ளார். சிவன் வேறு, முருகன் வேறு அல்லர் என்கிறது கந்தபுராணம். சிவபூமியை முருக பூமி என்றும் அழைக்கலாமல்லவா!

சிவன் என்றால் அன்பு; முருகு என்பது அழகு. ஒழுங்கு எங்கு இருக்கிறதோ அங்கு அழகு மிளிர்கிறது. உலகில் ஒழுங்கையும் அமைதியையும் நிலைநாட்டவே, "ஒருதிருமுருகன் வந்து உதித்தனன் உலகம் உய்ய" என்கிறது கந்தபுராணம். ஒவ்வொரு மனிதனிடத்தும் அன்பும் ஒழுக்கமும், பண்பும் பயனுமாகச் செழித்து ஓங்க வேண்டும் என்பதை உணர்த்துவதாக சிவமுருக தத்துவம் அமைகின்றது. மூர்த்தி, தலம், தீர்த்த விசேடம் பெற்றுத் திகழ்கின்றது. ஆறு அருள் வீடுகளாக இலங்கையில் முருகனுக்கு உரியவை கதிர்காமம், மண்டூர், சிவத்தாண்டி என்பன தென்கிழக்கு கிழக்கிலும்; நல்லூர் செல்வச் சந்நிதி, மாவிட்டபுரம் என்பன வடக்கிலும் உள்ளன.

கதிர்காமம், நல்லூர்த் தலங்கள் மீது அருணகிரிநாதர் திருப்புகழ் பாடல்களைப் பாடிப்பரவியுள்ளமை குறிப்பிடத்தக்கது. அன்னக் கந்தன், அபிடேகக் கந்தன், காவடிக் கந்தன், அழகுக் கந்தன், கலியுகவரதன், கண்கண்ட தெய்வம் ஆக நல்லைக்கந்தன் நல்லூரில் வீற்றிருந்து கொண்டு அருள் பாலிக்கின்றான்.

ஆடிமாதத்து அமாவாசையைத் தொடர்ந்து வரும் சஷ்டித்திதியில் இடம்பெறும் கொடியேற்றத்துடன் நல்லூர்க் கந்தனின் மகோற்சவம் ஆரம்பித்து இருபத்தைந்து நாட்கள் நடைபெறும். இருபத்துநான்காம் நாள் இரதோற்சவமும் இருபத்தைந்தாம் நாள் தீர்த்தோற்சவமும் நடைபெறும். பூங்காவனம் எனும் திருக்கல்யாண உற்சவம் இருபத்தாறாம் நாள் நிகழும்.

"நல்லூரான் திருவடியை
நான் நினைத்த மாத்திரத்தில்
எல்லாம் மறப்பேனடி – கிளியே
இரவு பகல் காணேனடி"
" தேவர் சிறைமீட்ட
செல்வன் திருவடிகள்
காவல் எனக்கா மெடி– கிளியே
கவலையெல்லாம் போகுமெடி"
–சிவயோக சுவாமிகள் அருள் வாக்கு.

நல்லைக் கந்தன் கருணையே கருணை. அறக் கருணை, மறக்கருணை ஆகிய இரண்டையும் புரிபவன் கந்தப்பெருமான்.

"தீயவை புரிந்தாரேனுங் குமரவேள் திருமுன் உற்றால்,
தூயவர் ஆகி மேலைத் தொல்கதி அடைவர்" என உறுதியாகக் கூறுகிறது கந்தபுராணம். தீமைகள் புரிந்தவர்கள் கூட, தமது தவறுகளை உணர்ந்து, முருகன் முன் சென்று வணங்கித்துதித்து நின்றால், அவர்களை மன்னித்துத், தூயவர் ஆக்கி நற்கதியை அருள்பவன். அது முருகனின் அளப்பருங் கருணையாகும்.



சூரபன்மன் அளவிறந்த தீங்குகள் புரிந்தவன். தேவர்களை வருத்தியவன். ஆனால் முருகன் அ வ அழித்தொழிக்கவில்லை. மாறாக, சேவலும் மயிலும் ஆக்கித் தம்முடன் வைத்துக் கொண்டான். முருகனை வணங்குபவர்கள், சேவலையும் மயிலையும் போற்றி வணங்குகின்றனர். கந்தன் கருணாமூர்த்தி ஆவான்.

நல்லூரை வலம் வந்து நாளும் துதிப்போர்க்கு, பழவினைகளின் பந்திப்பு, புதுவினைகளின் பாதிப்பு, பற்றுக்களின் வெந்திப்பு, பல்லாற்றினாலும் நேர்ந்த மந்திப்பு, பகைவர்களின் சந்திப்பு அனைத்தும் நீங்கப் பெற்று விடும். வாழ்வில் தித்திப்பு, இன்பம் எடுத்த நற்காரியங்கள் யாவற்றிலும் சித்தி என்பவற்றை முருகபக்தி ஏற்படுத்தும் வல்லமை உடையது.

"எந்நாளும் நல்லூரை வலம் வந்து வணங்கினால்
இடர்கள் எல்லாம் போமே
அந்நாளில் ஆசான் அருந்தவம் செய்த இடம்
அதுவாதலாலே, அதிசயம் மெத்த உண்டு"
–சிவயோக சுவாமிகள் அருள்வாக்கு.

நல்லூர் முருகன் ஆலயத்தின் ஆதிமூலம், ஈசானத்து வைரவர் சந்நிதி, தேரடி என்னும் மூன்றும் தனித்துவமான விசேடத்துவம் வாய்ந்தவை. ஈசான வைரவர் மிகவும் சக்தியுடையவர். அவர் இங்கு தலநாயகர் நிலையிலுள்ளார். "அவருக்கு விசேடயாகம், பூசை ஆராதனைகள் செய்து அநுஜ்ஞை பெற்ற பின்னரே மஹோற்சவம் மற்றும் புதுக்கருமங்கள் ஆரம்பித்தல் வழக்கமாகும். தேரடி, சித்தர்கள் நிரட்டை கூடிய இடம். அற்புதங்கள் நிகழ்ந்த புனித மண்.

சிவஞானியும் தவயோகியுமான செல்லப்பா சுவாமிகள் வாழ்ந்த திருப்படை வீடு, தேரடியாகும். அவரின் ஞானகுரு யாழ்ப்பாணம் கடையிற் சுவாமிகள். அவரே எங்கள் ஞானியர் பரம்பரையின் மூலவர். நல்லூரில் தமது புனித பாதங்களைப் பதித்தவர். யாழ்ப்பாணம் சிவயோகர் சுவாமிகள் செல்லப்பாச் சுவாமிகளின் நேரடிச் சீடர். செல்லப்பாச்சுவாமிகள் தமக்கு ஞானஉபதேசம் எவ்வாறு நிகழ்த்தினார் என்பதை, சிவயோகர் சுவாமிகள் பின்வரும் நற்சிந்தனைப் பாடல்களில் குறிப்பிடுகிறார்.

''வண்டு பண்செய்யும் வளம் பெருகு நல்லூரில்
மிண்டு மனத்தவரை மேனிலைக்குக் – கொண்டுவரும்
தேரடியில் தேசிகனைக் கண்டு தெரிசித்தேன்
தீரடா பற்று என்றான் சிரித்து.''

''தன்னையறியத் தவமியற்றும் மாதவரை
அன்னையைப் போல் ஆதரிக்கும் ஆறுமுகன்– சந்நிதியில்
தேரடியில் தேசிகனைக் கண்டு தெரிசித்தேன்
தேரடா உள்ளென்றான் சிரித்து.''

''முழுவதும் உண்மை'', ''எப்பவோமுடிந்தகாரியம்,''
''ஒரு பொல்லாப்புமில்லை'', ' நாம் அறியோம்'' போன்ற இச் சித்தர் பெருமக்கள் உதிர்த்த தத்துவமுத்துக்களின் ஊற்றுக்கண் நல்லூர்த் தேரடியாகும். இவை முருகனின் வேல்போன்று ஆழ்ந்து, அகன்ற, நுண்ணிய பொருளைக் கொண்டவை. நல்லூர்த் தேரடி மண் நம்மில் பட்டாலே போதும், எம்மைப் பீடித்துள்ள அழுக்குகளான மலங்கள் நீங்கப் பெற்றுத் திருவருள் கைகூடி விடும்.

தேரடி என்பது நல்லூர்த் தேர்முட்டியைச் சூழ்ந்த பிரதேசம். அங்கு வில்வமரமும், குருந்த மரமும் ஞான நிழலைப்பரப்பிய வண்ணம் உள்ளன. அங்கு அமர்ந்து தவம் செய்பவர் தம் மிண்டுமனத்தை ஓர்மைப்படுத்தி மேனிலைக்கு கொண்டு வரமுடியும் என்பது அநுபூதிமான்களின் கருத்து ஆகும்.

கந்தனின் ஆலயமணி ஓசை, கந்தன் கருணை அலைகளை அகிலம் முழுவதும் பரப்பிய வண்ணம் உள்ளது. எண்ணிறந்த அடியார்களின் உள்ளங்களை, அவர்கள் இப் பரந்த உலகின் எப்பாகங்களில் வாழ்ந்தாலும், கொள்ளை கொள்கின்றது நல்லைக் கந்தனின் அளப்பருங்கருணை. தென்னாடுடைய முருகன் எந்நாட்டவர்க்கும் இறைவனாக உள்ளான். 'யாம் இருக்கப் பயமேன், அஞ்சேல் என அபயம் தந்து எம் துயர் துடைக்கும் பெருவள்ளலாக, கவலை போக்கும் கண்கண்ட தெய்வமாக, கலியுக வரதன் ஆக, மும்மலங்களையும் நீக்கும் மகாமூர்த்தியாக நல்லூர்க் கந்தன் விளங்குகிறான்.

தேர்த்திருவிழா, இறைவனின் சங்காரம் என்னும் அழித்தல் தொழிலைக் குறிக்கின்றது. பிறந்தும் இறந்தும் அல்லல் உறுகின்ற உயிர்களை, அவ்வாறு உலைவுறாது, இறைவன் தடுத்து, ஒடுக்குதலையே அழித்தல் அல்லது சங்காரம் என்பர். உயிர் அழிவதில்லை. அதனால் இறைவனின் சங்கார கிருத்தியம் உயிர்களுக்கு நன்மையே தரவல்லது.

அழிக்கப்படவேண்டியவை நம்மிடமுள்ள ஆணவ முனைப்பும் அதன் வெளிப்பாடுகளான ''நான்' எனும் அகந்தையும், 'எனது' எனும் மமதையும், அவற்றுடன் இணைந்து காணப்படுகின்ற பேராசை, சினம், கடும் பற்று, செருக்கு, கர்வம், காம உணர்ச்சிகள், பகைமை, வெறுப்பு, வஞ்சம் என்பனவுமாகும். அவ்வாறு நல்வாழ்விற்கு ஒவ்வாதனயாவும் அழியும் பட்சத்தில், நல்லன வெல்லாம் தோன்றி வளர்கின்றன. தேர்த்திருவிழா உணர்த்தும் இறைவனின் அழித்தல் தொழில் ஆக்கத்திற்காகவே என்பதை உணர்ந்து கொள்ளுதல் வேண்டும். இறைவன் ஐந்தொழில்களையும் நடத்துவது, உயிர்கள் மீது கொண்ட அளப்பருங்கருணையினால், அவற்றின் ஈடேற்றத்தின் பொருட்டேயாகும்.

தேரில் சுவாமி தரிசனம் செய்தலால் பாவங்கள், பவவினைகள் தொலைகின்றன. பிறவிகள் தோறும் தொடரும் பாவப்பதிவும் அழிக்கப்பட்டு விடுகின்றது; ஆன்ம ஈடேற்றமும் உறுதியாகி விடும்.

மகோற்சவம் என்பது உத்தமயாகம் ஆகும். நைமித்தியக் கிரியைகளுள் அடங்குகின்றது. இதன் மூலம் ஆலயத்தின் தெய்வசாந்நித்யம் பெருகுகிறது. மகோற்சவம் நடைபெறுங் காலங்களில் தினமும் ஆலயத்திற்குச் சென்று சுவாமி தரிசனம்செய்தலும் திரு உலாக்காட்சியைக் காணலும் உத்தமம் ஆகும். ஆங்கு இயன்ற திருத்தொண்டுகளையும் செய்தல் வேண்டும். ஆலயத்தில் செய்யத் தகுந்தவற்றைச் செய்தலும்; செய்யத்தகாத குற்றங்களை விலக்குதலும் புண்ணியங்கள் ஆகும். ஆலயத்தில் தூய்மையையும் அமைதியையும் பேணுதல் மிகச் சிறந்த தொண்டு என்பதை உணர்தல் வேண்டும் குளிக்கப்போய் சேறு பூசிக்கொள்ளுதல் ஆகாது அல்லவா!

தேர் ஏறிச் சுவாமி வெளிவீதிகளில் வலம் வரும் போது, கோயிலுக்குச் சென்று வழிபாடு செய்ய முடியாத நிலையில் உள்ள வயோதிபர், நோயாளிகள், கற்பிணிப்பெண்கள். குழந்தைகள், ஆசௌசம் உள்ளவர்கள் போன்றோர், உற்சவமூர்த்தியைக் கண்குளிரக் கண்டு நேரில் தரிசித்துத் திருவருளைப் பெற்றுக்கொள்ளும் அரிய வாய்ப்பினைத் தேர்த்திருவிழா அவர்களுக்கு வழங்குகின்றது. ஊர்மக்கள் ஒன்றுபடவும், உறவுபேணவும், ஆன்மிகம் வளர்க்கவும், சேவையில் ஈடுபடவும் தேர்த்திருவிழா வழிவகுக்கின்றது. தீட்சை பெறாதோர், தேரில் உற்சவமூர்த்தியைத் தரிசிப்பதால், சாம்பவதீட்சையைப் பெற்றுக் கொள்ளும் வாய்ப்பும் கிடைக்கிறது. தேர்த்திருவிழா அந்த வகையில் முக்கியத்துவம் பெறுகின்றது.

நல்லூர் இரதோற்சவத்தின் உற்சவமூர்த்தியாக விளங்குபவர் ஆறுமுகப்பெருமான். கஜவல்லி, மகா வல்லி சமேதராக எழுந்தருளும் அருள் நிறைந்த அழகுக் காட்சி அற்புதமாக இருக்கும். உலகினை அழகு செய்வதற்காகவே தேரில் திக் விஜயம் செய்கிறார்.

நல்லைக் கந்தன் ஆலயம் அழகுச் சிறப்பினையும் ஓர் அழகுப் பாரம்பரியத்தையும் கொண்டு விளங்குகிறது. முருகு என்றால் அழகு. எல்லாமே அழகாக, நேர்த்தியாக, சீராக, செம்மையாக, ஒழுங்காக, நீதியாக, உண்மையாக, நன்மையாக இருக்கவேண்டும் என்னும் தத்துவத்தை உலகிற்கு உணர்த்துபவன் முருகன் – அழகன் – குமரன். இவ்வாறு உலகினை அழகு செய்பவன் முருகன். அதற்காகவே தோன்றினவன் முருகன். அழகுக் கந்தனின் அருட்பொலிவும் தெய்வசாந்நித்யமும், நல்லூரின் அழகுப் பாரம்பரியத்துக்கு காரணம். அத்துடன், ஆலயத்திலும் அதன் சூழலிலும் நிலவுகின்ற தூய்மை; ஆலய நித்திய, நைமித்தியப் பூசை ஆராதனைகளில் நேரந்தவறாமை; ஆலய முகாமைத்துவச் சிறப்பு; அர்ச்சகர்கள், தொண்டர்கள், வழிபடுநர்கள் ஆகியோரின் ஒருமுகப்பட்ட ஒத்துழைப்பும் ஒழுங்கும் என்பன அழகுக்கு அழகு செய்வனவாய் அமைகின்றன. ஓர் அழகுப் பாரம்பரியம் நல்லூரில் நிலையூன்றியுள்ளது.

''கோபுரதரிசனம் கோடிபுண்ணியம்'' என்றும், ''கோபுரதரிசனம் ''பாவ விமோசனம்'' என்றும் கூறப்படுகிறது. ஆலயத்தின் கிழக்கு வாயிலில் கோபுரம் ஏற்கனவே உள்ளது. தற்பொழுது ஆறுமுகசுவாமி வாயிலில், தெற்குப்புறமாக ஒன்பது தளங்களை கொண்ட இராஜ கோபுரம் அமைக்கப்பட்டுள்ளது. இவற்றுடன் மணிக்கூட்டுக் கோபுரங்களும் அணிசெய்கின்றன. ஆலயத்தின் உட்பிரகாரச் சுவர்களிலே தீட்டப்பெற்றுள்ள வர்ண ஓவியங்களில்

நடராஜப் பெருமானின் நூற்றெட்டுத் தாண்டவங்களும், ஆறுபடை வீடுகளும், முருகனின் அருட் செயல்களும் சித்தரிக்கப்பட்டுள்ளன.

நல்லைக் கந்தனின் தேரின் வடம் பிடிப்பதென்பது மிகப்பெரிய காரியம். வடம் பிடித்துத் தேர் இழுப்பவர்கள் பெரும் பாக்கியசாலிகள் ஆவர். வடம் பிடிப்பவர்கள் முருகப் பெருமானின் திருவடிகளில் இடம் பிடித்தவர்கள் ஆகிவிடுகின்றனர்.

''உடம்பிடிச் செங்கைக் குமரேசவள்ளல் உருள் நெடுந்தேர்
தடம் பிடித்தோங்குந் திருநல்லை வீதிதனில் வருமால்
வடம் பிடித்து ஈர்த்திட வம்மின்கள், தொண்டரெலாம்
இடம் பிடித்திட்டிருப்பீர் வீடு நல்கும் இணையடிக்கே.''

என நவாலியூர் சோமசுந்தரப் புலவர், தாம் பாடியநல்லையந்தாதியில் நல்லூரான் தேரின் வடம் பிடித்து இழுப்பதினால் ஏற்படும் பெரும் பேற்றினைக் குறிப்பிடுகிறார்.

நல்லூர்க் கந்தன் தேர் என்றால் ஊர், நகரம், நாடு ஏன், உலகமே திரண்டு வந்து விடும். எங்கும் புனிதம், பக்தி, பரவசம், அழகு நிறைந்து விடும்.

அஞ்சுதலை நீக்குபவன், ஆறுதலை அளிப்பவன் ஆறுமுகன். அந்த ஆறுமுகன் தேரில் ஆரோகணித்துத் தரும் காட்சி தெய்வீகம் நிறைந்தது. ஆறுமுகன், ஈசானம், தத்புருஷம், அகோரம், வாமதேவம், சத்தியோஜாதம் ஆகிய சிவனின் ஐந்து முகங்களுடன் அதோமுகமும் சேர்ந்து ஆறுமுகங்களைப் பெற்றுள்ளான்.

சிவபரம் பொருளின் பேரருளே ஆறுமுகக் கடவுளின் திருப்பெருவடிவம் என்றும்; இறைவனின் ஆறுகுணங்களான முற்றுணர்வு, வரம்பிலின்பம், இயற்கையுணர்வு, தன்வயமுடைமை, பேரருள், வரம்பிலாற்றல் என்பனவே ஆறுமுகங்களாக விளங்குகின்றன என்றும் நூல்கள் கூறும்.

சத்தும் சக்தியும் நிறைந்தவன் முருகன். இச்சாசக்தி, கிரியாசக்தி, ஞானசக்தி ஆகியவற்றை முறையே வள்ளி தெய்வயானை ஆகிய இருதேவியர்களும்; முருகன்கைவேலும் குறித்து நிற்கின்றன. முருகனுக்குரிய மந்திரம் ''சரவணபவ'' என்னும் ஆறெழுத்து மந்திரம். சடாட்சரம் என அம்மந்திரத்தை அழைப்பர்.

தேர் பண்டைக் காலம் முதல் தமிழர் பண்பாடு உள்ளிட்ட இந்தியப் பண்பாட்டில் இடம் பெற்று வருகிறது. நாற்படைகளுள் தேர்ப்படையும் ஒன்றாகும். கிருஷ்ணன், அர்ச்சுனனின் தேர்ச்சாரதியாக நின்று போதித்ததே பகவத்கீதை. பண்டைய தமிழகத்தில், படர்வதற்கு கொழுகொம்பு இன்றிவாடிய முல்லைக் கொடிக்குத் தமது தேரையே வழங்கிய பாரிவள்ளலை தமிழ் இலக்கியம் போற்றுகின்றது. மணிமேகலையில் முருகன் தேர்த்திருவிழாபற்றிய குறிப்பு உள்ளது. இதிகாசங்கள், புராணங்களில் இறைவனுக்கும் அரசர்களுக்கும் தேர் ஊர்தியாக விளங்கியமை பற்றிய செய்திகள் காணப்படுகின்றன.

சிவபெருமான் திரிபுரதகனம் செய்வதற்குத் தேரில் சென்ற வரலாறு பற்றிப் புராண நூல்கள் கூறுகின்றன. பூமியைத் தேராகவும், சூரிய சந்திரர்களைச் சக்கரங்களாகவும், வேதங்களைக் குதிரைகளாகவும், பிரம்மாவைச் சாரதியாகவும் சிவம் அமர்த்திக் கொண்டார் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இராமாயணத்திலே, இராமனின் தந்தை தசரதன், பத்துத் திக்குகளிலும் தேர் ஓட்டிப் பேர் பெற்றவன் என்ற வகையில் தசரதன் என அழைக்கப்பட்டான் என்று செய்தி தரப்பட்டுள்ளது.

இந்தியாவில் பயணம் மேற்கொண்ட பாஹியன் என்னும் சீனயாத்திரிகன், அங்கு தான் தேர்த் திருவிழாவை நேரில் தரிசித்தமை பற்றிய தகவலைத் தனது நூலில் குறிப்பிட்டுள்ளான்.

கடோப உபநிடதத்தில் மனிதனின் உடலைத் தேர் ஆகவும், உயிரைத் தலைவனாகவும், ஐந்து புலன்களைக் குதிரைகளாகவும், புத்தியைத் தேரோட்டியாகவும், புலன்கள் பற்றுகின்ற விடயங்களைத் தேரோடும் வீதிகளாகவும் வருணிக்கும் குறிப்பு உள்ளது.

தேர்த்திருவிழாக்கள், சோழர்காலத்தில் ஆலயங்களில் இடம் பெற்றமை பற்றிச் சாசனங்கள் குறிப்பிடுகின்றன.

நல்லைக் கந்தனின் தேர், திருவீதிவலம் வந்து, குறித்த நேரத்தில் தேர் முட்டியை அடைகின்றது. இது அற்புதமான நிகழ்வு. ஆறுமுகப் பெருமான் பச்சை சாத்தித் தேரிலிருந்து இறங்கி வரும் அழகு நிறைந்த காட்சி பசுமை நிறைந்ததாக விளங்கும். பச்சை சாத்தி பன்னீரில் நனைந்து, குளுமையாக, வெற்றிக் களிப்போடு எழுந்தருளுவதன் மூலம் உலகின் சகல உயிரினங்களுக்கும், பசுமையும் செழிப்பும்; வாழ்வும் வளமும்; மகிழ்ச்சி மரணமிலாப் பெருவாழ்வும் அருளுகின்ற சதாசிவ மூர்த்தியும் தானே என்பதை உணர்த்துவதாக அமைகின்றது.

## நல்லூரிற் கந்தா அருள்வாய்!

ஞானவித்தகர், அருட்கவி சீ. விநாசித்தம்பி

முன்னவனே, யாழ்ப்பாண நகர்நல்லூரில்
முதியதமிழ் வேலேந்தி வீற்றிருக்கும்
மன்னவனே கந்தப்பா மயிலில் ஏறி
வலம்வள்ளி இடம்தெய்வ யானையோடு,
பின்னமிலா அடியாரின் குறைகள் தீர்க்கப்
பிரகாச தினகரனாய்க் காட்சி நல்கும்
அன்னபரி பூரணியின் மகனே எங்கள்
அல்லலெலாம் தீர்க்கமன மிரங்குவாயே.

எத்தனையோ மக்கள்வாழ் விடங்களின்றி
எத்தனையோ மக்கள்உண வேதுமின்றிப்
பித்தனைப்போல் வதிவிடமில் லாதுவாழும்
பெற்றியினைக் கந்தாநீ அறிகிலாயோ,
பத்தியுடன் ஐயாநின் புகழைப் பாடிப்
பகைவறுமை யில்லாத வாழ்வுகாண,
உத்தமராய்ச் சமாதான நலம் சிறக்க,
ஓம் முருகா நீகருணை செய்வாய் போற்றி

மற்றவர்க்குத் துயரிழைக்கா நீதிவாழ்வும்
மதுகளவு பொய்சூது கருதாநெஞ்சும்
பெற்றவரைப் பெரியோரைப் பேணும் பண்பும்
பேசுமறை யாகமத்தை மதிக்கும் போக்கும்
கற்றவரின் தெளிவுரைகள் உணரும் நோக்கும்
காயம்மனம் வாக்கினால் தருமம் பேணும்
நற்றவத்தில் நின்னடியைப் பிடிக்கும் பேறும்
நல்லூரிற் கந்தாநீ அருள்வாய் போற்றி

*[நன்றி: நல்லைக்குமரன் மலர் – 2003]*

# கலியுக வரதன் ஆட்சிபுரியும் இடம் நல்லூர்



கலாபூஷணம் மயில்வாகனம் சர்வானந்தா

தமிழ்த் தெய்வமாம் முருகனுக்கு தமிழ் மக்கள் வாழுகின்ற இடமெலாம் கோயில்கள் எழுப்பப்பட்டன. முருகனுக் கும் தமிழருக்கும் இடையிலுள்ள தொடர்பு வரலாற்றுக்கும் அப்பாற் பட்டதெனலாம். இலங்கைத்திருநாட்டிலே அழகன் முருகன் கதிர்காமத்திலும், நல்லூர். செல்வச்சந்நிதி, மாவிட்டபுரம், மண்டூர், சித்தாண்டி, வெருகல் முதலிய புண்ணிய தலங்களிலும் கோயில்கொண்டு அருள்பாலித்து வருகின்றான்.

யாழ்ப்பாண மண்ணிலே சைவத்தமிழ் மரபின் குன்றாக விளங்குவது நல்லூர். அதுமட்டுமல்ல தமிழ் மன்னர்களின் இராஜதானியாகப் போற்றப்படுகிறது. சைவமக்களும், சைவமன்னர் களும் வணங்கிய கீர்த்திவாய்ந்த முருகன் ஆலயச் சிறப்பினை நல்லூர் பெற்றுவிளங்குகிறது. தமிழ் நாட்டை அரசர்கள் பலர் தம் பெயர் விளங்குமாறு பல நல்லூர்களை உருவாக்கினார்கள். பாண்டிநாட்டில் வீரபாண்டிய நல்லூர், அரிகேசரிநல்லூர், மானாபரண நல்லூர், செய்துங்க நல்லூர் முதலிய ஊர்கள் பாண்டிய குலத்தைச் சேர்ந்த மன்னர் பெயரைக்குறித்து நிற்கின்றன. இலங்கையிலும் நல்லூர் என பெயருடைய கிராமங்கள் உள்ளன.

யாழ்ப்பாண நல்லூரை நினைக்கின்றபோது அங்கே நல்லைக்கந்தன் ஆலயம் தான் எம்மனக்கண்முன் தோன்றுகின்றது.

*வீரவேல் தாரைவேல் விண்ணோர் சிறைமீட்ட*
*தீரவேல் செவ்வேள் திருக்கைவேல் – வாரி*
*குளித்தவேல் கொற்றவேல் சூர்மார்பும் குன்றும்*
*துளைத்தவேல் உண்டே துணை.*

முருகனுடைய கையிலே இருப்பது வேல். இது ஞானசக்தி வேலாகும். அஞ்ஞானப் பகையை வெல்ல ஞானவேல் தாங்கியுள்ளவன் முருகன். தனிவழி நடக்கும் பக்தர்களுக்கு வலப்புறமும், இடப்புறமும், முன்னும் பின்னும் எங்குமாகி இரவு பகலில் துணையாகி நிற்பது வேல் என்கிறார் அருணகிரிநாதர். அச்சம் அகற்றும் அயில்வேல் என்கிறார் குமரகுருபரர். எங்களுக்கு ஒப்பற்ற துணையாக விளங்குவது வேல். அந்த வேலை வணங்குவதே எமக்கெல்லாம் வேலை என துன்பம் துடைக்கப்பெற்ற நக்கீரர்,

*குன்றம் எறிந்ததுவும் குன்றப்போர் செய்ததுவும்*
*மன்றம் அமரர்இடர் தீர்த்ததுவும் – நின்றென்னை*
*கைவிடாது நின்றதுவும் கற்பொதும் பிறகாத்துப்*
*மெய்விடா வீரன் கைவேல்* என்கிறார் .இத்தகு வரலாற்றுப் பெருமைகளைத் தன்னகத்தே கொண்டவன். வெற்றிவேலே நல்லூர் கந்தசுவாமி ஆலய மூலஸ்தானத்தில் உள்ளது. முருகப் பெருமானிடத்திலே அமையும் கருணை அனைவராலும் விரும்பி அனுபவிக்கப்படுவதாகும்.

யார்யாருக்கு எவ்வாறெல்லாம் அருள்புரிய வேண்டுமென்ற கருணை உள்ளம்கொண்டவன் கலியுக வரதன் கந்தக்கடவுள். அடியவர்கள் வருந்தியழைக்கும் போதெல்லாம் வேலோடும், மயிலோடும் தோன்றி அருள்புரிபவன் ஆறுமுகன்.

தமிழ்க் கடவுளாம் முருகக் கடவுளை செந்தமிழாலும் பாடி வழிபடலாம். கொடுந்தமிழாலும் பாடலாம். ஏனெனில் தமிழாலே ஏசி, நிந்தித்து பாடினாலும் அதனைப் பெருமனதோடு ஏற்றருளுபவன் முருகன். இதனாலேயே 'முத்தமிழால் வைதாரையும் அங்கு வாழவைப்போன்' என்கிறார் அருணகிரிநாதர். செயலாலே தீயவை புரிந்தாரேனும் குமரவேள் திருமுன்னுற்றால் தூயவராகி மேலைத்தொல்கதி அடைவர்' என்று கந்தபுராணம் பாடிய கச்சியப்ப சிவாச்சாரியார் கூறுகின்றார்.

சிவபெருமானது நெற்றிக்கண்ணிலேயிருந்து அக்கினிப் பொறியாகச் சரவணப்பொய்கையிலே உதித்தவன் குமரன். உமையவள் பரிந்தெடுத்து அணைத்து, தாயாகி நின்று இத்தரணி வாழ்வதற்குரிய கந்தனெனும் மைந்தனைத் தந்தருளினாள்.

இத்தகு பெருமைகளைத் தன்னகத்தே கொண்ட நல்லைக் கந்தன் ஆலய வருடாந்த மஹோற்சவம் (04.08.2011) வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. அதனைத் தொடர்ந்து திருவிழா ஆரம்பமாகி 25 தினங்கள் சிறப்பாக நடைபெறும். இலங்கையின் நாலாபக்கமும் இருந்து அடியார்கள் வள்ளி தெய்வானை சமேத முருகப்பெருமான் வீதிவலம் வரும் காட்சியைக்காண வந்துசேர்வார்கள். சிறுவர், சிறுமியர், இளைஞர், யுவதிகள், பெரியோர்கள், வயோதிபர் என பெருந்திரளாக சைவமரபுக்கேற்ப ஆடைகள் அணிந்து அணியணியாக வீதியெங்கும் திரண்டு ஆலயம்நோக்கிச் செல்வர். கந்தன் அருள்வேண்டி யாழ் வீதியெங்கும் அடியார்கள் நல்லூரானைத்தேடி நடைபயிலும் காட்சி திருவிழாக்காலங்களில் கண்கொள்ளாக்காட்சி. நல்லூரானின் திருவிழாக்கள் அனைத்துமே அடியார்கள் மனதைக் கொள்ளை கொள்பவை. ஆனாலும் குறிப்பிட்ட திருவிழாக்களில் நாம் சன நெரிசலில் மூச்சுத்திணறி விடுவோம். கொடியேற்றத்தின் பின் பத்தாம்திருவிழா மஞ்சத்திருவிழா, அழகிய மஞ்சத்திலமர்ந்து நல்லூர்க்கந்தன் அடியார்களுக்கு அருள்பாலிப்பான். நல்லூர்த் திருவிழாவிலே பதினேழாம் திருவிழாவன்று முத்துக்குமார சுவாமியும் வள்ளியம்மனும் மயில்வாகனங்களிற் பூச்சப்பரத்தில் வீதிவலம் வந்து அடியார்களுக்கு காட்சிதருவார்கள். பத்தொன்பதாவது திருவிழாவன்று முருகன் கைலாய வாகனத்தில் எழுந்தருளி காட்சிகொடுப்பார். தசக்கிரீவன் தன் இருபது கரங்களாலும் கைலாசகிரியைப் பெயர்க்க முயன்றபோது, அவனது உடல் மலையின்கீழ் நசுங்கியதையும், பின்னர் பரமசிவன் அவனுக்கு அருள்புரிந்ததையும், ஞாபகமூட்டும் வகையில் அமைந்த கைலாசவாகனத்திலே முருகப் பெருமான் பக்தர்களுக்கு அருள்புரியும் காட்சி கண் கொள்ளாக்காட்சியாகும்.

இருபத்திரண்டாம்திருவிழா 'மாம்பழத்திருவிழா'. இதனை தண்டாயுதபாணி உற்சவம் என்றும் அழைப்பர். இக்கோயிலில் இவ்விழா மிகவும் சிறப்பாக நடைபெறும். ஆதலால் இதனைக்

காண்பதற்கு அடியார்கள் அலைமோதுவர். இருபத்திமூன்றாம் நாள் சப்பரத்திருவிழா. மூன்று வாசலுள்ள அழகிய பெரிய சப்பரத்தில் வேற்பெருமானும், வள்ளியம்மனும், தெய்வானையம்மனும் மூன்று வெள்ளை இடபவாகனங்களில் எழுந்தருளி பக்தர்களுக்கு காட்சி கொடுப்பர். இருபத்தி நான்காம் நாள் தேர்த்திருவிழா இடம்பெறும். தூரத்து இடங்களிலிருந்தும் வெளிநாடுகளிலிருந்தும் சப்பரம் பார்க்கவரும் அடியார்கள் அடுத்த நாட்காலை நடைபெறும் தேர்த்திருவிழாவின் போது ஆறுமுகப்பெருமானை தொழுது செல்வதற்கு கோயில் வீதிகளிலும் மடங்களிலும், அண்மையிலுள்ள உறவினர், நண்பர்கள் வீடுகளிலும் தங்குவர். முருகன் ஆலயத்துக்கு அண்மையிலுள்ள வீடுகளெல்லாம் மடங்கள்போலவே காட்சியளிக்கும்.

விடியற்காலையில் நானாதிசையிலிருந்தும் பக்தர்கள் நல்லூர்க்கந்தன் ஆலயத்தை நோக்கி வந்து சேர்வார்கள். சிலர் தம் நேர்த்திக்கடனை தீர்க்கும் பொருட்டு வீட்டிலிருந்தே அங்கப் பிரதட்சணம் செய்துகொண்டு முருகன் சந்நிதானத்தையடைவர். மேலும் சிலர் ஆட்டக்காவடி, தூக்குக்காவடி, பாற்காவடி எடுத்துவருவர். காலையில் பூசை, அபிஷேகம், என்பன காலக்கிரமந்தவறாது நடைபெறும். பின்னர் நல்லூர் ஆலயத்திலுள்ள ஆறு அசையா மணிகள் ஒருங்கே ஒலிக்க, முருகப் பெருமான் தேரேறி வீதி உலா வருவார். தேர் வீதி வரும்பொழுது அங்கப் பிரதட்சணஞ் செய்து கொண்டும், பெண்கள் அடியழித்துக் கொண்டும் பின் தொடர்வார்கள். இவர்களோடு பஜனை செய்த வண்ணம் அடியார் கூட்டம் தேரைப் பின்தொடரும். தேர் வடத்தை தொட்டிழுப்பதில் பலர் கலந்து கொள்வார்கள். வீதியெங்கும் எல்லா மூலைமுடுக்குகளிலும் தேரில் உலாவரும் கந்தனைத் தரிசிக்க முண்டியடிக்கும் காட்சி கண்களில் நீரைவரவழைக்கும். தேர் வீதிவலம் வந்து பின்னர் சண்முகப் பெருமான் பச்சை சாத்தி தேரிலிருந்து திருக்கோயிலுக்கு திரும்பும் காட்சி பக்தர்கள் மனதை உருகவைக்கும் அற்புதக்காட்சி. இரவு வேற்பெருமான் வள்ளி தெய்வானை அம்மையார் சமேதராக பெரிய இடப வாகனத்தில் வீற்றிருந்து தேரடிபார்க்கும் பாவனையில் வீதிவலம் வருவார்.

இருபத்தைந்தாம் நாள் தீர்த்தோற்சவம் நடைபெறும். விநாயகப் பெருமான் வெள்ளி எலிவாகனத்திலும், வேற்பெருமான் தங்கமயில்வாகனத்திலும், வள்ளியம்மன் வெள்ளி அன்னவாகனத்திலும், தெய்வானையம்மன் வெள்ளி மயில்வாகனத்திலும், சண்டேசுவரர் வெள்ளி ரிஷபவாகனத்திலும் தீர்த்த மண்டபத்திற்கு எழுந்தருளுவர். ஐந்து மூர்த்திகளும் ஐந்து வாகனங்களில் ஆரோகணித்து ஒரே சமயத்தில் புறப்பட்டு பக்தர்களுக்குக் காட்சிகொடுத்து தெப்பக்குளத்துக்கு செல்லும் காட்சி பரவசத்தை ஏற்படுத்தும்.

அடுத்த நாள் மாலை கோயில்நந்தவனத்தில் நடைபெறும் பூங்காவனத் திருவிழாவைக்கண்டு தொழுவதற்கும் பெருந்தொகையான பக்தர்கள் வந்து சேர்வார்கள். திருக்கல்யாண வைபவம் மிகச்சிறப்பாக நடைபெறும். அத்தோடு நல்லைப் பெருமானின் மகோற்சவம் இனிதே நிறைவுபெறும்.

## நல்லைக் கந்தன் வாழி வாழி!

- ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் -

அருணவிக சிதகமல மலரைநிகர் தருவதன
மாறுமநு தினமும் வாழி
அமரர்தொழு கனகசபை நடனமிடு பரமசிவ
னருண்முருகர் சரணம் வாழி
கருணைமழை பொழிபனிரு நயனமதி னொடுவலிய
கவினுலவு தோள்கள் வாழி
கனகிரியை யிருபிளவு படவுருவு நெடியவயில்
கரதலத் தினிது வாழி
வருணமர கதவழகு திகழவரு மவுணனெனு
மயிலினொடு சேவல் வாழி
வனசரர்த மரசனுத வியகுறமி னொடுகடவுண்
மயிலிவர்க டினமும் வாழி
தருணமிது வெனவமரர் பணிநல்லை யமர்கந்தர்
தமதடியர் நிதமும் வாழி
சகசநிரு மலபரம சுகிர்தபரி பூரண
சடக்ஷரம் வாழி வாழி.

*(நன்றி : இலங்கையின் புராதன சைவாலயங்கள்)*



## நல்லூரின் அருள் வேலவா!

- சைவப்புலவர் க. நித்திய தசீதரன் -

தரணியில் போற்றிடும் தங்க வேலவா !
தஞ்சமென்றே தொழுதிட வேலவா!
தங்க மயில் ஏறிவரும் வேலவா!
தயைகாட்டி அருளும் வேலவா!
தாளாத கீர்த்தியை தந்திடும் வேலவா!
தண்ணொளி வீசிடு ஞானவேலவா!
தன்னிகரில்லா மூவுலகு வேலவா!
தன்னாட்சியாய் நல்லூரின் அருள்வேலவா!

# அழகன் முருகன் உறையும் அற்புத நல்லூர் பதி

- சிவநெறிக் கலாநிதி இராசையா ஸ்ரீதரன் -

உலகெலாம் நிறைந்து விளங்குகின்ற எல்லாம் வல்ல பரம்பொருளான முருகன் வழிபடும் அடியார்களின் குறை தீர்க்கும் கந்தப்பெருமானாக யாழ்ப்பாணத்து நல்லூரிலே கோயில் கொண்டு எழுந்தருளி திருவருள் பாலிக்கின்றான்.

இந்த முருகன் எழுந்தருளி வீற்றிருக்கும் நல்லையம்பதி ஒரு புனிதமும் மகிமையும் நிறைந்த நல்லதொரு திருப்பதியாகும். சைவமும் தமிழும் தழைத்தோங்கி வளரத் தம்மையே அர்ப்பணித்த பெருமகன் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவதரித்த சிறப்புமிகு இடமாகும். இந்த நல்லூர் என்ற தலம் முருகன் உறையும் சிறந்ததொரு இடமாதலால் வரலாற்றுச் சிறப்புடன் மிளிர்கின்றது.

கீர்த்திமிக்க அரசன் சங்கிலியன் என்பான் யாழ்ப்பாணத்து நல்லூரையே இராசதானியாகக் கொண்டு ஆட்சி செலுத்திய படியால் அது இன்றும் பெருமையுடன் விளங்குகின்றது. முருகன் எழுந்தருளி அருள்பாலிப்பதால் இங்கு அடியார் திருக்கூட்டம் தினமும் அலைமோதுகின்றது. முத்தமிழால் வைதாரையும் வாழவைக்கின்ற அழகன் முருகன் இந்த நல்லூரிலே அலங்கார ரூபனாக அடியார்க்கு அருள் புரிகின்றான்.

கதிர்காமத்திலே அருள் கந்தன்; செல்வச்சந்நிதியிலே அன்னதானக் கந்தன்; இந்த அழகுநகர் நல்லூரிலே அலங்காரக் கந்தன். இந்த நல்லூர்க் கந்தசுவாமி கோயிலிலே வருடாந்த மகோற்சவம் தொடங்கி விட்டால் போதும், இந்த நல்லூரே விழாக்கோலம் பூண்டு ஆனந்தக் கோலாகலமும் ஆரம்பமாகிவிடும். எங்கு திரும்பினாலும் "முருகா முருகா" என்ற பக்திமயமான கோஷம் கேட்டுக்கொண்டேயிருக்கும். திருநீறு, சந்தனம் தரித்த மேனியராய் திருவாயிலே முருகநாமத்தை உச்சரித்த வண்ணம் பக்தி மணம் கமழ வீதி வலம் வரும் அடியார் திருக்கூட்டத்தை இங்கன்றி வேறு எங்குமே காணமுடியாது.

கலியுகவரதனான கந்தப்பெருமான் இந்த நல்லூரிலே தினமும் திருவீதி வலம் வருகின்ற அலங்காரக் காட்சி பக்தி பூர்வமானது. ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு விதவிதமான அழகுத் திருக்கோலம் காட்டிய கந்தப் பெருமான் கருணை வேல் வள்ளி தெய்வானை சகிதம் காட்சிதரும் அழகை கண்டு தரிசிப்பதற்கு பூர்வஜென்ம புண்ணியஞ் செய்திருக்க வேண்டும். இதனால் தானோ என்னவோ அந்த அருணகிரிநாதரும் "சேலார் வயற் பொழில் செங்கோடனைச் சென்று கண்டு கைதொழ நாலாயிரம் கண் படைத்திலனே அந்த நான்முகனே" என்று அழகாக வர்ணிக்கின்றார். அழகன் முருகன் அலங்காரக் காட்சி தெவிட்டாத தித்திக்கும் தேனமுத காட்சியன்றோ!

ஈழத்தில் எத்தனையோ முருகன் ஆலயங்கள் இருந்தும் இந்த நல்லூரில் மட்டும் அடியார் கூட்டம் அலை மோதக் காரணம் என்ன? இஃது சிந்திக்க வேண்டிய ஒரு விடயம். வேண்டுவார் வேண்டுவதையெல்லாம் ஈபவனாகிய கந்தன் இங்கு வந்து வழிபாடியற்றி அழுது, தொழுது, அரற்றிக் கண்ணீர் வடித்துக் கைகூப்பி வணங்கி தம்முடைய குறைகளைச் சொன்னவுடன் அவற்றையெல்லாம் அழகாக அவன் வெகுவிரைவில் நிறைவேற்றி வைத்து விடுவான். நம்பி வந்தவர்களை நல்லைக் கந்தன் கைவிட மாட்டாடன். நினைத்த காரியங்களை நினைத்தப்படியே நிறைவேற்றி வைத்து விடுவதனால் அந்த அடியார்கள் நன்றியுணர்வோடு நல்லூரை நாடித் தேடி ஓடிக் கூடி வருகின்றார்கள்.

நல்லையம்பதி உறையும் கந்தன் கருணை புரிந்து எல்லோருக்கும் நல்வாழ்வை அருள்கின்றான். அதனால்தான் இங்கே முண்டியடித்துக்கொண்டு முருகன் அடியார்கள் முருகனை கும்பிட வருகிறார்கள். கலியுகத்திலே கண்கண்ட தெய்வம் முருகன். அவனுடைய பேரின்பத் திருவருட்கடாட்சத்திலே மூழ்கித் திளைப்பதற்கு நாம் கொடுத்து வைத்திருக்க வேண்டும்.

எமது துன்பந்துடைக்கும் கந்தனை நாம் பலவிதத்திலே வணங்கலாம். முருகனுக்குத் தொண்டு செய்யலாம்; அவனுடைய பெரும் புகழைப் பாடிப் பணியலாம். இதையே அருணகிரிநாதர் மிகவும் அழகாகச் சொல்கிறார்.

"ஆடும் பரிவேலணி சேவலெனப்
பாடும் பணியே பணியாய் அருள்வாய்,
தேடும் கயமா முகனைச் செருவிற்
சாடுந் தனியானை சகோ தரனே"

என்பது கந்தரனுபூதியின் முதற்பாடல். முருகப்பெருமான் பல்வேறு நாமங்களையுடையவன். அவனுடைய நாமத்தைச் சொல்லி நித்தம் வழிபட்டால் யமன் கூடக் கிட்டவரமாட்டான் என்பது அருணகிரியார் கூற்று.

குமரன், கந்தன், கடம்பன், குகன் , சரவணன், வேலன், கார்த்திகேயன், ஆறுமுகன், வேலவன், வள்ளிமணாளன், சுவாமிநாதன், பழநியாண்டி, தெய்வானைலோலன், புள்ளிமயில் வாகனன் என்று அவனுடைய நாமங்களை அடுக்கிக் கொண்டே போகலாம். வாழ்த்த வாயும், நினைக்க மட நெஞ்சும், தாழ்த்தச் சென்னியும் தந்த தலைவனாகிய முருகனை நாம் வாயார, மனமார, நெஞ்சார வாழ்த்தி வணங்கிப் பாடித் துதிக்கலாம். 'பாடும் பணியே பணியாய் அருள்வாய்' என்பதற்கிணங்க நாம் எமது கண் கண்ட கடவுளைப் பாடித்துதித்து வழிபாடியற்ற வேண்டும்.

தேவர்கள் தமக்குத் துன்பம் வந்துற்ற வேளை இறைவனைப் பாடிப் போற்றித் துதிப்பதாகப் புராணங்கள் கூறுகின்றன. ஆகவே அடியார் பெருமக்களாகிய நாம் எமக்குத் துன்பங்கள் துயரங்கள் வரும் போது முருகனைப் பாடித் துதித்து வணங்குதலே சிறந்தது. "முருகா முருகா" என்று திருப்பித் திருப்பி தொடர்ந்து சொல்லிப் பாருங்கள் அது "காமுறு காமுறு" என்றே கேட்கும். அதிலும் ஒரு பெரிய விடயம் அடங்கியிருக்கின்றது. "முருகன் மேல் பக்தி செய்; அவன் மேல் காதல் கொள்" என்பதே அதன் அர்த்தமாகும். இறைவனைப் பாடும் பணி ஒரு தெய்வீகப் பணியாகும். இந்த நல்லூர் வீதியிலே அடியார்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து ஒருமித்து முருகன் புகழ் பாடிக்கொண்டே பஜனை செய்கின்ற

பக்திமயமான காட்சி நல்லூருக்கே உரித்தான தனிக்காட்சியாகும். இறைவன் இசைக்கு மயங்குவான் என்பது முற்றிலும் உண்மையே. நல்லைக்கந்தன் புகழ்பாடுகின்ற நல்லடியார் கூட்டம் ஒவ்வொரு நாளும் கூட்டுப்பிரார்த்தனையாக முருகனை வாழ்த்திப் பாடி வணங்குவதை இந்த நல்லூரிலே காண முடிகிறது.

'இன்னிசையாய் இசைப்பயனாய் இருப்பவனே' என்பது போன்று இறைவனை இசைபாடி வணங்குவது பாரம்பரிய மரபாகும். பொதுவாகப் பார்க்கும் போது சரஸ்வதி கையிலே வீணை வைத்திருக்கின்றார். கண்ணன் புல்லாங்குழல் வைத்திருக்கின்றான். நந்திதேவர் மிருதங்கத்துடன் காட்சி தருகின்றார். நாரத முனிவர் தம்புராவுடன் காணப்படுகின்றார். சிவபெருமான் கூட ஒரு கையிலே உடுக்கு வாத்தியத்தை வைத்திருக்கின்றார். ஆதலால் ஆண்டவனே இசைபாடும் போது அடியார்கள் விடுவார்களா? 'தமிழோடிசை பாடல் மறந்தறியேன்' என்பது தேவாரம். ஆகவே முன்னரேயே இறைவனை இசைபாடி வணங்கும் முறை இருந்திருக்கின்றது.

அருணகிரிநாதருடைய திருப்புகழ் கேட்கும் ஆசையால் முருகனே நேரில்வந்து, "என் புகழ்பாடு, முத்தைத் தரு என்று பாடு" என்று அருணகிரிநாதருக்கு அடி எடுத்துக் கொடுத்திருக் கின்றார் என்பது ஈண்டு நோக்கத்தக்கது.

மேலும் சங்கமருவிய காலத்தில் வாழ்ந்த காரைக் காலம்மையார் கூட "இறைவா! நான் உன்னை மகிழ்ந்து பாடி என்றும் உன்னடியின் கீழிருக்க" என்று வேண்டுவதும் குறிப்பிடத்தக்கது. பல்லவர் காலத்தில் வாழ்ந்த நாயன்மார்களும் "நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பும் ஞான சம்பந்தன்" என்றும், "பூமாலைப் புனைந்தேத்திப் புகழ்ந்து பாடி" என்றும் "பாட வேண்டும் நான் நெக்குருகி நின்று ஆட வேண்டும்" என்றும் பாடியிருப்பது இறைவனை இசையால் கவரலாம் என்பதைக் காட்டி நிற்கின்றன.

ஆகவே, நல்லூர்க்கந்தனை மயக்கி ஈர்த்திழுப்பதற்கு அடியார்கள் ஒருமித்து அவன் புகழ்பாடி அவனை வணங்குவதை இந்த ஈழ நல்லூரிலே காணக் கூடியதாகவிருக்கின்றது. இது ஒருபுறமிருக்க, நல்லூரைச் சுற்றியிருக்கும் நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனம், நல்லூர் மூத்ததம்பி மடம், நல்லூர் துர்க்கா மணிமண்டபம், மகேஸ்வரன் மண்டபம், நடராசா பரமேஸ்வரி மண்டபம், அறுபத்துமூவர் திருமடம் என்றின்னோரன்ன இடங்களிலும் அறிவு சார்ந்த ஆன்மீக நிகழ்வுகள் வெகு விமர்சையாக நடைபெறும். இதைப் பார்க்கவும் கேட்கவும் அடியார்த்திருக்கூட்டம் ஆங்காங்கே ஒன்று சேர்ந்திருப்பதும் ஓர் ஆனந்த அனுபவ நிகழ்வுகளாகும்.

வருடாந்த மகோற்சவ காலத்திலே ஒவ்வொரு நாளும் அதிகாலை மூன்றரை மணிக்கே அடியார்கள் இங்கு வரத் தொடங்கிவிடுவர். என்றுமில்லாத அடியார் கூட்டம் இந்த நல்லூரிலே தினசரி காலை வேளையில் அங்கப்பிரதட்சணம் செய்யும் காட்சி பக்தி பூர்வமானது. "அரோகரா அரோகரா அழகன் முருகனுக்கு அரோகரா" என்று சொல்லிய வண்ணம் கூட்டங் கூட்டமாக வரும் அங்கப்பிரதட்சண அடியார்களின் திருக்காட்சியை இங்கு மட்டுமே காணமுடியும்.

இந்த ஆலய பெருந்திருவிழாக்களில் அடியார் நெரிசல் சொல்லி வர்ணிக்க முடியாது. அழகிய மஞ்சத் திருவிழா, பூச்சப்பரத் திருவிழா, பெரிய கைலாச வாகனத் திருவிழா, தங்கரதத்திருவிழா, வேட்டைத் திருவிழா, மாம்பழத் திருவிழா, பெரியசப்பரத் திருவிழா, அழகான தேர்த்திருவிழா, பஞ்சமூர்த்திகள் எழுந்தருளி அருள்பாலிக்கும் தீர்த்தத் திருவிழா, திருக்கல்யாணம் நடக்கும் பூங்காவனம் என்று எல்லாமே கண்ணையும் கருத்தையும் கவர்ந்து எமது எண்ணத்தில் பக்தி மணம் கமழச் செய்யும் அதியற்புதமான விழாக்கள்.

நல்லூர்க் கந்தசுவாமி கோயிலில் எழுந்தருளி மூர்த்தமாக ஒளி வீசிப் பிரகாசிக்கும் தங்கவேல் முதலிடத்தை வகித்து அனைவருக்கும் அருள் புரிகின்ற அற்புத வேலாகக் காட்சி தருகின்றது. அடுத்தது முத்துக்குமாரசாமி திருவுருவமாகும். ஸ்ரீ வள்ளி தெய்வானையுடன் அழகே ஒருருவெடுத்தாற் போன்று காட்சி தரும் அழகுகாண இரண்டு கண்கள் போதாது. இது எல்லாவற்றுக்கும் சிகரம் வைத்தாற் போல் காட்சியளிப்பவர் தேருக்கு வரும் ஆறுமுகப்பெருமான்தான்.

இந்த ஆறுமுகப் பெருமானின் அலங்காரக் காட்சி வார்த்தைகளால் வர்ணிக்க முடியாத ஒன்று. தங்கநகைகளாலேயே அலங்கரிக்கப் பெற்று அழகுத் திருவுருவமாக எழுந்தருளி வரும் ஆறுமுகப் பெருமானின் பேரழகு சொல்லி முடியாது. இப்படி நல்லூர்த் திருவிழா ஒவ்வொன்றுமே அழகுமயமான அருட்திருவிழாக்களாகும். அந்தத் தொல்லை வினை தீர்க்கும் நல்லைக் கந்தனின் நல்விழாப் பொலிவு கண்டு பேரின்பப் பெருவாழ்வைப் பெற்றுச் சிறக்க எல்லாம் வல்ல அவனருளையே நாடி நிற்போமாக!

## நல்லைக் கந்தனே வருக!

- சைவப்புலவர் செ. கந்த சத்தியதாசன் -



கந்தா வருக கடம்பா வருக
எந்தாய் வருக ஏற்றம்தர வருக
வள்ளலே வருக வடிவேலுடன் வருக
வள்ளி தெய்வ யானையுடன் வருக
வண்ண மயிலேறி வாழ்விக்க வருக
வண்டமிழர் குறைதீர்க்க விரைந்து வருக
கார்த்திகை தீபங்கள் பெற்றிட வருக
நேர்த்திகள் அத்தனையும் தீர்த்திட வருக
திருப்புகழைப் பாடினேன் கேட்டிட வருக
வருமடியார் வினைகள் போக்கிட வருக
நம்குறைகள் இயல்பினேன் தீர்த்திட வருக
நல்லைக் கந்தனே ஓடி வருகவருகவே !

## நல்லூர் தேர்த் திருவிழா

செல்லூர் பொதிய மலைதா னகத்தியன் செந்தமிழின்
சொல்லூ ரமுதஞ் சுவைத்திட வேவந்த தோற்றமென்ன
பல்லூ ரவரும் பராவும் பலவலங் காரமுடன்
நல்லூ ரிரதம் வருங்காட்சி காண்பவர் ஞானிகளே!
*(திருநல்லூரலங்காரம் - புலோலி தியாகராசபிள்ளை)*

உடம்பிடிச் செங்கைக் குமரேச வள்ள லுருள்நெடுந்தேர்
தடம்பிடித் தோங்குந் திருநல்லை வீதி தனில்வருமால்
வடம்பிடித் தீர்த்திட வம்மின்கள் வம்மின்கள் தொண்டரெலாம்
இடம்பிடித் திட்டிருப் பீர்வீடு நல்கும் இணையடிக்கே!
*(நல்லையந்தாதி - சோமசுந்தரப் புலவர்)*




இது சிறுவர்களுக்கான சிறப்புப் பகுதி. சிறுவர் சிந்தனைக் கதைகள் சிலவற்றை இங்கு தருகிறோம். பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு இக்கதைகளைப் படித்துக் காட்டி அதன் தத்துவத்தை விளக்குவது கடன்.

# சிந்தனைக் கதைகள்

அழ. வள்ளியப்பா

## சோம்பேறிக் காக்கை

அந்தக் காட்டிலே ஏராளமான மரம், செடி, கொடிகள் இருந்தன. அடர்த்தியான அந்தக் காட்டிலே ஒரு மரத்திலே இரண்டு காக்கைகள் வசித்தன. ஒரு கிளையிலே ஒரு காக்கை கூடு கட்டியிருந்தது. இன்னொரு கிளையிலே மற்ற ஒரு காக்கை கூடு கட்டியிருந்தது.



இரண்டும் அதிகாலையிலே காட்டை விட்டுப் புறப்படும். மூன்று கிலோ மீட்டர் தூரத்திலே இருக்கிற ஒரு கிராமத்துக்குப் பறந்துபோகும். அங்கே அவற்றுக்கு வேண்டிய தின்பண்டங்கள் எல்லாம் கிடைக்கும். கல்யாண நாட்களிலே அல்வா, வடை எல்லாம் கிடைக்கும்!.

அந்த ஊர் மக்களும் சாப்பிடுவதற்கு முன்பு 'கா.... கா' என்று அழைப்பார்கள். இந்தக் காக்கைகளும் 'கா.... கா' என்று கத்திக்கொண்டே அங்கே திரிகிற மற்றக் காக்கைகளையும் அழைத்துக் கொண்டு போய், அவர்கள் வைக்கிற சாதத்தைக் கூடி உண்ணும்.

ஒரு நாள், காட்டிலேயிருந்து வந்த இரண்டு காக்கைகளும் ஒரு குளத்தங்கரையிலே தனியாக இருந்த ஒரு மரக்கிளையிலே போய் உட்கார்ந்தன. அவை எடுத்துவந்த வடையை காலடியிலே வைத்துக் கொண்டு கொஞ்சம் கொஞ்சமாக ரசித்துச் சாப்பிட்டுக்கொண்டிருந்தன.

அப்போது ஒரு காக்கை இன்னொரு காக்கையைப் பார்த்து, "நாம் தினந்தோறும் காட்டிலேயிருந்து இந்த ஊருக்கு வருகிறோம். இந்த ஊரிலேதான் நமக்கு வேண்டிய ஆகாரமெல்லாம் கிடைக்குது. இவ்வளவு தூரம் தினமும் பறந்து வரணுமா? இதோ நாம் இருக்கிற மரத்திலே நீ ஒரு பக்கமும் நான் ஒரு பக்கமுமாகக் கூடு கட்டிக்கிட்டு வாழலாமே! வீணாக அலைய வேண்டாமே!" என்றது.

அதற்கு இன்னொரு காக்கை, "இது ஒரு தனிமரம். நெட்டையாக ஒல்லியாக இருக்கு. பார்த்தால், ரொம்ப வயசான மரம்போலத் தெரியுது. இதிலே கூடு கட்டுறது ஆபத்து!. அதோட, நாம் கூட்டிலே முட்டையிட்டு அடைக்காக்கிற காலத்திலே ஜாக்கிரதையாக இருக்கணும்!. இந்த ஊர் பசங்களிலே சிலர் ரொம்பப் பொல்லாதவங்களாக இருப்பாங்க. மரத்து மேலே ஏறுவாங்க. நம்ம கூட்டிலே இருக்கிற நீலநிற முட்டைகளைப் பார்த்ததும், எடுத்துப்போனாலும் போயிடுவாங்க. காடுதான் நமக்கு சரி, இந்த தனிமரம் சரிப்படாது"என்றது.

ஆனால் முதலிலே சொன்ன காக்கை கேட்கவில்லை. "நாம ரெண்டு பேரும் இந்த மரத்திலே தங்கலாம். ஏன் நாம் காலையிலே எழுந்திருச்சுக் காட்டிலேயிருந்து ஓடிவரணும்? அப்புறம் இருட்டறப்போ திரும்பப் பறந்து காட்டுக்குப் போகணும்? இது வீண்வேலை" என்று திரும்பத் திரும்பச் சொன்னது.

"நான் காட்டிலேதான் இருப்பேன். இந்த மரத்திலே வசிக்கமாட்டேன்."

"சரி அப்படின்னா நீ காட்டுக்குப் போய் அங்கே இரு. நான் இந்த மரத்திலே கூடு கட்டிக்கிறேன்."

"உன் மனசை மாத்த முடியாது. நான் வாரேன்" என்று சொல்லிவிட்டு யோசனை சொன்ன காக்கை பறந்து காட்டுக்குப் போய்விட்டது.

அது தினமும் காலையிலே காட்டிலேயிருந்து புறப்பட்டு, குளத்தங்கரை மரத்துக்கு நேராக வரும். இரண்டும் சேர்ந்து ஊருக்குள் இரைத்தேடப் போகும்.

இப்படியே மூன்று மாதங்கள் ஓடி விட்டன.

காட்டிலேயிருந்த காக்கையும் முட்டையிட்டுக் குஞ்சுகள் பொரித்திருந்தது. குளக்கரை மரத்துக் காக்கையும் முட்டையிட்டுக் குஞ்சுகள் பொரித்திருந்தது. இரண்டினுடைய குஞ்சுகளும் ஓரளவு வளர்ந்துவிட்டன. இன்னும் நாலைந்து நாட்களிலே பறக்க ஆரம்பித்துவிடும்.

அன்றைக்குக் காலையிலே மூன்று அல்லது மூன்றரை மணி இருக்கும். மடமட என்று இடி இடித்தது; பளிச் பளிச்சென்று மின்னல் மின்னியது; மழையும் பெய்தது. அதைத்தொடர்ந்து 'விர்....விர்' என்று புயல் காற்று சுழற்றிச் சுழற்றி அடித்தது. அந்தப் புயல் காற்றிலே, குளத்தங்கரையிலே இருந்த மரம் தடாலென்று விழுந்துவிட்டது. அப்போது அதிலிருந்து கூடும், கூட்டுக்குள்ளேயிருந்த குஞ்சுகளும், பாவம், கீழே விழுந்து நசுங்கிப் போயின! தாய்ப் பறவை மட்டும் தப்பிவிட்டது!

தப்பிய தாய்ப் பறவை அழுதுகொண்டே குளத்தங்கரையிலே இருந்த ஒரு கல்லின்மீது உட்கார்ந்திருந்தது. அப்போது காட்டிலிருந்து வந்த காக்கை மரத்தைக் காணாமல் திடுக்கிட்டது. பிறகு, கல்லின் மீது உட்கார்ந்து அழுதுகொண்டிருந்த காக்கையைப் பார்த்து அதன் அருகிலே சென்று விசாரித்தது. விவரம் தெரிந்ததும் மிகவும் வருந்தியது. அதற்கு ஆறுதல் சொல்லித் தேற்றியது.

அழுகையை நிறுத்திய காக்கை, "காட்டிலேயும் புயல் வீசியிருக்குமே! நீ இருந்த மரத்துக்கு ஆபத்து இல்லையே!" என்று கேட்டது.

"நான் இருந்த காட்டிலும் புயல் பலமாக வீசியது. ஆனால், பக்கத்திலே மரங்களும் செடி, கொடிகளும் அடர்த்தியா இருந்ததாலே புயலின் வேகத்தை அவை தடுத்திடுத்து. எந்த மரமும் விழவில்லை. இங்கே, நீ இருந்த மரம் தனியாக இருந்ததாலே புயல் அதை சுலபமாகச் சாய்ச்சிடுச்சி."

"ஆமாம், நீ சொல்றது சரிதான். கூடியிருந்தால் கோடி நன்மை என்பாங்க. மரங்களெல்லாம் சேர்ந்து இருந்ததாலே புயலாலே ஒண்ணும் செய்ய முடியல்லே. அன்னிக்கு நீ சொன்னதைக் கேட்டு அதன்படி நடந்திருந்தால், என் குழந்தைகளைப் பறிகொடுத்திருப்பேனா? இன்னிக்கு ராத்திரியே உன்னோடே நான் காட்டுக்கு வந்துடறேன். உன்னோடே அந்த மரத்திலே நானும் கூடு கட்டி வசிக்கிறேன்."

"சரி அப்படியே செய்யலாம்."

அன்றைக்கு பொழுது சாய்ந்தவுடனே இரண்டு காக்கைகளும் ஒன்றாகக் காட்டை நோக்கிப் பறந்து போயின!.

இது மாணவர்களுக்கான பக்கம். வழமைபோல பெரிய புராணக் கதைகள் இடம்பெறுகின்றன. இது போன்ற விஷயங்கள் மாணவர்களிடமிருந்து எதிர்பார்க்கப்படுகிறது.




# பெரியபுராணக் கதைகள்

## அப்பூதியடிகள்

அப்பூதி அடிகள் திங்களூரிலே மறையவர் குலத்திலே தோன்றியவர். காமம், கோபம் முதலிய குற்றங்களைக் காய்ந்தவர். இல்லறத்தில் நின்றவர். சிவபக்தி, சிவனடியார் பக்திகளிற் சிறந்தவர். திருநாவுக்கரசு சுவாமிகளிடம் பேரன்பு வாய்ந்தவர்.

அவ்வன்புக்கு அறிகுறியாக அவர் தம் வீட்டிலுள்ள அளவை, நிறைகோல், பிள்ளைகள், பசு, எருமை முதலியவற்றுக்கும் தாம் அமைத்த திருமடம், தண்ணீர்ப் பந்தல் முதலியவற்றுக்கும் 'திருநாவுக்கரசு' என்னும் பெயரையே சூட்டி, அப் பெயராலேயே திருத்தொண்டு செய்து வந்தார்.

திருநாவுக்கரசு சுவாமிகள் திருப்பழனத்தைப் பணிந்து பணிசெய்து, மற்றும் பல திருப்பதிகளைத் தொழ வேண்டித் திங்களூர் வழியே சென்றார். அங்கே ஒரு தண்ணீர்ப் பந்தலைக் கண்டார். அதிலே தம் பெயர் எங்கும் வரையப்பட்டிருத்தலைப் பார்த்தார். அவர் அங்கிருந்தவர்களை நோக்கி, "இப் பந்தலை இப் பெயரிட்டு அமைத்தவர் யார்?" என்று வினவினார்.

அவர்கள், "அப்பூதி அடிகள்" என்று சொல்லி, "அவரால் அமைக்கப் பெற்றுள்ள வேறு பல அறச்சாலைகட்கும் 'திருநாவுக்கரசு' என்னும் பெயரையே அவர் சூட்டியுள்ளார். அப்படிச் செய்வது அவரது வழக்கம்" என்றார்கள்.

திருநாவுக்கரசர், "இதற்கு கருத்தென்னை?" என்று, அவர்களை நோக்கி "அவர் எவ்விடத்தவர்?" என்று கேட்டார். அவர்களும், "அப்பூதி அடிகள் இப்பதியிலுள்ளவரே, இப்பொழுதுதான் வீட்டுக்குப் போனார். அவர் வீடும் தூரத்திலில்லை. அது மிகச் சமீபத்திலேயே இருக்கிறது" என்று சொன்னார்கள்.

திருநாவுக்கரசு சுவாமிகள், அவ்விடத்தினின்றும் நீங்கி, அப்பூதியடிகள் வீடு நோக்கி விரைந்து நடந்து தலைக்கடை வாயிலைச் சேர்ந்தார். அதை அறிந்த அப்பூதி அடிகள் விரைந்தோடிச் சுவாமிகளை வணங்கினார். சுவாமிகளும் நாயனாரை வணங்கினார்.

நாயனார் திருநாவுக்கரசரை நோக்கிக், "கருணை வடிவுடையீர்! தாங்கள் என் வீட்டுக்கு எழுந்தருளினீர்கள். யான் செய்த தவம்" என்றார்.

திருநாவுக்கரசர், "நாம் திருப்பழனத்தைத் தொழுது வழியே வந்துகொண்டிருந்தோம். உமது தண்ணீர்ப் பந்தரைக் கண்டோம். உம் பிற அறங்களையுங் கேட்டோம். உம்மைக் காண வந்தோம்" என்று சொன்னார்.


அதற்குமேல் திருநாவுக்கரர் அப்பூதி அடிகளைநோக்கி, "அடியவர் பொருட்டு நீர் தண்ணீர்ப் பந்தல் வைத்திருக்கிறீர். அதன்கண் உம்முடைய பெயரை எழுதுவதே முறை. வேறு ஒரு பெயரை எழுதியதென்னை" என்று கேட்டார்.

அவ்வுரை கேட்ட அப்பூதி அடிகள் நிலையழிந்த சிந்தையரானார். ஆகி, "நீர் நல்லது அருளிச் செய்தீர் இல்லை. பல்லவன் சமணர்களோடு சேர்ந்து செய்த கொடுஞ் சூழ்ச்சிகளை எல்லாம் திருத்தொண்டின் உறைப்பால் வென்ற ஒருவர் பெயரோ, வேறொரு பெயர்?" என்று வெகுண்டார்.

வெகுண்டு, "திருத்தொண்டாலே இம்மையிலும் பிழைக்கலாம் என்று எம் போன்றவர்களுந் தெளியத் திருவருள் புரிந்தவர் திருநாவுக்கரசர். அவர் தம் திருப்பெயரை யான் எழுதினேன். நீர் வெம்மை மொழி கூறக் கேட்டேன். திருநாவுக்கரசர் கருங்கல்லைத் தெப்பமாகக் கொண்டு கடலைக் கடந்தவர். அப்பெருமான் பெருமையை அறியாதவர் இவ்வுலகத்தில் யாவருளர்? சிவ வேடந்தாங்கி இவ் வெம்மொழி பகர்ந்தீர். நீர் எங்கே இருப்பவர்? நீர் யாவர்" என்று கேட்டார்.

திருநாவுக்கரசர், அப்பூதி அடிகளின் பெருமையை உணர்ந்து, "சமணப் படுகுழிவிட்டு ஏறச் சிவபெருமான் சூலை நோய் தந்து ஆளப்பெற்ற தெளிவுணர்வில்லாத சிறுமையேன் யான்" என்றார். என்றதும், அப்பூதி அடிகளின் கைகள் தலைமீது குவிந்தன, கண்கள் அருவிநீர் பொழிகின்றன, உரை குழறுகிறது, உடம்பெல்லாம் மயிர்க்கூச்செறிகிறது. அடிகள் கீழே விழுந்து, சுவாமிகளின் திருவடித்தாமரையைச் சூடிக்கொண்டார்.

திருநாவுக்கரசர் எதிர்பணிந்து அடிகளை எடுத்தருளினார். அப்பூதி அடிகள் அருநிதியம் பெற்றவர் போல் ஆனார். ஆனந்த மேலீட்டால் அவர் ஆடுகிறார், பாடுகிறார், ஓடுகிறார், இன்னது செய்வதென்றறியாது களிக்கிறார். வீட்டுள் நுழைந்தார், "திருநாவுக்கரசர் வந்திருக்கிறார்; என்று மனைவி மக்களுக்குச் சொல்லுகிறார். அவர்களுடன் வந்து சுவாமிகளை வணங்குகிறார். அப்பூதி அடிகள் உற்ற ஆர்வத்துக்கோர் அளவில்லை.




அப்பூதி அடிகள், திருநாவுக்கரசரை வீட்டினுள் அழைத்துச் சென்றார். அவர்தம் திருவடிகளை மனைவி மக்களுடன் நீரால் விளக்கினார். அந்நீரை அவர்கள் எல்லாரும் தலைமேல் தெளித்து மகிழ்வெய்தினார்கள். பின்பு அவர்கள் உலகுய்யத் தோன்றிய சுவாமிகளைப் பீடத்திலிருத்தி வணங்கித் "திருவமுது செய்தருளல் வேண்டும்" என்று வேண்டினார்கள். சுவாமிகளும் உடன்பட்டார்.

அப்பூதி அடிகள், மனைவியாரைப் பார்த்து, "ஆண்டவன் அருளால் பெறுதற்கரிய பேறு பெற்றிருக்கிறோம்" என்று சொல்லித் திருவமுது சமைக்கப் புகுந்தார். அறுசுவை கறிகளாக்கி அமுதும் ஆக்கினார். தம் புதல்வருள் மூத்த திருநாவுக்கரசரை அழைத்து, வாழைக்குருத்து அறுத்து வரும்படி தோட்டத்திற்கு அனுப்பினார்.

மூத்த திருநாவுக்கரசர் பெற்றோர் சொற்படி தோட்டத்திற்குச் சென்று வாழைக் குருத்தை அரிந்தார். அப்பொழுது ஒரு பாம்பு, அவர்தம் கையைத் தீண்டிச் சுற்றிக்கொண்டது. மூத்த திருநாவுக்கரசர் பாம்பை உதறிக் கீழே வீழ்த்திப் பதைபதைத்து,

“விஷ வேகந்தலைக்கேறி என்னைச் சாய்த்துவிடும், அதற்கு முன் யான் வேகமாக ஓடி இக் குருத்தைக் கொடுப்பேன், நேர்ந்ததை எவரிடமும் சொல்லேன், பெரியவர் திருவமுது செய்தருளல் வேண்டும்” என்று நினைந்து, அதிவேகமாக ஓடிவந்து, குருத்தைத் தாயாரிடம் நீட்டினார்.

அவரது உடல் கறுத்தது, உரை தடுமாறிற்று, அவர் கீழே விழுந்தார். விழுந்த மகனைக் கண்டு தாயாரும் தந்தையாரும் உளம் பதைத்து, உற்று நோக்கி, “விஷத்தால் மாண்டான்” என்றுணர்ந்தனர்.

அவர்கள் நடுங்காது, பெரியவர்க்கு அமுது செய்விப்பதிலேயே கருத்திலிருத்தினார்கள். உடலைப் பாயிலே வைத்துச் சுற்றி வீட்டின் ஒரு புறத்தில் மறைத்து வைத்தார்கள்.

“பெரியவர்க்கு இது தெரியாவண்ணம் அமுது செய்விப்போம்” என்று எண்ணி, அவர்கள் சுவாமிகளிடம் அணைந்தார்கள்; அணைந்து பணிந்து, “எங்கள் குடிமுழுதும் உய்யுமாறு திருவமுது செய்ய எழுந்தருளல் வேண்டும்” என்று வேண்டினார்கள்.

திருநாவுக்கரசு சுவாமிகள் எழுந்து, கைகால் கழுவி, வேறொரு பீடத்தில் அமர்ந்து, திருநீறணிந்து கொண்டார். அப்பூதியடிகளுக்கும், அவர் தம் மனைவியார்க்கும் திருநீறு கொடுத்தார். புதல்வர்களுக்குத் திருநீறளிக்கும்போது, அப்பூதியாரைப் பார்த்து, “மூத்த குமாரரையும் அழையும்” என்றார்.

அதற்கு நாயனார் நிகழ்ந்ததை விளக்கமாகக் கூறாதவராய், “அவன் இங்கே இப்போது உதவான்” என்றார். அதைக் கேட்டதும், சுவாமிகளுக்குத் திருவருளால் ஒருவித தடுமாற்றம் உண்டாயிற்று.

“இவ்வுரையை என் உள்ளந்தாங்காது. அவன் என் செய்தான்? உண்மை உரையும்” என்று வினவினார்.

அப்பூதி அடிகள், “பெரியவர் அமுது செய்வதற்கு இடையூறு நேர்ந்து விட்டது. நிகழ்ந்ததை மறைத்தலுங் கூடாது” என்று விதிர்ப்புற்று, நிகழ்ந்ததைக் கூறினார்.

திருநாவுக்கரசு சுவாமிகள், நீர் செய்தது நன்றாயிருக்கிறது! எவரே இப்படிச் செய்தார்!” என்று சொல்லி எழுந்தார். எழுந்து போய் உடலைப் பார்த்தார். திருவருளை நினைந்தார். “ஒன்று கொலாம்” என்னுந் திருப்பதிகத்தைப் பாடினார். விஷம் நீங்கிற்று. மூத்த திருநாவுக்கரசர் உயிர் பெற்றெழுந்தார்; எழுந்து தங்கள் குல குருவாகிய திருநாவுக்கரசு சுவாமிகளை வணங்கினார். திருநாவுக்கரசு சுவாமிகள் அவருக்குத் திருநீறு கொடுத்தார். நாயனாரும் நாயகியாரும், சுவாமிகள் அமுது செய்வதற்கு இவன் சிறிது இடையூறு செய்தான்” என்று வருந்தினார்கள். அதை உணர்ந்த திருநாவுக்கரசு சுவாமிகள், அப்பூதி அடிகளின் வீட்டுக்குள் நுழைந்தார்.

அப்பூதி அடிகளும் அவர் தம் மனைவியாரும் திருவமுது படைத்தனர். சுவாமிகள், “அப்பூதி அடிகளே! நீரும் புதல்வர்களும் உடனிருந்து உண்ணலாமே!” என்றார். அவ்வாறே அப்பூதி அடிகளும் அவர்தம் பிள்ளைகளும் திருநாவுக்கரசருடன் அமுது செய்தார்கள்.

திருநாவுக்கரசு சுவாமிகள் திங்களூரிலேயே சிலநாள் தங்கி இருந்து, திப்பழனம் போந்து பதிகம் பாடிச் சென்றார். அப் பதிகத்தில் சுவாமிகள் அப்பூதி அடிகளைச் சிறப்பித்தார். அப்பூதி அடிகள், திருநாவுக்கரசரின் திருவடிகளை நினைந்து, தமக்குள்ள யாவும் அவர் தம் திருவடிகளுக்கு உரியனவே என்று கொண்டு, சில நாள் வாழ்ந்து, தில்லைக் கூத்தன் திருவடி அடைந்தார்.



மங்கையர் ஒளி

# பெண்மைக்கு பெருமை சேர்த்த மங்கையர்க்கரசியார்

**ஜெ. நிவேதிகா**
சைவ மங்கையர் வித்தியாலயம், 8 D
வெள்ளவத்தை, கொழும்பு 06

பெண்மைக்கு பெருமை சேர்த்த மங்கையர்க்கரசியார் மணிமுடிச் சோழனின் மகள் ஆவாள். இவரின் இயற்பெயர் மானி ஆகும். தந்தையைப் போன்று இவரும் சிவப்பணியில் ஈடுபாடு கொண்டவர். சிவபக்தியிலும் அடியார் பக்தியிலும் சிறந்து விளங்கியவர். இளமையிலேயே இவர் சகல கலைகளையும் கற்று, அறிவு, ஒழுக்கம் என்பவற்றிலும் சிறந்து விளங்கினார். இறை நம்பிக்கை, சைவசமய நம்பிக்கை, நற்பண்புகள் என்பனவும் இவரிடம் காணப்பட்டன. அவை அவரை தனித்துவம் மிக்கவராக சைவபணிகள் செய்யவும் உதவின. கல்வி கேள்விகளிலும் சிறந்து விளங்கினார். பாண்டிய நாட்டினை ஆட்சி செய்த நெடுமாறன் என்னும் மன்னனை மங்கையர்க்கரசியாருக்கு திருமணம் செய்து வைத்தனர். தந்தையாரான மணிமுடிச் சோழன் திருமணப் பரிசாக பெருமளவு செல்வத்தையும் தன் மகளுக்கு வழங்கியதோடு குலச்சிறையர் என்ற அறிஞரையும் குடிமக்கள் பலரையும் மகளுடன் அனுப்பி வைத்தார். மங்கையர்க்கரசியார் மன்னனை போல பாண்டிய நாட்டுக்கு நல்லவற்றை செய்து வந்தார். அவர் பட்டத்து அரசியாக இருந்தபோதும் ஆடம்பர வாழ்வை விரும்பியவர் அல்ல. சைவசமயத்தை மேன்மையுறச் செய்ய வேண்டும் என்ற உன்னத நோக்கில் சிவதொண்டை செய்து வந்தார். இதற்கு குலச்சிறையார் உற்ற துணையாக இருந்தார். இக்காலத்தில் சமண சமயம் பெருமளவு பரவியது. பாண்டிய மன்னன் தான் செய்த முன் தீவினைப் பயனாலும் சமண சமய துறவிகளின் போதனைகளையும் கேட்டு சமண சமயத்தை தழுவிக் கொண்டான். மன்னனை பின்பற்றி குடிமக்களும் சமண சமயத்தை தழுவிக் கொண்டனர். நாட்டில் சைவ சமயம் குன்றலாயிற்று. இதை அறிந்த மங்கையர்க்கரசியார் பெரிதும் மனம் தளர்ந்தார். திருஞானசம்பந்தரை பாண்டிய நாட்டுக்கு அழைத்து சைவ சமயத்தை மேன்மையுறச் செய்து மன்னனையும், குடிமக்களையும் சைவசமயத்திற்கு மாற்றினார். சம்பந்தர் மூலமாக திருநீற்றின் சிறப்பையும் பரப்பினார். அறுபத்து மூவர் வரலாற்றில் இவரும் ஒருவர் ஆவார். திருஞானசம்பந்தர் தனது பதிகத்தில் 'வரிவளைக் கைமடமானி' என்று மங்கையர்க்கரசியாரை போற்றியுள்ளார். சேக்கிழாரும் பெரிய புராணத்தில் 'மங்கையருக்கு தனி அரசி, எங்கள் தெய்வம்' என்று திறன்பட போற்றியுள்ளார். இவர் காட்டிய வழிகளை நாங்களும் பின்பற்றுவோமாக!



# ஆடி அமாவாசை விரத மகிமை

கலாநிதி குமாரசாமி சோமசுந்தரம்
துணைத்தலைவர் அகில இலங்கை இந்து மாமன்றம்

சைவ வாழ்வு, சைவப் பண்பாடு, ஒழுக்கம் என்பனவற்றை அறிந்து, வாழ்க்கையில் அவற்றைப் பேணி வாழும் போது, வாழ்க்கை சீராகவும், செம்மையாகவும், அமைதி நிறைந்ததாகவும் அமைந்துவிடுகிறது. இன்பமே, எந்நாளும் துன்பமில்லை என்னும் உயர் வாழ்க்கை நிலை, இம்மையில் எய்தப்படவும்; மறுமையில், மனிதப் பிறப்பின் உயர் குறிக்கோளாகிய மரணமிலாப் பெருவாழ்வினை அடையவும், சைவ நெறி, மனித குலத்திற்கு வழிகாட்டியாக உள்ளது. சமயம் வேறு, வாழ்வு வேறாகக் கொள்ளல் ஆகாது. அறம், பொருள், இன்பம், வீடு என்பனவற்றை அடைதல் மனித வாழ்க்கைப் பயன்கள் ஆகும். இவற்றை அடைவதற்கு மனிதரை நெறிப்படுத்துவது சமயம். மனிதனை மனிதனாக்குவது சமயம். சமயம் எனும் சொல், நன்றாகச் செய்யப்பட்டது, அல்லது பக்குவப்படுத்தப்பட்டது என்ற பொருளில் அமைந்துள்ளது என்று அறிஞர் கூறுவர்.

சைவசமயம் என்பது வெறும் அறிவுசார்ந்த விடயம் மாத்திரமன்று; செயல்பாடு சார்ந்ததுமாகும். அந்த வகையில், திருவருள் பதிந்த சைவப் பயிற்சிகள் வாழ்க்கையில் இடம் பெற வேண்டியது இன்றியமையாததாகும்.

சைவப் பயிற்சிகளுள் விரத அனுட்டானம் முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாகும். ''மனம் பொறிவழி போகாது நிறுத்தற்பொருட்டு உணவை விடுத்தேனும் சுருக்கியேனும் மனம், வாக்கு, காயம் என்னும் மூன்றினாலும் கடவுளை விதிப்படி மெய்யன்போடு வழிபடுதலாகும்.'' – இது ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் விரதம் என்பதற்குக் கூறிய வரைவிலக்கணம் ஆகும். மனம் மற்றும் ஐந்து புலன்கள் எமக்குத் தீமைகளை விளைவிக்காது, நன்மைகளையே விளைவிக்கும் பொருட்டு, மனஅடக்கம், புலனடக்கம் என்பவற்றை ஏற்படுத்துவதற்கான ஆன்மிகப் பயிற்சியே விரதம் ஆகும். கடவுளின் பொருட்டும், தென்புலத்தார் எனும் நம் மூதாதைகள் பொருட்டும் விரதங்கள் அனுட்டிக்கப்படும் போது அவை வழிபாடு ஆகின்றன; புனிதமும் பெறுகின்றன. விரதம் என்பது தவம் ஆகவும் கொள்ளப்படுகின்றது.

தமக்கு நேரும் துன்பங்களைப் பொறுத்துக் கொள்வதும், பிற உயிர்களுக்குத் துன்பஞ் செய்யாது இருந்தலும் விரதமனுட்டிப்போரின் சங்கல்பம் ஆகும். புண்ணிய நற்செயல்களில் ஈடுபடல், பாவங்களை விலக்குதல் என்பனவற்றை வாழ்க்கையில் கடைப்பிடித்தல் தவம் ஆகிவிடுகின்றது. சைவ ஆசாரங்கள், அகப்புறத் தூய்மை, நீதிவழுவா நெறிமுறைகள், மனித விழுமியங்கள் என்பவற்றைப் பயிற்சி செய்வதற்கும், வாழ்நாள் முழுவதும் அவற்றை நடைமுறையில் பேணி வருவதற்கும் விரதங்கள் களம் அமைத்துத் தருகின்றன.

ஆடிமாதம், தட்சிணாயன காலத்தின் தொடக்கமாதம் ஆகும். ஆடி தொடக்கம் மார்கழி ஈறாக உள்ள ஆறுமாதங்கள் இக் காலப் பகுதியில் அடங்கும். வடதிசையிலிருந்து தென்திசை நோக்கி சூரியன் நகரும் காலத்தைத் தட்சிணாயனம் என்பவர். இக் காலப்பகுதி தேவர்கள் மற்றும் பிதிர்களுக்கு இரவு காலம் ஆகும் என நூல்கள் கூறும்.

தென்புலம் வாழுநர்க்கு அருங்கடன் நிறைவேற்றுதற்கும், பிதிர் வழிபாடு செய்வதற்கும் ஏற்ற காலம், தட்சிணாயண காலம் ஆகும். ஆடி மாதத்தில் வரும் அமாவாசை; புரட்டாதியில் வரும் மஹாளய பட்சம் என்பன தென்புலம் வாழும் முன்னோர்களை நோக்கி விரதம் அனுட்டித்தல்; சிராத்தம் செய்தல்; தர்ப்பணம், பிண்ட தானம் செய்தல் என்பனவற்றிற்கு உரிய காலம் எனப்படுகிறது.

''தென்புலத்தார் தெய்வம் விருந்து ஒக்கல் தான் என்றாங்கு ஐம்புலத்தாறு ஓம்பல் தலை'' – (திருக்குறள் – 43) தென்புலத்தார், தெய்வம், விருந்தினர், சுற்றத்தார் மற்றும் தான் என்ற ஐந்து தரப்பினரையும் அறநெறியில் நின்று போற்றியும் ஓம்பியும் வருதல் இல்லறத்தில் வாழ்பவனின் இன்றியமையாக் கடைமையாகும் எனத் தமிழ் வேதம் கூறுகிறது.

தென்புலத்தார் என்போர் இறந்த நம்முன்னோர்கள் ஆவர். அவர்களை வழிபட்டு, விரதம், சிராத்தம், பிண்டதானம், தர்ப்பணம் முதலியவற்றை உரிய காலங்களில் உரிய முறையில் நிறைவேற்றி வரவேண்டியது நம் கடன். அவ்வாறு அவர்களைப் போற்றுதல் செய்து வருபவர்களுக்கு நோய், பிணிகள், அவமிருத்து, விபத்து, அகால மரணம், மற்றும் காரியக் கேடுகள், பொருள் நட்டங்கள், இழப்புக்கள் என்பன ஏற்படாமல், அவர்கள் தென்புலத்தார் என்னும் பிதிர் தேவர்களால் காப்பாற்றப்படுகின்றனர். இவ்வாறு சாத்திர நூல்கள் கூறுகின்றன. எல்லா வகையான செல்வங்களையும் வம்ச விருத்தியையும் கிடைக்கச் செய்வதோடு, உயிர் உடைமைப் பாதுகாப்பையும் உறுதி செய்யும் பெற்றியர், இத் தென்புலத்தார்.

பிதிர் வழிபாடு, தென்புலம் வாழ்நர்க்கு அருங்கடன் என்பனவற்றை நிறைவேற்றாது உள்ளவர்கள் பிதிர் சாபத்திற்கு உள்ளாகின்றனர். அதனால் பல்வகைப்பட்ட இழப்புக்கள், துன்பங்கள், திடீர் விபத்துக்களில் சிக்கி மரணித்தல் அல்லது உடல் அவயவங்கள் ஊனப்படுதல், செய் காரியங்கள் நிறைவேறாமல் தடைப்படுதல், கடுமையான நோய்களினால் பீடிக்கப்படுதல், குலவிருத்தியின்மை, திடீரெனக் கதியற்றவர்கள் ஆக்கப்படுதல், துர் மரணங்கள் ஏற்படுதல் போன்றவற்றிற்கு இலக்காகின்றனர். அவர்களின் வாழ்வில் விடிவு இருக்காது; சோகம் படிந்திருக்கும். சைவசமயிகள் ஆற்றவேண்டிய ஐம் பெருங்கடமைகளுள் ஒன்றாக, பித்ருயக்ஞம் என்னும் தென்புலத்தாருக்கு அருங்கடன் இயற்றும் வேள்வி விதிக்கப்பட்டுள்ளது.

சமூகத்தில் வாழுகின்ற நாம் சமூகத்தவர் பலருக்குக் கடமைப் பட்டுள்ளோம். குறிப்பாகத் தாய் தந்தையர்க்குப் பெரிதும் கடமைப்பாடு உடையோம். அவ்வாறே எமது மூதாதையர்களுக்கும் கடமைப்பட்டுள்ளோம். எங்கள் உயிர், உடல் என்பன நம் பெற்றோர் தந்தவையே. எம்மை வளர்த்து, கல்வியூட்டி, இன்றைய நிலைக்கு

ஆளாக்கியவர்கள் அவர்களே. அன்னையும் பிதாவும் நமது முன்னறி தெய்வங்கள் ஆவர். நாம் அனுபவித்து மகிழ்கின்ற சொத்துப்பத்துக்கள், எங்கள் முன்னோர்கள், தாய், தந்தையர் வழிவந்தவைகளேயாகும். எனவேதான், நாம் அவர்கள் அனைவர்க்கும் கடமைப்பட்டுள்ளோம் என்பது தெளிவாகின்றது.

நாம் அனைவரும் தாய், தந்தையர் மற்றும் மூத்த தலைமுறையினர், சமுதாயம் ஆகியவர்களால் உருவாக்கப்பட்டும், பாதுகாக்கப்பட்டும் அவர்களின் உழைப்பு உதவிகளால் வாழ்வழிக்கப்பட்டும் வருபவர்களே என்பதை நினைவிற்கொள்ள வேண்டியது அவசியமாகும். அந்தவகையில் மேற்குறித்த சகல தரப்பினரிடமும் கடன்பட்டவர்களாகவே உள்ளோம். கடன் பெற்றவர்கள், கடனைத்திருப்பி வழங்கியவர்களிடம் தரவேண்டியது, கடனை தீர்க்க வேண்டியது அவர்களின் கடமையும் அறமுமாகும். தாய், தந்தையரிடம் நாம் பெற்ற கடனைத் தீர்ப்பதற்கு பல வழிகள் உண்டு. நாம் அடைந்துள்ள உடல்வளம், அறிவுவளம், பொருள் வளம், தொழில் திறம், நன்மனப்பாங்கு, அனுபவங்கள், ஆன்மீகவளம் ஆகியவற்றினால் தாய் தந்தையர் உயிரோடு வாழும்போது, அவர்கள் மகிழ்ச்சியுடனும் திருப்தியுடனும் வாழும் வகையில், அவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்து சிரத்தையுடன் தொண்டாற்றி அவர்களிடம் பட்ட கடனைத் திருப்பித் தந்து கொண்டிருக்கவேண்டும். தந்தை தாய் பேண் என்பது ஔவையின் வாக்கியம். கடன் திருப்பும் கருத்தே கடமை எனுஞ் சொல்லாக (கடன் + மை = கடமை) வழக்கில் வந்துள்ளது என்பது அறிஞர் கருத்து. வாங்கியதைத் திருப்பிக்கொடுத்தல், கடன் தீர்த்தல் ஆகும். நாம் பெற்றோரிடம் பெற்று வரும் நலன்களுக்கும் வளங்களுக்கும் பதிலாகச் சேவை செய்தல் தொண்டாற்றல் கடமையாகும். "என் கடன் பணி செய்து கிடப்பதே" என்கிறார் அப்பர் பெருமான். கடன், கடமை இரண்டும் ஒன்றே என்பது உணர்தற்பாலது. பெற்றோரின் ஆசியின்றி எதுவும் கைகூடாது. பெற்றோர், மூதாதைகளுக்குச் செய்யவேண்டிய கடமைகள், தொண்டுகள், அவர்களின் இறப்புக்குப்பின்னரும் அவர்களின் புத்திரர்களாலும், வழித்தோன்றல்களாலும் தொடர்ந்து செய்யப்பட வேண்டும் என்பது சைவநெறிகாட்டும் நல்வழியாகும். 'புத்' எனும் கொடிய நரகத்தில் விழாது பெற்றோர்களைக் காப்பவன் என்பதாலேயே புத்திரன் என அழைக்கப்படுகின்றான். தென் புலம் வாழ்நர்க்கு அருங்கடன் என்பது, சிராத்தம், அமாவாசை மற்றும் பௌர்ணிமை விரதங்கள், பிதிர்வழிபாடு, தானதர்மங்கள் என்பவற்றை விதிப்படி நிறைவேற்றுதல் ஆகும். சிரத்தையோடு செய்யப்படுவது சிராத்தம் எனப்படுகிறது. நம்பிக்கையுடன் நன்றாக செய்ய வேண்டிய செயல், எனச் சிராத்தம் என்பதற்குப் பொருள் கொள்வர்.

அமாவாசை, பூரணை ஆகிய விரதங்கள் முறையே காலமான தந்தை, தாய் ஆகியோரைக்குறித்து, அவர்கள் நற்கதியடையப் பிரார்த்தித்து, அவர்களின் பிள்ளைகளால் அனுட்டிக்கப்படுகின்றன. ஒவ்வொரு மாதமும் அமாவாசை, பூரணை தினங்கள் வருகின்றன. அத்தினங்களில் விரதமிருந்து, ஆலய வழிபாடு, பிதிர் வழிபாடு செய்து, தவறாது அனுட்டிக்க வேண்டியது தந்தை தாயார்களை இழந்த பிள்ளைகளின் கடமையாகும். மாதந்தோறும் இவ்விரதங்களை அனுட்டிக்கத் தவறியவர்கள், ஆடி அமாவாசை சித்திரா பூரணை ஆகிய தினங்களில் அவ்விரதங்களை தவறாது அனுட்டிக்க வேண்டும்.

ஆடி அமாவாசை, புரட்டாதி மாதத்தில் வருகின்ற மஹாளய அமாவாசை, தை அமாவாசை, மாசிமாதச் சிவராத்திரி அமாவாசை என்பன சிறப்பானவையாகக் கொள்ளப்படுகின்றன.

சூரியனும் சந்திரனும் ஒரே பாகையில், நேர் கோட்டில் ஒரே இராசியில் சேர்ந்து நிற்கும் காலம் அமாவாசை எனப்படுகிறது. சூரியன் தந்தைக்கும் சந்திரன் தாய்க்கும் உரிய கிரகங்கள். இவைகள் ஒன்று சேரும் அமாவாசைத்தினம் புனிதம் மிக்கது. ஆடி மாதத்தில் கடகராசியில் ஒன்றிணைகின்றன. ஆடி மாத அமாவாசை பிதிர்வழிபாடு செய்து, பிதிர்க்கடன் நிறைவேற்றுதற்குரிய புண்ணிய நாள்.

ஆடி அமாவாசையன்று அதிகாலையில் நித்திரை விட்டு எழுந்து, காலைக் கடன்களை முடித்துக் கடல், நதி, குளம், வாவி, கிணறு போன்ற புண்ணிய தீர்த்தங்களில் நீராடித் தம்மைப் புனிதப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும். தீர்த்தங்களை இறைவனின் அருள் செறிந்த புனித நீராக நினைந்து, தம் முன்னோர்களான பிதுர்களை எண்ணி, அவர்களின் பாவ வினைகளைப் போக்கி அவர்களுக்கு ஆத்ம சாந்தி கிடைக்க இறைவனை வேண்டுதல் செய்து தீர்த்தமாடுதல் வேண்டும்.

விரதமனுட்டிப்பவர், அகப்புறத்தூய்மையுடையராய் விளங்கவேண்டும். ஆசாரம் பேணுதல் முக்கியமானது. நீராடி உடலைச் சுத்தம் செய்தல்; தோய்த்துலர்ந்த ஆடைகளை அணிதல்; வீடு, குசினி, சுற்றாடல் என்பவற்றைக் கூட்டிக் கழுவி அழுக்குகளை நீக்கி, மஞ்சல் நீர் தெளித்து, சுத்தமாக்குதல்; சமையல் பாத்திரங்களை விளக்கிக் கழுவிச் சுத்திசெய்தல் என்பவற்றின் மூலம் புறத்தூய்மையைப் பேணலாம். சாம்பிராணி தூபமிட்டு வீட்டையும் சுற்றுப்புறங்களையும் நறுமணங்கமழச் செய்யலாம். இதற்கு வீட்டிலுள்ள அனைவரும் ஒத்துழைக்கவேண்டியது அவசியம். வீட்டு வாயிலில் நிறைகுடம் வைத்துப் பிதுர்களை மங்களகரமாக வரவேற்கலாம். இப்பொழுது, வீட்டிலே இலட்சுமீகரம் நிறைந்த தெய்வீகச் சூழல் நிலவும் புனிதம் உள்ள இடம், தெய்வ சாந்நித்யம் நிறைந்த இடம் ஆகிவிடும். பார்க்குமிடமெல்லாம் அழகுபொலியும். அது மனத்துக்கு இதத்தையும் இன்பசுகத்தையும் தருவதை உணர முடிகிறது. உள்ளமும் பூரிப்படைகிறது. மன அழுக்குகளும் அப்பொழுது நீக்கம் பெறுகின்றன. உள்ளொளி பெருக, மனந்தூய்மை பெறுகின்றது. மனந்தூய்மையானது சொல், செயல்களிலும் தூய்மையை ஏற்படுத்துகின்றது. சைவ ஆசாரம் பேணப்பட்டால் மனிதரிலும் சரி, வீட்டிலும் சரி, வாழும் சூழலிலும் சரி, அழகும் பொலிவும் தெய்வீகமும் மலர்ச்சிபெறும். பீடைகள் அகன்று விடும்; வீட்டில் விடிவு ஏற்பட்டு விடும்.

மனத்தை நிறைத்துள்ள பொறாமை, பேராசை, கோபம், வஞ்சம், பகைமை, காமம், செருக்கு, பொய்மை போன்ற அழுக்குகள் நீக்கம் பெறும் போதே அகத்தூய்மை ஏற்படுகின்றது. அகத்தூய்மை, புறத்தூய்மை விரத காலங்களில் மாத்திரமன்றி, மற்றைய நாட்களிலும் பேணப்பட வேண்டியது அவசியம். சைவ ஆசாரங்கள் பேணப்படுவதற்கு விரதங்கள் களம் அமைத்துத் தருகின்றன.

விரதம் அனுட்டிப்போர் கடவுளால் விரும்பப்படுபவற்றைச் செய்தலும், வெறுக்கப்படுபவற்றைச் செய்யா தொழித்தலும் சைவ ஒழுக்க ஆசாரமாகும். அதுவே வழிபாடு ஆகவும் கொள்ளப்படுகிறது.

"கடவுளால் விரும்பப்படுபவைகளாவன; இரக்கம், வாய்மை, பொறை, அடக்கம், கொடை, தாய் தந்தை முதலிய பெரியோரை வழிபடுதல், முதலிய நன்மைகளாம். கடவுளால் வெறுக்கப்படுபவைகளாவன: கொலை, புலாலுண்ணல், களவு, கள்ளுண்ணல், வியபிசாரம், பொய், செய்நன்றி மறத்தல் முதலிய தீமைகளாம்," என்று நாவலர் பெருமான் நான்காம் பால பாடத்தில் குறிப்பிட்டுள்ளார்.

விரதம் அனுட்டித்தல் என்பது சைவ ஆசாரம், ஒழுக்கம், விழுமியங்கள் பேணல் ஆகும். விரத நாட்களில் அவற்றைப் பயிற்சி செய்து, ஏனைய நாட்களிலும் அவற்றைப் பேணிவருதலே முறையாகும்.

ஆடி அமாவாசை விரதம் மிக ஆசாரமாகவும் தூய்மையாகவும் மேற்கொள்ளப்பட வேண்டும். சமையல் கூடம், சமைக்கும் பாத்திரங்கள், மரக்கறிகள் யாவும் நீரினால்கழுவிச் சுத்தம் செய்யப்பட வேண்டியது விரத நிபந்தனையாகும். சமைப்பவர்கள் நீராடித் தோய்த்துலர்ந்த ஆடைகளை அணிந்திருத்தல் வேண்டும். அவர்கள் வீண் வார்த்தை பேசுதல்; வெற்றிலை, பாக்கு, புகையிலை என்பவற்றை உண்ணல்; மூக்குச் சிந்துதல்; புகைத்தல் என்பவற்றில் ஈடுபடுதல் ஆகாது. மாமிச உணவுகள் தவிர்க்கப்பட வேண்டும். இறைசிந்தனை, பிதுர் சிந்தனை, நல்ல எண்ணங்கள் என்பவற்றினால் மனம் நிறைக்கப்பட்டிருத்தல் வேண்டும். நாம் பிதுர்த்தெய்வங்களுக்குப் படையல் செய்து, நிவேதிப்பதற்கும்; அதிதி பூசை செய்வதற்கும், அமுது மற்றும் உணவு வகைகளைச் சமையல் செய்கின்றோம் என்ற தூய உணர்வோடு பணியைச் செய்ய வேண்டும். நைவேத்தியம் ஆவதற்கு முன், சிறிதளவேனும் உணவை எடுத்து ருசி பார்ப்பதோ, யாருக்காவது உண்ணக் கொடுப்பதோ ஆகாது. சமையலில் அல்லது சமையல் செய்பவர்களில் தவறுகள் ஏற்படின் அல்லது புனிதத்தன்மை குன்றின், சம்பந்தப்பட்டவர்கள் பிதுர் சாபத்திற்கு ஆளாவர். குளிக்கப் போய் சேறு பூசிக் கொள்ளுதல் ஆகாது. ஆசௌசம் உள்ளவர்கள், வீட்டுக்கு விலக்கான பெண்கள், கர்ப்பிணிகள், நோயுற்றவர்கள் ஆகியோர் விரதத்திற்கான சமையலில் ஈடுபடக்கூடாது. சமையல் என்பதற்கு நன்றாகச் செய்யப்பட்டது; பக்குவப் படுத்தப்பட்டது என்று பொருள் கொள்வர். தலையை விரித்துப் போட்டுக் கொண்டு சமையல் கூடத்திற்குள் செல்லுதலோ, சமையலில் எவ்விதத்திலேனும் பங்கு கொள்ளலோ கூடாது.

உணவு, அதைச் சமைப்பவர், படையல் செய்பவர், உணவைப் பரிமாறுபவர், உண்ணும் இடம், உணவு படைக்கும் தலைவாழையிலை, உண்போர், உடனிருந்து உண்போர் அனைத்தும் தூய்மையாக இருக்க வேண்டும்.

உணவை உண்பதற்கு முன் இறைவனுக்கு நிவேதனம் செய்து, திருமுறைப் பாடல்களை இசைத்து, கற்பூர தீபம் காட்டி, நீர் தெளித்து, காகத்திற்கு ஒரு கவளம் உணவை ஓர் இலையில் படைத்து, உணவு சமைத்து வழங்கியவர்களை வாழ்த்தி, அதிதிகளுக்கும் வழங்கியபின் விரதத்தை மேற்கொள்பவர், உண்ணும் முறையறிந்து, அளவோடு உண்ணுதல் முறையாகும்.

அறுசுவைகளும் அடங்கியதாக உணவு அமையும். கத்தரிக் காய், வாழைக்காய், பயற்றங்காய், பாவற்காய், பூசணிக்காய், பயற்றம் பருப்பு, கருணைக் கிழங்கு, பலாக்காய், அவரைக்காய், புடலங்காய், மாங்காய், தேங்காய், எலுமிச்சம் பழம், இஞ்சி, கறிவேப்பிலை, கடுகு, சீரகம், கறுப்பு எள், மிளகு, வெல்லம் ஆகியன விரதம், சிராத்தம் என்பவற்றிற்கான உணவு சமையலில் சேர்க்கப்படக்கூடியன. பசுநெய், நல்லெண்ணெய் பயன்படுத்தப்படலாம். பலகாரங்கள் செய்வதற்கு இவை ஏற்றவை. தேங்காயெண்ணையைப் பயன்படுத்துவதிலும் தவறில்லை. பிரண்டை, கீரை, காத்தோட்டியங்காய் என்பன ஆடி அமாவாசை விரதம், சிராத்தம் என்பவற்றிற் விசேடமாகச் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டியவை. அந்தணர்களுக்குத் தானம் வழங்குவதற்கும் அரிசியோடு இக் காய்கறிகளுமே சேர்த்துக் கொள்ள வேண்டும்.

ஆடி அமாவாசைக்கும் காத்தோட்டயங்காய்க்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. இச்செடி ஒரு வருடத்தில் ஒருமுறையே பூத்துக் காய்க்கின்றது. ஆடி மாதத்திலேயே இது நிகழ்கிறது. யாழ்ப்பாணக் குடா நாட்டுப் பகுதிகளில் தான் தோன்றியாக, இச் செடி முளைத்து வளர்ந்து காய்க்கின்றன. இக்காய் கசப்புச் சுவையுடையது. மருத்துவ குணமுமுடையது. ஆடி அமாவாசை விரத உணவில் காத்தோட்டியங் காய்ப் பொரியல் இடம் பெறுதல் நம்மவரிடையே ஒரு மரபு ஆகி விட்டமை குறிப்பிடத்தக்கது.

விரதம், சிராத்தத்திற்குத் தவிர்க்கப்படவேண்டிய காய்கறிகள்: முருங்கைக்காய், வெண்டிக்காய், சுரைக்காய், கொள்ளு, கடலை, துவரை, பெருங்காயம், உருளைக் கிழங்கு மற்றும் இராச குணத்தை விருத்திசெய்யும் காய்கறி கிழங்கு வகைகள் என்பன.

தெய்வமாகிவிட்ட முன்னோர்கள் சாந்த சாத்வீக குணம் உள்ளவர்கள். எனவே சாத்வீகமான காய்கறிகள் பழங்கள் கிழங்குகள், மற்றும் உணவு வகைகளையே சமையல் செய்து தென்புலத்தார் ஆகிவிட்ட நம்முன்னோர்களுக்கு படையல் செய்ய வேண்டும்.

வேறு ஏதேனும் தவிர்க்க முடியாத காரணங்களினால் அல்லது தந்தையின் இறந்த திதியே இன்னது என்று தெரியாமல், உரிய சிராத்த மாதத் திதியில் சிராத்தம் செய்யத் தவறியவர்கள் ஆடி அமாவாசைத் தினத்தன்று சிராத்தம் செய்து பிதிர்க் கடனை நிறைவேற்ற வேண்டும். அதே போன்று, தாயாரின் இறந்த திதியைத் தவற விட்டவர்கள், சித்திராபூரணையன்று தாயின் பொருட்டுச் சிராத்தம், தருப்பணம், பிண்டதானம் என்பவற்றைச் செய்யும் வழக்கம் உள்ளது. சிராத்தம் என்பதை திவசம், திதி என்னும் பெயர்களாலும் அழைப்பதுண்டு. ஒருவர் இறந்த மாதம், பட்சம், திதியில் சிராத்தம் செய்யப்படவேண்டும் என்பதுதான் விதிமுறை. ஆண்டு தோறும் சிராத்தமும்; புரட்டாதி மாதத்தில் வரும் மஹாளய பட்சத்தில், மஹாளய சிராத்தமும் செய்து இறந்த தாய், தந்தை மற்றும் முன்னோர்கள் ஆத்ம சாந்தி பெறவும், நற்கதியடையவும் வேண்டுதல் செய்வது பிள்ளைகளின் கடமையாகும். இவ்வாறு செய்வதால் பிதுர்கள் மகிழ்ச்சியடைந்து நல்லாசிகளை வழங்குவர். நல்லாசிகள் பிள்ளைகளை வாழ்விப்பன.

சிராத்தம், தர்ப்பணம், பிண்டதானம், அன்னதானம், பிதிர்வழிபாடு என்பவற்றை அந்தணர்களின் வழிகாட்டலில் வீட்டில் செய்யலாம். ஆலயம், திருமடம்; புனித நதிக்கரை, சமுத்திரக்கரை ஓரங்கள் போன்ற புனித இடங்களிலும் சிராத்தம் முதலிய அருங்கடன்களை நிறைவேற்றலாம். காசி, இராமேஸ்வரம், கன்னியாகுமரி மற்றும் அயோத்தியா, மதுரா, மாயா, காசி, காஞ்சி, அவந்தி, துவாரகா ஆகிய சப்த தலங்களிலும் ஒரு முறையாவது சிராத்தம், தர்ப்பணம், பிண்டதானம், எள்ளுந்தண்ணீரும் இறைத்தல், பசுத்தானம் என்பவற்றை நிறைவேற்றுதல், இறந்த ஆத்மாக்களுக்கு பெருஞ்சாந்தியளிப்பதாக அமையும். அவர்களின் பழ வினைகள் நீங்கிவிடும் எனச்சாத்திர நூல்கள் கூறுகின்றன.


இலங்கையில் கீரிமலை நகுலேஸ்வரம், மட்டக்களப்பு அமிர்த கழிமாமாங்கேஸ்வரம், திருக்கேதீஸ்வரம், திருக்கோணேஸ்வரம், கன்னியா நீரூற்று மற்றும் கொழும்பு முகத்துவாரம் ஆகிய புனித தலங்களில் ஆடி அமாவாசைத் தினத்தில் தீர்த்தமாடுதல் சிராத்தம், பிண்டதானம் செய்தல் பிதிர் வழிபாடு, தர்ப்பணம் என்பன மிகவும் சிறப்பாக நடைபெறுகின்றமை குறிப்பிடத்தக்கது. சிவாலயங்களில் இறந்தவர் ஆத்மசாந்திக்காக, பிள்ளைகள், உற்றார் உறவினர்கள் மோட்ச அருச்சனை செய்து வழிபாடு செய்யும் வழக்கமும் உண்டு.

கடந்த காலங்களில் இலங்கையில் நடைபெற்ற போர், வன்செயல்கள், விபத்துக்கள்காரணமாக அகாலமரணம்எய்தியவர்களுக்கு அவர்களின் ஆத்மா சாந்தியடைய வேண்டி அபரக்கிரியைகளை நிறைவேற்றவோ; சிராத்தம், தர்ப்பணம், பிண்டதானம், மோட்ச அர்ச்சனை செய்யவோ; தானதர்மங்கள் புரியவோ உறவினர், உற்றார், பிள்ளைகள் எவரும் இல்லாதிருக்கலாம். நாங்கள் ஆடி அமாவாசைத்தினத்தன்று, எங்கள் முன்னோர்களின் ஆத்மசாந்திக்கு, விரதம், சிராத்தம், தர்ப்பணம் என்பவற்றை நிறைவேற்றிப் பிரார்த்திக்கும் போது, அந்த அகால மரணத்தைத் தழுவிக் கொண்டவர்களின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்தனை செய்வதும், அவர்களை நினைந்து, அவர்கள் நற்கதி அடையவேண்டி மோட்ச அர்ச்சனை, மற்றும் கிரியைகளை மேற்கொள்வதும் புண்ணிய காரியங்கள் ஆகும். அவ்வாறு செய்வது நமது அருங்கடனாகக் கொள்ள வேண்டும்.

விரதம், சிராத்தம் என்பவற்றை மேற்கொள்பவர், மனம், மொழி, மெய்த் தூய்மையாளராக இருந்து அவற்றை நிறைவேற்றினாலேயே, பிதுர்கள் ஏற்று, மகிழ்ந்து ஆசி வழங்குவர், அகத்திலும் புறத்திலும் தூய்மை பேணப்பட வேண்டியது விரத, சிராத்த நிபந்தனையாகும். உபவாசம் இருந்தே இவற்றைச் செய்யவேண்டும். உணவு உண்ணாமலும், நீராகாரங்களை அருந்தாமலும் அவற்றைத் தவிர்த்து இருத்தல் உபவாசம் ஆகும். உபவாசம் என்பதற்கு மற்றொரு பொருள் உடன் உறைதல் என்பதாகும். இறைவன், நம் பெற்றோர், முன்னோர் ஆகியோரை நம் மனதில் இருத்தி, அவர்கள் சிந்தனையில் மூழ்கி, அவர்களுடன் வாசம் செய்தல் என்று விளக்கம் கூறலாம்.

சிரத்தையோடு சிராத்தம், விரதம் என்பவற்றை இறந்தமுன்னோர்கள் மற்றும் நீத்தார் ஆகியோரை நோக்கி மேற்கொள்ளும் போது, இறந்த ஆன்மாக்கள், பாசங்களினின்றும் நீங்கிச் சிவத்துவம் அடைய வழிபிறக்கும் என்பது நம்பிக்கை. இதுவே, பிள்ளைகள் தம் தாய், தந்தையர்க்குச் செய்யும் பேருதவியாகும். "இவன் தந்தை எந்நோற்றான் கொல் எனுஞ் சொல்", எனும் வள்ளுவர் வாக்கு, அப்போது பொய்யாமொழி ஆகி விடுகின்றது. ஆடி அமாவாசையின் மகத்துவத்தை உணர்ந்து அத்தினத்தில் விரதமிருந்து, தென்புலத்தாருக்கு அருங்கடன் நிறைவேற்றி இயன்ற தான தருமங்கள் செய்து, அவர்களின் நல்லாசிகளைப் பெற்று உய்வு பெறுவோமாக.

# நந்தி



ஆர். கே. பார்வதிஅம்மா
மல்லாகம்

நந்தியும் நம்தெய்வமாகிய சிவபிரானும் ஒன்றிலிருந்து ஒன்றைப் பிர்க்க முடியாத அளவு இரண்டறக் கலந்துள்ளமை யாவரும் அறிந்த உண்மை. சிவன் கோவில்களில் மூலஸ்தானத்துக்கும், கொடிஸ்தம்பத்துக்கும் இடையே மத்தியில் நந்தி பலிபீடத்துக்கு நைவேத்தியம் வைத்து பூசை செய்வதும், வணங்குவதும் வழக்கம்.

சிவனுக்குரிய முக்கிய விரதமாகிய பிரதோஷ காலப் பூசையில் நந்தியெம்பெருமானுக்கே முக்கியமாக பூஜை அர்ச்சனைகள் செய்வது வழக்கம். நந்தி பெருமானின் இரு கொம்புகளின் மத்தியில் சிவபெருமான் திருநடனம் புரிவதாக ஐதீகம்.

'ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தி னிளம்பிறை போலு மெயிற்றனை
நந்தி மகன்தனை ஞானக் கொழுந்தனை
புந்தியில் வைத்தடி போற்று கின்றேனே.'

என்பது திருமந்திரம். விநாயகர் வழிபாட்டில் திருமூலர் கூறும் விதத்தில் நாம் பார்க்கப்போனால் "நந்தி மகன்" என விநாயகரைக் குறிப்பதாக பொருள் வருகிறது. எனவே சிவபிரானை நந்தியெம்பெருமானாகவே அவர் குறிப்பிடுகிறார், எனவே நந்தியும், நம்பிரானும் ஒன்றே என நம் சைவப்பெருமக்கள் உணர்ந்து வழிபாடாற்றுவதைக் காணலாம்.


## இந்து ஒளி (காலாண்டிதழ்)

இந்து சமய அறிவைமேம்படுத்தும் வகையில் அமைந்த கட்டுரைகள் கவிதைகள், ஆன்மீக புராணக்கதைகள் உட்பட பல பயனுள்ள அம்சங்களுடன் மாமன்றத்தின் காலாண்டிதழாக கடந்த பதினைந்து வருடங்களாக தொடர்ந்து வெளிவருகிறது.

| | |
|---|---|
| பிரதி ஒன்றின் விலை | ரூபா 50.00 |
| வருடாந்த சந்தா | ரூபா 200.00 |
| தபாற் செலவு (நான்கு இதழ்களுக்கு) | ரூபா 100.00 |

வருடச் சந்தா செலுத்தி இந்து ஒளி சஞ்சிகையை தபால் மூலமாக பெற்றுக்கொள்ளலாம். ஒரு வருடத்திற்குரிய நான்கு வெளியீடுகளுக்கான (50/=×4) 200 ரூபா பணத்துடன் தபாற்செலவுக்கான மேலதிக கட்டணமாக 100ரூபாவையும் சேர்த்து 300/= ரூபாவுக்கான காசோலையை அனுப்பி வைக்கலாம். காசோலையில் பணம் பெறுபவர் என்பதில் ALL CEYLON HINDU CONGRESS என எழுத வேண்டும். அதே வேளை ஏதாவது ஒரு இலங்கை வங்கிக் கிளையில் அகில இலங்கை இந்து மாமன்றத்தின் இலங்கை வங்கிக் கணக்கு இலக்கமான 003268512க்கு வைப்புச் செய்தும் இந்து ஒளியைப் பெற்றுக் கொள்ளலாம். பணம் பெறுவர் என்ற இடத்தில் ALL CEYLON HINDU CONGRESS என எழுத மறவாதீர்கள். வங்கி மூலமாக பணம் அனுப்புவோர், வங்கியில் பணம் வைப்புச் செய்த பற்றுச் சீட்டின் பிரதியொன்றினை உங்கள் பெயர் முகவரியுடன் அனுப்பிவையுங்கள்.

பொதுச் செயலாளர்
அகில இலங்கை இந்து மாமன்றம்
91/5, சேர் சிற்றம்பலம் ஏ. கார்டினர் மாவத்தை
கொழும்பு 02
எமது தொலைபேசி இலக்கம் 0112434990



# AADI AMAVASAI

***BRAHMASHRI, M. BALAKAILASANATHA SARMA***
***Senior Lecturer, Eastern University,***
***Researcher, Kasi Hindu University, Varanasi***

Aadi Amavasai, (Amavasya or New Moon Day) a day sacred to obsequies for those who are manes. Dedicated to forefathers "Tarpan" (to fulfill) is performed by many. Special Atma Santhi prayers and Anna Dhanam are organized as a tribute to the deceased which are supposed to guard the lineage of families.

'Amavasai' or 'Amavasya', denotes the new moon night. It is the first night of the first quarter of the lunar month which holds great importance in Hinduism. Many Hindus choose this day to make offering (tharpanam) to the deceased in their families.

The fortnight that starts with Amavasai is also referred as the Shukla Paksham (bright half of the month). The following Amavasais are highly auspicious :

* Aadi Amavasai - (Shravan or July - August)

*Thai Amavasai - (Magh month or January - February)

*Mahalaya Amavasai in Purattasi (Ashwayuja month or September-October) Symbolically, the period from Amavasai (New moon) to Pournami (Full moon) is considered to be from darkness to the gradual realization of the Supreme Soul.

**Amavasya**

From Wikipedia, the free encyclopedia Amavasya is the Indian name for a New moon. The word Amavasya is common to many Indian languages especially Sanskrit, Hindi, Assamese, Kannada, Bengali, Konkani, Marathi, Oriya, Telugu, and Gujarati. In Tamil, though amavasya is commonly used in religious spheres, the pure tamil scholars prefer the term "puthuppirai"

There is a natural upsurge of energies in the human body on these days. As a result, in the tradition, Amavasya (New Moon) and Pournami (Full Moon) days are held as special days for the spiritual seeker. Any sadhana performed on these days has a greater impact on the system. As the Amavasya vibrations are especially conducive for men and similarly, as the Pournami vibrations are particularly conducive for women.

Every month, the new-moon day is considered auspicious for the worship of forefathers and poojas are made. However, no travel ought to be scheduled the first day of the new moon, as travel without moonlight in tbe ancient times was forbidden.

The dark fortnight of Aswayuja (September-October) is known as the Pitru Paksha (Mahalaya) or the fortnight specially sacred for offering oblations to the departed ancestors. The last day of this period, the new moon day, called as mahalaya amavasya is considered as the most important day in the year for performing obsequies and rites. The manes return to their abode on the evening of Deepavali. Due to the grace of the Yama, it has been ordained that offerings made during this period benefit all the departed souls, whether they are connected to you or not.

Aadi Amavasai falls on July 30th 2011 {Saturday).It is when you express your gratitude to your fore fathers-ancestors are the reason behind your existence and status today. Pray to them to fortify your generations for years to come. New Moon on a Monday combination brings a special energy to the earth plane-any Tarpanam ritual done on this day immensely satisfies your ancestors and as a result they bless you with abundant gifts and fortune for the future.

Astro Veda has identified special services for you on these power days to rejuvenate your life with happiness and peace - Aadi Karthigai.

Aadi Amavasai, a day sacred to obsequies for the manes. This special day is dedicated to our forefathers, which is observed annually during the Tamil month of July. The new moon in the Tamil month of Aadi is observed with special prayers, poojas and offering of food to the forefathers. Amavasai is a new moon begins its new cycle.

This year Aadi Amavasai will be observed on July 30th 2011.Keerimalai in Jaffna Peninsula is popular for Aadi Amavasai. A special vegetable called "Kaaththottikaai", which get a bitter taste, is consumed on this special day. It's specially sold on this day in Jaffna.

Hindus gather in Crow Island, Colombo 15 to pray for their forefathers while carrying out religious rites. The religious rites are being conducted by the Saiva Kurukkal (who carries out funeral rites of the Hindus) on the shore individually. Some worshippers offer vegetables and rice to the Saiva Kurukkal. The worshippers begin to come to the sea at dawn to take a

holy dip. They are given sesame seeds to throw into the sea. After taking a dip in the holy sea, they go to the temples to pray for their forefathers. The weather will be gloomy. Ghee lamps will be lit; manthras will be chanted; bells begin to toll. Motchcha Archcanais (which is performed for the dear departed loved ones.) will be performed for the souls to rest in peace. Devotees throng the temples in thousands. Some worshippers offer tonsure on this day.

It's also believed that, Chithra Pournami, which falls in April is dedicated to late mothers. And Aadi Amavasai, which falls in July is dedicated to late fathers. Young unmarried girls and married women usually do not take part in rites carried out on these days. Elderly women who have lost their husbands participate in the religious rites.

Aadi Amavasya is the no moon day in the Tamil month of Aadi and is considered highly auspicious for performing rituals to the dead like Shradh and Tarpan. Aadi Amaavasai 2011 date is July 30. The day is also auspicious to Lord Muruga. Important rituals on the day include performing rites for dead ancestors in sacred Teerths and riverbanks and also taking a holy dip in sacred rivers and spots.

Devout Hindus perform holy bath in various scared rivers, seas and sacred ponds or TEERTHAMS in Tamil Nadu. Thousands of Hindus take a holy dip and perform rites to the dead ancestors at Agni Theertham in Rameswaram, Thriveni Sangamam in Kannyakumari and various holy spots on the banks of Cauvery River.

Fasting on Aadi Amavasai is considered highly beneficial and some people only have a single meal on the day.

Aadi month is of great importance to Lord Muruga and on Amavasai day special abhishekams and pujas are held. It is also widely believed by Muruga devotees that one will be purified and all sins will be washed away by taking a holy dip in the Shanmuga River in Palani on the Aadi Amavasya day. As a mark of respect and thanksgiving people also tonsure their head at Palani Muruga Temple on the day.

Aadi Amavasai, a special day dedicated to our forefathers and ancestors, is observed annually during the Tamil month of July-August. This year it falls on July 30th Saturday.

The new moon (amavasai) in the Tamil month of Aadi is observed with special prayers, poojas and offering of food to the forefathers

The new moon day is considered something special in almost all civilizations. Some people believed that this day relates to demonic qualities and some other think as auspicious and benevolent. In Hindu'community, the two Amavasya considered most important are "Aadi Amavasya" and "Thai Amavasya". On Aadi Amavasai day Hindus perform "Tharpanam."

Taking a holy dip in a river is considered a pre-requisite for performing a Tharpanam, as it is believed that all one's physical as well as mental impurities are washed away by doing so. Devotees take a holy dip in the various sacred rivers, seas and sacred ponds or Teerthams on this day .

The day is also auspicious to Lord Muruga. Special poojas and abhishekams are conducted at all temples especially at Lord Muruga temples.

Amavasya or Amavasai is the tamil version of New moon day. The new moon day is considered something special in almost all civilizations. Some people believed that this day relates to demonic qualities and some other think as auspicious and benevolent. In Hindu community, the two Amavasya considered most important are'Aadi Amavasya" and "Thai Amavasya".

Devotees take a holy dip in the various sacred rivers, seas and sacred ponds or Teerthams on this day. Especially, most of the devotees thronged Agni Theertham a.k.a Rameswaram (Rameshwaram - Ramanatha @ Ramalinga Swamy Temple) on this auspicious day to take a holy dip and offer Tharpanam to their ancestors. They are given sesame seeds to throw into the sea. After taking a dip in the holy sea, they go to the temples to pray for their forefathers. Lots of thousands of devotees go to temple on this day. Special poojas and abhishekams are conducted at all temples especially at Lord Muruga temples .

## Astrologically Unique New Moon

This New Moon has great significance because both the Sun as well as the Moon are placed in the same sign Cancer. Again, Cancer is the sign of Moon, it indicates Mother, and is very favorable to Sun.

Also, as per Vedic tenets, the Sun signifies your Father and soul, while the Moon represents your Mother and mind. Since the planets denoting your parents are together in a beneficial sign, **your departed ancestors are most pleased during this time and can bestow fortunes on you.**

## The New Moon of Transformation

The Aadi month is the month of transformation, as it marks the beginning of the Dakshinayana period (southern transit of the Sun) which is considered as the night time for the celestial beings (one human year equals one day for divine).

There are, 96 special days in the year for honoring one's departed ancestors. Of these, Aadi Amavasai is not to be missed, as this is the first New Moon in the Aadi month and the first New Moon of Dakshinayana. Since Dakshinayana is also called Pitrayana (the period of the Pithrus or ancestors), the blessings of the departed ancestors are abundantly available during this time to transform your life.

### A Most Powerful New Moon

When a New Moon falls on Monday (or Moon's Day), it signifies a very rare auspicious time. It can happen once a year, or once in two years or so. When this combination of New Moon and Monday occurs, it brings a special energy to the earth plane.

On this day, the departed ancestors are said to look after their living descendants. Any Tarpanam ritual done on this day immensely satisfies the ancestors and, as a result, they are willing to empower and fulfill the desires of their descendants.

### AstroVeda 'Aadi Amavasai' Offerings:

On the occasion of Aadi Amavasai we are organizing special Tarpanam ritual for those who want to honor the souls or their departed ancestors, including father, mother, paternal and maternal grandparents.

Aadi Amavasai or Aadi Amavasya is the No Moon day in Aadi month (August) as per Tamil calendar. This day is dedicated to forefathers and dead ancestors. Aadi Amavasai 2011 date is July 30, Saturday. Amavasya is considered very auspicious day in Tamil calendar and Aadi Amavasya is highly auspicious. Aadi Amavasai special pujas are performed in all temples in Tamil Nadu. Tamil people offer their prayers and pujas to their forefathers and dead ancestors. Amavasya Tharpanam and other rituals are observed on Aadi Amavasai day.

The similar ritual is performed as Karkidaka Vavubali in Kerala and Haryali Amavasya (Shravan Amavasya) in North India. It is Ashada Amavasya as per Marathi, Gujarati, Telugu, and Kannada calendars. It is known as Gatari Amavasya in Maharashtra, Chukkala Amavasya in Andhra Pradesh, Bheemana Amavasya in Karnataka, and Chitlagi Amavasya in Odisha.



## நடராஜர் அபிஷேகம்

ஆண்டுதோறும் ஆடல் வல்லோனாகிய நடேசப்பெருமானுக்கு ஆறு அபிஷேகங்கள் சிறப்பாக இடம்பெறும். அவை சித்திரையில் திருவோண நட்சத்திரத்தன்று, ஆனியில் உத்தர நட்சத்திரத்திலும், ஆவணியில் பூர்வபக்க சதுர்த்தியன்று, புரட்டாதியில் பூர்வ பக்க சதுர்த்தியன்றும், மார்கழி மாதத்தில் வரும் பூர்வபக்க சதுர்த்தியன்றும் சிவாலயங்களில் சிறப்பாக அபிஷேகங்கள் நடைபெறுவதுண்டு. அகில இலங்கை இந்து மாமன்றத்தில் [7.7.2011] வியாழக்கிழமை ஆனி உத்தரத்தில் சிவகாமிஅம்பாள் சமேத நடராஜப்பெருமானுக்கு விசேட அபிஷேக ஆராதனைகள் நடைபெற்றன. சமய விவகாரங்கள், விழாக்களுக்கான தலைவர் க.ஜெகதீசன் அவர்களின் அனுசரணையில் இடம்பெற்றது. மாமன்ற அபிஷேகத்தினை ஸ்ரீ காந்தக்குருக்கள் நடாத்தி வைத்தார்கள்.

## மாணிக்கவாசகர் குருபூஜை



அகில இலங்கை இந்துமாமன்றமும், ஈழத்திருநெறித் தமிழ்மன்றமும் இணைந்து மாணிக்கவாசகர் குரு பூசையை கடந்த ஜூன் 5ம் திகதியன்று மாலை பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நடத்தியிருந்தன. நந்திக் கொடியேற்றல், விநாயகர் அகவல், பஞ்சதோத்திரம், தீபாராதனை என்பன இடம்பெற்றன. அதனைத் தொடர்ந்து மாமன்ற சமய விவகாரக்குழுத் தலைவர் கந்தையா ஜெகதீசன் அவர்கள் தலைமையுரையும், வர வேற்புரையும் நிகழ்த்தினார்கள். சங்கீத கலா வித்தகர் வி.கணேசலிங்கம் அவர்களின் வழிகாட்டலில் அடியார்களின் திருவாசக ஓதல் சிறப்பு அம்சமாக இடம்பெற்றது. தொடர்ந்து பாமன்கடை இராமகிருஷ்ண வித்தியாலய மாணவன் பேரின்பஜோதி ஜெயபிரசாந்தின் உரையும், இரத்மலானை இந்துக்கல்லூரி மாணவியின் உரையும் இடம் பெற்றன. சிறப்புச் சொற்பொழிவாக 'திருவாசகமெனும் தேன்' எனும் தலைப்பில் திருமதி இராஜேஸ்வரி ஜெகானந்த குரு அவர்கள் உரையாற்றினார்கள். மாமன்ற பொதுச் செயலாளர் கந்தையா நீலகண்டன் அவர்களின் நிறைவுரையும் இடம்பெற்றது.

# 'சமூகத்தின் சமய ஆற்றலை வெளிப்படுத்தவே சிவதொண்டர் மாநாடு'



**யாழ் சிவதொண்டர் மாநாட்டில் மாமன்றத் தலைவர் மனிதநேயமாமணி, இந்துசிரோரத்தினம் வி. கயிலாசபிள்ளை அவர்கள் ஆற்றிய உரை**

இந்து சமய வரலாற்றுப் பின்னணி பற்றி பெரும்பாலானவர்கள் அறியவும் அதன் பெருமைகளைப் புரிந்து கொள்ளவும் அகில இலங்கை இந்து மாமன்றம் பல நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. அந்நடவடிக்கையில் ஒன்றே சிவதொண்டர் மாநாடாகும்.

நினைப்பவர் மனம் கோயிலாகக் கொண்டவன் இறைவன். இதனால்தான் தொண்டர்கள் பெருமை ஆண்டவனின் பெருமையிலும் பார்க்க விஞ்சி நிற்கிறது. இத்தகைய பெருமையுடையவர்களைப் பற்றி பெரிய புராணம் போற்றுகிறது. தொண்டர்களின் உள்ளமே ஆண்டவனுக்குரிய இடமாகும். இறைவன் திருவருள் எங்கும் நிறைந்திருந்தாலும் சிறப்பாக வெளிப்பட்டு விளங்குவது சிவதொண்டர்களிடத்திலேயே. இதனையே நீதிவெண்பா நூல் அழகாக விளக்குகிறது. வெப்பமான சூரிய ஒளியில் நின்றாலும் நிற்கலாம். அவ்வொளி பெற்று வெப்பமாக விளங்கும் மணலின் மேல் நிற்கமுடியாது. இதேபோல இறைவனுடைய அருளாற்றலிலும் பார்க்க அவ்வருளைப்பெற்று நிற்கும் தொண்டர்களின் அருளாற்றல் வியக்கத்தக்கது.

*'ஈசனெதிர் நின்றாலும் ஈசனருள் பெற்றுயர்ந்த*
*நேசனெதிர் நிற்பதரிதாமே – தேசுவளர்*
*செங்கதிர் முன் நின்றாலும் செங்கதிரவன் கிரணம்*
*தங்குமணல் நிற்பதரிதே தான் '*

என நீதிவெண்பா கூறுகிறது. இந்த வகையில் நாம் எமது சமுதாயம் சமயநெறிமுறைகளை ஐயந்திரிபுற தெரிந்து கொள்ளவும் வழிபாடுகள், வழிபாட்டு முறைகள், ஆகமங்கள் பற்றி தெளிவாக தெரிந்திருக்கவும் அதற்கேதுவான நூல்களை வெளியிட்டு வருகின்றோம். தற்போதெல்லாம் நம் மக்களிடையே சமயப்பற்று, ஆர்வம் என்பன குறைந்தே காணப்படுகிறது. கடந்த காலங்களில் நாம்பட்ட துன்பமும் இடம்பெயர்வும், இழப்பும், இயற்கை அனர்த்தமும் ஒரு காரணமாக இருக்கலாம். இதனை இப்படியே விட்டுவிட முடியாது. எமது சமூகத்தின் சமய ஆற்றலை வெளிக்கொணர்ந்து விழிப்புணர்வை ஏற்படுத்தவே நம் நாட்டில் பல்வேறு பகுதிகளிலும் சிவதொண்டர் மாநாட்டை ஏற்பாடு செய்து வருகிறோம். சமயப் பெரியார்களின் அறிவார்ந்த சமய உரைகளின் மூலம் எமது சமூகத்தில் விழிப்புணர்வையூட்டல், சிவதொண்டர் அணிமூலம் எமது சமயப்பணியின் பொறுப்பினை உணர்த்துதல் என்பது எமது உடனடித் தேவையாக இருக்கிறது. இவை தவிர அகில இலங்கை இந்து மாமன்றம் சமூக, சமய, கல்வி, மனிதாபிமானம், மருத்துவம் என பல்வேறு பணிகளில் தன்னை அர்ப்பணித்து வருகிறது. நாம் மட்டுமல்ல ஏனைய எமது இணை நிறுவனங்களும் இதில் ஈடுபட்டு வருகின்றன. இதில் மேலும், பல நிறுவனங்களும் தனிநபர்களும் இணைந்து சமூக, சமய தொண்டினைச்செய்து நமது சமுதாய நல்வாழ்வுக்கும் சமய மறுமலர்ச்சிக்கும் உழைக்க வேண்டும் என்பதே எமது அவா!

அகில இலங்கை இந்து மாமன்றம் யாழ் மண்ணில் கட்டிடம் அமைத்து இந்து கலாசார நிலையம் நிறுவி சைவவித்தகர் பயிற்சி ஆரம்பித்து இருக்கிறோம். இப்படியான நல்ல திட்டங்களை இந்த மண்ணில் மாமன்றம் செய்ய உறுதுணையாக இருப்பவர் எமது மாமன்ற உப தலைவர் செஞ்சொற்செல்வர் ஆறு. திருமுருகன். ஸ்ரீ துர்க்கை அம்மன் ஆலய தேவஸ்தான நிர்வாக சபைத் தலைவராக அவர் செய்யும் ஆன்மிகத் தொண்டு சிறப்பானது. தெய்வத்திருமகள் சிவத்தமிழ்ச்செல்வி அம்மையாரின் வழியில் அரும் சேவையாற்றுகிறார். அதற்கும் மேலாக சிவபூமி அறநிதியம் அமைத்து சிவபூமி வயோதிபர் இல்லம், சிவபூமி மனவளம் குன்றிய பிள்ளைகளைப் படிப்பிக்கும் பாடசாலை என பல அரும் மனிதநேய பணிகளைச் செய்து வருகிறார்.

யாழ் மண்ணில் செய்து வரும் பல மனிதநேய பணிகளை குறிப்பாக யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் வன்னியிலிருந்து வந்தவேளை அவர்களுக்கு உதவி அதேவேளை சிறுவர்கள், முதியோர்கள் என எல்லோருக்கும் உதவி செய்வதில் அவர் மிகவும் ஈடுபாட்டுடன் உழைக்கிறார்.

எனவேதான், அகில இலங்கை இந்து மாமன்றமும் மனிதநேயமும் அவரை என்றும் மெச்சி ஆதரவும் உதவியும் நல்கிவருகிறது. அவரின் 50 ஆவது அகவையில் அவரை இந்து ஆராய்ச்சி நிலைய கௌரவ இயக்குநராக நியமிப்பதில் பெருமை காண்கிறோம். ஆண்டவன் அருளால் அவர் பல ஆண்டுகள் வாழ்ந்து இம் மண்ணில் நல்ல சேவை செய்யப் பிரார்த்தித்து அவரை வாழ்த்துவதுடன் இம்மாநாடு சிறப்புறவும் வாழ்த்துகிறேன்.

## நல்லூரிற் கந்தப்பா போற்றி!

ஆனைமுகற் கிளையவனே போற்றி போற்றி
அம்பலவா ணன்மகனே போற்றி போற்றி
வானவர்கள் அறியாத மணியே போற்றி
மருவுமடி யார்க்குதவும் மருந்தே போற்றி
தேனமுதத் தமிழ்தந்த செல்வா போற்றி
தெய்வகுஞ் சரிவள்ளி கணவா போற்றி
ஞானமறை தந்தருளும் நாதா போற்றி
நல்லூரிற் கந்தப்பா போற்றி போற்றி!

# யாழ்.சிவதொண்டர் மாநாட்டில் பிரதம விருந்தினர் ஓய்வுபெற்ற உச்ச நீதிமன்ற நீதியரசர் சி. வி. விக்னேஸ்வரன் அவர்கள் ஆற்றிய உரை



**அகண்ட மண்டலாகாரம் வியாப்தம் யேன சராசரம்**
**தத்பதம் தர்சிதம் யேன தஸ்மை ஸ்ரீ குரவே நமஹ.**

அன்பார்ந்த சகோதர, சகோதரிகளே, இளைஞர், யுவதிகளே!

மீண்டும் ஒருமுறை இந்த ஸ்ரீதுர்க்காதேவி மணிமண்டபத்தில் பேசக் கிடைத்த வாய்ப்பையிட்டுப் பெருமையடைகின்றேன். அதுவும் தன்னை மறந்த சுயநலமற்ற தொண்டுக்கு எடுத்துக் காட்டாக விளங்கிய **துர்க்கா துரந்தரி தங்கம்மா அப்பாக்குட்டி** அம்மையாரின் நினைவை நிலைக்க வைக்கும் இந்த ஸ்ரீ துர்க்காதேவி மணிமண்டபத்தில் இந்த மாநாட்டை ஒழுங்கு செய்தமை சாலச்சிறந்தது.

கேட்போர் பலர் பசியோடு போராடும் நேரத்தில்த்தான் எங்களுள் சிலரை பேச வைக்கின்றார்கள். இன்றும் அப்படித்தான். இவ்வாறு எங்களை வைத்து உங்களைச் சோதனையில் ஆழ்த்தும் இந்த ஏற்பாட்டாளர்கள் பாவகாரியத்தைச் செய்து விட்டு "இல்லையே! நாங்கள் செய்வது புண்ணியம்" என்று மறுத்துக் கூறுகின்றார்கள். உங்கள் பசியை எந்தளவுக்குப் பொறுத்துக் கொள்கின்றீர்களோ அந்த அளவுக்குத்தான் அவர்களுக்குப் புண்ணியம். பொறுக்க முடியாது போய்விட்டால் பாவமானது அவர்களை ஆக்கிரமித்துக் கொள்ளும் என்று கூறி இந்தப் பிரதம விருந்தினர் சிறப்புரையைத் தொடங்குகின்றேன்.

இது ஒரு தொண்டர் மாநாடு. தொண்டரைப் பற்றி ஔவையார் கூறியதை முன்பொரு முறை இதே மண்டபத்தில் கூறியதாக ஞாபகம்! அதாவது :-

***பெரியது கேட்கின் எரிதவள் வேலோய்***
***பெரிது பெரிது புவனம் பெரிது***
***புவனமோ அரவினுக் கொருதலைப்பாரம்***
***அரவமோ உமையவள் சிறுவிரல் மோதிரம்***
***உமையோ இறைவர்தம் பாகத்தொடுக்கம்***
***இறைவனோ தொண்டர் தம் உள்ளத்தொடுக்கம்***
***தொண்டர் தம் பெருமை சொல்லவும் பெரிதே.***

என்றார் ஔவையார்.

ஒரு மனிதர் தொண்டராகப் பிறப்பதில்லை. ஆனால் தொண்டராக மாறுவதற்குக் கொடுத்து வைக்க வேண்டும். எல்லோருந் தொண்டர்களாகி விட முடியாது. உள்ளத்திலே இறைவனை ஒடுக்கி வைத்திருந்து தனது காரியங்களைப் பார்ப்பவன்தான் தொண்டன். "இறைவனோ தொண்டர் தம் உள்ளத் தொடுக்கம்" என்று வரிகளில் இருந்து இது புரிகின்றது.

உள்ளத்தில் இறைவனை ஒடுக்கி வைத்திருப்பதற்கும் தொண்டு செய்வதற்கும் என்ன தொடர்பு என்று நீங்கள் கேட்கலாம். இறைவனை உள்ளத்தில் ஒடுக்கி வைத்தோமானால் "நான்" என்ற எண்ணத்திற்கு எங்கள் உள்ளத்தில் இடமில்லாமல் போய்விடும். "நான் செய்கின்றேன்" "நான் செய்கின்றேன்" என்று அந்த "நானை" வளர்த்து வந்த நீங்கள், "அவன் செய்கின்றான்" "அவன் செய்கின்றான்" என்ற நிலைக்கு வந்து விடுவீர்கள். "நான்" என்ற இடத்தை "அவன்" எடுத்துக் கொள்கின்றான். உண்மையில் அவன் தான் எதையும் செய்ய வைக்கின்றான். ஆனால் அது தெரியாமல், அறியாமையால் "நான் செய்கின்றேன்" என்று கூறி வந்த நீங்கள் "அவன் செய்கின்றான். நான் அவன் கருவி" என்ற நிலைப்பாட்டுக்கு வந்து விடுவீர்கள். ஆகவே சிவத்தொண்டர்கள் என்று எம்மை அடையாளப்படுத்தும் நாம் ஒவ்வொருவரும் சிவனின் கையாட்களாக, கருவிகளாக மாறவேண்டும். சைவத்தைப் போதிக்கும் பிரசாரகர்களாக மாற வேண்டும்.

சுவாமி விவேகானந்தர் தொழுதலுக்கு ஈடு தொண்டு என்று கூறவில்லை. சேவித்தலுக்கு ஈடு சேவை என்று கூறவில்லை. தொண்டே தொழுதல், சேவையே சேவித்தல் என்றார். எம்முள் இருந்து எம்மை ஆட்டிப் படைப்பவர் இறைவன் என்றார் அவர். அதை உணர வேண்டும் என்றார்.

1895ம் ஆண்டு நவெம்பர் மாதம் 16ந் திகதி இலண்டன் மாநகரில் நிகழ்த்திய ஒரு பேச்சில் சுவாமிஜி பின்வருமாறு கூறினார்.

"முதலில் உங்கள் மீது உங்களுக்கு நம்பிக்கை ஏற்பட வேண்டும். அதன்பின் இறைவன் மீது நம்பிக்கை ஏற்பட வேண்டும். ஒருசில பலம் மிக்க மனிதர்கள் இந்த உலகத்தையே ஆட்டிப் படைக்கும் சக்தி வாய்ந்தவர்கள். உணர்வதற்கு எங்களுக்கு ஒரு உள்ளம் வேண்டும்; அறிவதற்கு ஒரு மூளை வேண்டும்; வேலைகள் செய்ய பலம் மிக்க கைகள் வேண்டும். வேலைகள் செய்யும் போது தகுதி மிக்க கருவிகளாக உங்களை ஆக்கிக் கொள்ளுங்கள். ஏனென்றால் உங்களை ஆட்டிப் படைப்பவர் இறைவன். நீங்களாக எதையுஞ் செய்ய முடியாது. ஒவ்வொரு மனிதனின் அந்தரங்கத்திலும் இந்த முழு பிரபஞ்சத்தின் சக்தியுந் தேங்கிக் கிடக்கின்றது என்றார். இந்தக் கருத்தைத் தான் இன்று இங்கிருக்கும் சிவதொண்டர்களாகப் பரிணமிக்கப்போகும் இளைஞர்கள் உள்ளத்தில் ஆழப் பதிவிக்க விரும்புகின்றேன்.

எங்களுக்கு எங்கள் மீது நம்பிக்கை பிறக்க வேண்டும். இறைவன் அருள் இருந்தால் எம்மால் முடியும் என்ற சிந்தனை வளர வேண்டும். நம்பிக்கைதான் சமயங்களின் ஆணிவேர். ஆத்மீகத்தின் ஆணிவேர். எங்கும் இறைவனின் சக்தி நிறைந்துள்ளது.

அதனுடன் என்னால் தொடர்பு வைத்திருக்க முடியும் என்ற நம்பிக்கை எழ வேண்டும். அதற்கு எங்கள் உள்ளங்கள் பதப்படவேண்டும்.

உங்களுக்கு ஒரு பெரிய இரகசியத்தை இந்தத் தருணத்தில் கூறப்போகின்றேன். கடவுளிடம் வரங்கள் வேண்டுகின்றோம்

அல்லவா?. எப்படி வேண்டுகின்றோம்? கோயிலில் சென்றோ வீட்டில் படத்தை முன் வைத்தோ அல்லது மனதில் இறைவனின் ஒரு அம்சத்தை முன் நிறுத்தியோ அவ்வாறு வேண்டுகின்றோம் அல்லவா? அவ்வாறு பிரார்த்தனை செய்ததில் நாங்கள் கேட்டது கிடைத்து விடுகின்றது என்று வைத்துக் கொள்வோம். உடனே நாங்கள் என்ன கூறுகின்றோம்? நல்லூர் கந்தனிடம் கேட்டேன் கிடைத்தது; என் வீட்டில் உள்ள சாயிநாதர் படத்தின் முன் நின்று கேட்டேன் கிடைத்தது; அல்லது ஆஞ்சநேயரை மனதில் வைத்துக் கேட்டேன் கிடைத்தது என்று அல்லவா கூறுகின்றோம்?

அதேபோல் ஒரு கிறீஸ்தவரை எடுத்துக் கொள்ளுங்கள். நான் யேசுகிறீஸ்து நாதரைக் கேட்டேன் கிடைத்தது என்பார்கள்; அல்லது அந்தோனியார் ஆண்டவரைத் தொழுதேன் கிடைத்தது என்பார்கள்; மரியாளை வேண்டி நின்றேன் கிடைத்து விட்டது என்பார்கள். அப்போ இங்கு கொடுப்பவர்கள் யார்? எங்கள் விடயத்தில் நல்லூர் கந்தன் கொடுக்கின்றார்; சாயிநாதர் கொடுக்கின்றார்; ஆஞ்சநேயர் கொடுக்கின்றார்; அதேபோல் கிறீஸ்தவர் விடயத்தில் இயேசு கொடுக்கின்றார்; அந்தோனியார் கொடுக்கின்றார். மரியாள் கொடுக்கின்றார். அதேபோல் எந்த ஒரு படமோ, முகமோ, உருவமோ இல்லாமல் அல்லாவைக் கேட்கும் இஸ்லாமியருக்கும் கேட்கும் வரங் கிடைக்கின்றது.

இந்தக் கேட்டல்களில் எல்லாம் பொதுவாக இருப்பது என்ன? இறைவனின் அம்சங்கள் அல்ல. அவை வேறுபட்டவை. மனிதனுக்கு மனிதன் வேறு, மதத்திற்கு மதம் வேறு ஆனால் பொதுவானது என்ன என்று ஆராய்ந்தோமானால் அதுதான் எங்கள் ஒவ்வொருவரதும் உள்ளமாகும்.

அதனால்தான் அதே இலண்டன் மாநகர பேச்சில் சுவாமி விவேகானந்தர் பின்வருமாறு கூறுகின்றார். "உங்கள் மூளைக்கும் உள்ளத்திற்கும் இடையில் வேற்றுமைப்பாடு ஏற்படும்போது உள்ளம் கூறுவதைச் செய்யுங்கள்" என்கிறார். விவேகத்திற்கும் அறிவுக்கும் பெயர் போன விவேகானந்தர் உள்ளம் கூறுவதைச் செய்யுங்கள்" என்கின்றார். ஏனென்றால் எங்கள் ஒவ்வொருவரினதும் உள்ளம்தான் இறைவனுடன் சம்பாஷிக்கின்றது; வேண்டுகின்றது, இறைஞ்சி நிற்கின்றது. இறைவனுக்கும் அண்மையில் போய் நிற்கின்றது. கிறீஸ்தவரோ, இஸ்லாமியரோ, இந்துவோ உள்ளத்தால்தான் கேட்கின்றார். அறிவால் கேட்கவில்லை. இறைவனில் கிறிஸ்தவ இறைவன் இஸ்லாமிய இறைவன், இந்து இறைவன் என்ற பாகுபாடில்லை. அவன் இறைவனாக எங்கும் நீக்கமற நிறைந்திருக்கின்றான்: எல்லாம் அறிந்தவனாக இருக்கின்றான்; எல்லாம் வல்லவனாகவும் இருக்கின்றான். அவனை எம்பால் ஈர்த்து வேண்டுவதை வேண்டிப் பெற்றுக் கொள்வது எமது உள்ளந்தான். இதனால்தான் இறைவன் எங்கள் ஒவ்வொருவரின் உள்ளத்தினுள்ளும் வசிக்கின்றான் என்று பெரியோர்கள் கூறுகின்றார்கள்.

எனவே இரகசியம் என்று எதைக் கூறுகின்றீர்கள் என்று நீங்கள் கேட்டால் இறைவன் எங்கள் ஒவ்வொருவர் உள்ளங்களிலும் உள்ளான். உள்ளேயும் உள்ளான். அவன் வெளியேயும் உள்ளான். ஆனால் எங்கள் வேண்டுதல்களை அவன் பூர்த்தி செய்வதற்கு எங்கள் உள்ளங்கள் அவனுடன் தொடர்பு கொள்ளவேண்டும். எங்கள் உள்ளங்கள் அவனுக்காகத் திறபட்டு இருக்க வேண்டும். எங்கள் உள்ளத் தொடர்பே எங்களுக்குத் தேவையானவற்றைப் பெறச் செய்கின்றது. அந்தவிதத்தில் இறைவன் உங்கள் ஒவ்வொருவர் உள்ளத்தினுள்ளும் நீக்கமற நிறைந்திருக்கின்றான் என்று கூறுவேன். எமது கேட்டுப்பெறும் உள்ளம் கேதாரநாதனுடன் ஒட்டுறவாடுஞ் சக்தி படைத்தது. முடியும் என்ற எமது உள்ளத்துத் தன்னம்பிக்கை முருகனையே எம்முள் ஈர்க்குந் தன்மைத்தயது. தன்னம்பிக்கை வேண்டும் என்று சுவாமி விவேகானந்தர் கூறியதன் மர்மம் இதுதான். முடியும் என்று எங்கள் மனதில் ஒரு நம்பிக்கை பிறப்பதுதான் தொண்டர்களின் முதல் யோக்கியதாம்சம். முடியும் என்று கூறுவதற்குத் தன்னம்பிக்கை அவசியமெனினும் அந்தத் தன்னம்பிக்கை உள்ளத்தினுள் உயிர் கொண்டு உறவாடும் இறைவன் மீதான அசைக்க முடியாத நம்பிக்கையில் இருந்து அது பிறக்க வேண்டும். இறை நினைவு இல்லாமலுந் தன்னம்பிக்கை பிறக்கலாம். அப்பேர்ப்பட்டவர்களுக்கு ஆணவம், அகந்தை ஆகியவை அவர்கள் மனதில் குடி கொண்டு தோல்வியை அவர்கள் தழுவும் போது துவண்டு விடச்செய்கின்றது. ஆனால் இறை நம்பிக்கை கொண்டவன் வெற்றியுந் தோல்வியும் இறைவன் தரும் வரங்கள் என்று எதனையும் வரவேற்கும் மனப்பக்குவம் அடைந்திருப்பான்.

இதை சுவாமி விவேகானந்தர் பின்வரும் ஆங்கிலச் சொற்களால் தெளிவுபடுத்துகின்றார்.

"............ We were born for service. (But) we must leave the result to God. The work was done only for the love of God. If failure comes, there need be no sorrow. The work was done only for love of God" (Page 223 Volume viii)

அதாவது "நாங்கள் பிறந்ததே சேவை செய்வதற்காகத்தான். ஆனால் எமது சேவைகளின் பலாபலன்களை இறைவனிடம் விட்டு விடவேண்டும். எமது காரியங்கள் இறைவன் மேலிருக்கும் அன்பின் நிமித்தமே நிறைவேற்றப்பட்டன. அக்காரியங்களினால் தோல்வியைத் தழுவினோமானால் அதன் பொருட்டு மனவேதனை அடையத் தேவையில்லை. ஏனென்றால் நாங்கள் இயற்றிய காரியங்கள் இறைவன்பால் இருந்த அன்பின் நிமித்தம் செய்யப்பட்டபடியாலேயே" என்று சுவாமிஜி கூறிச்சென்றார். சேவையை சேவைக்காகச் செய்வதே சிறந்தது. அவ்வாறு செய்வது ஆத்மீக மேம்பாட்டுக்கு எங்களைத் தயார்படுத்துகின்றது. அது மட்டுமல்ல, சேவையானது எங்கள் மனங்களை பணிந்து போகச் செய்கின்றது. உள்ளத்தைத் தூய்மைப்படுத்துகின்றது. சேவை செய்யத் தொடங்கினால் மேலும் மேலும் சேவைகளில் ஈடுபட அது எம்மை ஊக்குவிக்கும். ஆனால் சேவையானது இறைவனால் உந்தப்பட்டு செய்யப்படுகின்றது என்பது எங்கள் மனதில் வேரூன்ற வேண்டும்.

என் வாழ்க்கையில் நடந்த ஒரு சிறு, மிகச்சிறு நிகழ்வினை எடுத்துக்காட்டாக எடுத்துக் கூறுகின்றேன்.

ஒரு கூட்டத்திற்கு என்னைப் பேச அழைத்தார்கள். இன்று போல் முப்பது நிமிட நேரம் பேச வேண்டும் என்றார்கள். சற்றுச் சிரமமான கருப்பொருள் கடும் உழைப்பின் பின்னர் ஒரு பேச்சை ஆயத்தப்படுத்திக் கொண்டு சென்றேன். பல நூல்கள், இணையத்தளம் போன்றவற்றில் இருந்து தகவல்களைச் சேகரித்தே அந்தப் பேச்சைத் தயார்படுத்தியிருந்தேன். அதனை ஆங்கிலத்தில் தட்டச்சு செய்யும் போது கணனி பல தொந்தரவுகளைக் கொடுத்தது. மிகவும் கஷ்டப்பட்டே அந்தப் பேச்சைத் தயாரித்திருந்தேன். கூட்டத்தின் ஏற்பாட்டாளர்கள் பல விடயங்களையும் அன்று மேடை ஏற்றிவிட்டார்கள். புத்தக வெளியீடு, நூல் விமர்சனம், பரிசுகள் வழங்கல், சங்கீத நிகழ்ச்சி என்று பல நிகழ்ச்சிகள் மேடையேறின. இன்றுபோல் என்னைக் கடைசியாகப் பேசப் போட்டிருந்தார்கள். என் பேச்சின் பின்னர்

ஒரு நடன நிகழ்ச்சி நிரல்படுத்தப்பட்டிருந்தது. பெண்குழந்தைகள் கொழும்புக்கு வெளியில் இருந்து அழைத்து வரப்பட்டிருந்தார்கள்.

நான் "அப்பாடா" என்று என் பேச்சை ஆரம்பிக்க எழுகின்ற நேரத்தில் ஏற்பாட்டாளர் ஓடிவந்து "ஐயா! உங்கள் பேச்சுக்கு முன் அந்தக் குழந்தைகளை ஆட விடுங்கள். இப்பொழுதே இரவு ஒன்பது மணி கடந்து விட்டது" என்றார். உடனே நான் 'பரவாயில்லை ஆனால் நடனத்தின் பின்பேச்சைக் கேட்க எவரும் இருக்கமாட்டார்கள். என் பேச்சை நிகழ்ச்சி நிரலில் இருந்து அகற்றி விடுங்கள்" என்று கூறிவிட்டு நான் எழுந்து வந்து விட்டேன். அதன் பின்னர் அடுத்தநாள் ஏற்பாட்டாளர் மன்னிப்புக் கோர வந்தார். அதற்கு நான் கூறினேன் – "மன்னிப்பெல்லாந் தேவையில்லை. நிரலில் நடைபெற வேண்டிய நிகழ்ச்சிகளை நேரத்தைப் பார்த்து அதற்கமைவாகச் செய்யப் பழக வேண்டும். நேற்றைய தினம் நான் பேசக் கூடாது என்பது இறைவன் சித்தம். அதை யாராலும் மாற்ற முடியாது. நீங்கள் வருத்தப்படாதீர்கள்" என்றேன். ஏற்பாட்டாளருக்கு ஆச்சரியம் தன்னை ஏசப் போகின்றேன் என்று வந்தவருக்கு "என் பேச்சு பேசப்படக்கூடாது என்பது இறைவன் சித்தம்" என்று இவரே கூறுகின்றாரே என்று ஒரு மலைப்பு. இறைவன் தரும் பிச்சை தான் நாங்கள் பேசுவதும் பேசாததும், பேச்சு அழகாக அமைவதும் அமையாததும் என்ற அடிப்படை ஞானம் பிறந்து விட்டால் தோல்விகள் எம்மை துவண்டுவிடச் செய்யா. தோல்விகள் ஆத்திரத்தை மூட்டா.

இவ்வளவு கஷ்டப்பட்டுப் பேச்சைத் தயாரித்தோமே என்ற மன வருத்தந்தான் எனக்கு. ஆனால் அவன் அருளால் அவன் தாள் வணங்கும் நான் எப்படி அந்தப் பேச்சை என் பேச்சு என்று எண்ணுவது? அது இறைவன் என்னூடாகத் தயாரித்த பேச்சு. அதை வெளியிடாதே என்று அவன் கூறினால் அதை மறுக்க நான் யார்? இவ்வாறு தான் என் உள்ளம் சிந்தித்தது.

இந்த நிகழ்வை உங்களுக்குக் கூறியதன் காரணம் தோல்விகள் எங்கள் ஒவ்வொருவர் பாதையிலும் வருவது சகஜம் என்பதை உங்களுக்கு உணர்த்துவதற்கும் அவற்றை எவ்வாறு நாங்கள் எதிர்கொள்கின்றோம் என்பதிலேயே எங்கள் மனப் பக்குவம் உள்ளடங்கி இருக்கின்றது என்பதை எடுத்துக் காட்டுவதற்கேயாகும்.

சிவதொண்டர்களின் மனதில் இன்னொரு முக்கிய விடயம் நிலை நிறுத்தப்படவேண்டும். அதாவது சிவதொண்டர்களாக இருப்பவர்கள் அல்லது இருக்க விழைபவர்கள் மனத்தூய்மையுடனும் நேர்மையுடனுந் தைரியமாகவும் நடந்து கொள்ளப் பழகிக் கொள்ளவேண்டும். மனதில் தூய்மையாக இருந்து மற்றவர்களிற்கு நன்மை செய்வது தான் எல்லா வழிபாடுகளிலுஞ் சாரமாகும். தீமை செய்யும் போது தனக்கும் அவன் கேடு விளைவிக்கின்றான்; மற்றவர்களுக்குங் கேடு விளைவிக்கின்றான். அதேபோல் மற்றவர்களுக்கு நாங்கள் நன்மை செய்யும் போது அது எமக்கும் நன்மை பயக்கின்றது, பிறர்க்கும் நன்மை பயக்கின்றது.

சுவாமி விவேகானந்தர் கூறினார் "உடலும் உள்ளமுந் தூய்மையின்றி கோயிலுக்குப் போவதும் இறைவனை வழிபடுவதும் பயனற்றதாகும். நேர்மையுடனுந் தைரியமாகவும் பக்தி சிரத்தையுடனும் வாழ்ந்தால் இறைவனை அடைவது உறுதி" என்று.

எமது மனங்களில் அசூயைகளையும் பொறாமைகளையுந் தாழ்வு மனப்பான்மைகளையுஞ் சுமந்து கொண்டு இறைவனிடம் போனோமானால் அந்தத் தேவையற்ற குணங்கள் எங்கள் மனங்களை தம்பால் வசியச் செய்து விடுவன, ஆக்கிரமித்து விடுவன. அவற்றில் இருந்து விடுபட்டு இறைவனுடன் உறவாடுவது மிகவுஞ் சிரமமாகப் போய்விடும். நேர்மை வழியில் செல்ல நாம் திட சங்கற்பம் பூண்டுவிட்டோமானால் தைரியமும் பக்தி சிரத்தையுந் தாமாகவே வந்து விடுவன.

தொண்டு செய்வதற்கும் இந்து மதத்தில் கூறப்பட்டிருக்கும் கர்ம யோகத்திற்கும் நெருங்கிய தொடர்புண்டு. இவை கடமை வழியிற் செல்பவை. எந்த ஒரு குறிப்பிட்ட தருணத்திலும் இதுதான் எனது கடமையாக இருக்க வேண்டும் என்று அடையாளம் கண்டு வைப்பது சிரமமாகும். ஆனால் பொதுவாக மற்றவர்களுக்கு இடர் விளைவிக்காது ஆற்றும் கருமங்களே கடமை வழித்தொண்டுகள் என்று அடையாளம் காணப்படுகின்றன. எமது கடமைகளைச் செய்வதால் மற்றவர்களும் நாங்களும் மனதில் மகிழ்வடைய வேண்டும். திருப்தி பெறவேண்டும். அவ்வாறு மனமகிழ்வுந் திருப்தியும் பெற பகவத்கீதை போதித்திருக்கும் பாடம் "பயன் எதிர்பாராது பேரார்வத்துடன் உன் கடமைகளைப் புரி" என்பதேயாகும். அதை ஆங்கிலத்தில் அழகாகக் கூறுவார்கள். Dis-interested devotion to duty என்பார்கள். கடமை மீது அக்கறை அற்ற பேரார்வம் வேண்டும் என்பார்கள்.

இன்று தொடங்கும் இந்தச் சிவத்தொண்டர் மாநாடு மாணவர்களுக்கு சிவ தொண்டின் தாற்பரியத்தை விளக்கி, சைவ வித்தகர் விசேட பயிற்சிக்கான ஆரம்ப வேலைகளை முடுக்கி விடவே ஒழுங்கு செய்யப்பட்டது என்று நம்புகிறேன். இந்தப் பயிற்சித் திட்டத்தில் மாணவர்களுக்கு அறிமுகப்படுத்தப் போகும் பல விடயங்கள் பற்றி எனக்கு விளக்கப்பட்டது. அந்த விதத்தில் சமய வழிபாட்டு முறைகள் பற்றியும், சைவ சமய ஒழுக்க நெறிகள் பற்றியும், எங்கள் மதத்தின் சமய சின்னங்கள் பற்றியும், நாளாந்த வழிபாட்டு முறைகள் பற்றியும், வீட்டுக்கிரியைகள் திருமணக் கிரியைகள் சமயக் கிரியைகள் பற்றியும், விரதங்கள் பற்றியும், பண்டிகைகள் பற்றியும், சிராத்ததின கிரியைகள் பற்றியும், திருமுறைகள் பற்றியும், சைவசித்தாந்தம் பற்றியும், சமயப் பெரியார்களின் வாழ்க்கை வரலாறு பற்றியும், சமகாலப் பயிற்சிகள் பற்றியும் இன்னோரன்ன பல விடயங்கள் பற்றியும் விரிவுரைகள் ஆற்றப்படவிருப்பதாக அறிந்தேன். அதாவது சமயத்தின் அகமும் புறமும் சிவதொண்டர்களுக்குப் பயிற்சிநெறியாகப் புகட்டப்படவிருக்கின்றன.

இது பற்றிய ஒரு கருத்தை எடுத்து விளம்ப உங்கள் அனுமதியை வேண்டி நிற்கின்றேன். அதாவது எங்கள் பயிற்சித்திட்டம் எங்களைச் சைவத்தாயின் பயனுடைய நன்மக்களாக்குவதற்குப் பாடுபட்டுத் தயாரிக்கப்பட்டுள்ளது. எங்கள் தாயின் பயனுள்ள பண்புள்ள மக்களாக நாங்கள் உருவாக வேண்டும் என்பதில் எந்தவிதச் சந்தேகமும் இல்லை. அந்தந்தப் பயிற்சி நெறிகளில் பக்குவம் அடைந்து தேர்ச்சி பெறுவது அத்தியாவசியமாகின்றது. இந்த நற்கைங்கரியத்தில் ஈடுபட்டுள்ளமைக்காக அகில இலங்கை இந்து மாமன்றம் எங்கள் வாழ்த்தையும் பாராட்டுக்களையும் பெறுகிறார்கள்.

எங்கள் மொழிக் கல்வி, எங்கள் மதக் கல்வி, எங்கள் இனம் பற்றிய கல்வி போன்றவை எம்மை ஒருவித அறிவுச் சிறைக்குள் அடைத்து வைப்பதை நான் கண்கூடாகப் பார்த்துள்ளேன். பரந்த இந்த உலகில் எம் மொழி, மதம், இனம் ஆகியன ஒரு அலகே என்பதை நாங்கள் சில வேளைகளில் மறந்து விடுவது உண்டு. கிணற்றுத் தவளைகளின் கண்ணோட்டம் எம்மைப் பீடித்து விடுகின்றது. என் தாய் மேல் எனக்கு எவ்வளவு பற்றும் பாசமும் இருக்குமோ அதேயளவு அடுத்தவனுந் தன் தாய் மேல் பற்றும் பாசமும் வைத்திருப்பது இயற்கையே. இதை மறந்து எங்கள் தாயை மதிக்கும் அதே நேரம் மற்றவர்களின் தாயை இகழவோ பழிக்கவோ நாங்கள் எத்தனிக்கக் கூடாது. சிவதொண்டர்கள் தம்

தாயின் மீது அன்பு பாராட்டும் அதே நேரம் மற்றவர்களின் தாய்மார்களை மதிக்குங் குணமும் உடையவர்கள் என்று பெயர் வாங்க வேண்டும். அவ்வாறு இல்லாமல் துவேஷ சிந்தனைகளுக்கு நாம் இடம் கொடுத்தோமானால் எமது மதத்தின் ஆணிவேர்ச் சிந்தனைகளை, அடிப்படைக் கொள்கைகளை நாம் மறந்து விட்டோம் என்றாகிவிடும். அசூயையும் சமரசத்தையும் வளர்ப்பன. ஆகவே எம் வழிசாராதார் மீது பகைமையை வளர்க்காது பார்த்துக் கொள்ள வேண்டும். பிரசாரஞ் செய்பவர்கள் இதனை மனதில் ஆழப்பதித்து வைத்துக் கொள்ளவேண்டும்.

''ஏகம் சத்; விப்ரா பகுதா வதந்தி'' என்கின்றது வேதம். உண்மை என்பது ஒன்றே; அதனை ஞானிகள் வெவ்வேறு விதங்களில் அழைக்கின்றனர் என்பதே இதன் தமிழாக்கம். அதாவது நீக்கமற நிறைந்துள்ள அந்த மறைபொருள் ஒன்றே. அதனைப் பார்க்கும் பார்வையாளர்களின் சிந்தனைகள் தான் வெவ்வேறு. உண்மையை இன்னொருவன் இன்னொரு விதத்தில் பார்ப்பதை நாங்கள் பகைமைக் கண்களுடன் நோக்குவதை விலக்கிக் கொள்ள வேண்டும். உன்னறிவுக்குஞ் சூழலுக்கும் ஏற்ற விதத்தில் நீ உண்மையைப் பார்க்கின்றாய். நான் என் அடிப்படைகளின் மீதமர்ந்து உண்மையைப் பார்க்கின்றேன். ஆனால் மனிதர்கள் என்ற முறையில் நாங்கள் எல்லோருமே இறைவனின் பிள்ளைகள் என்ற எண்ணத்தை வளர்த்துக் கொள்வோம். இறைநம்பிக்கை இல்லையென்றால் இயற்கைத் தாயின் பிள்ளைகள் என்ற எண்ணத்தை வளர்த்துக் கொள்வோம்.

எமது வேற்றுமைகளுக்கு அப்பால் நாங்கள் இறைவனின் படைப்புக்கள் அல்லது சக உயிரினங்கள் என்ற முறையில் கைகுலுக்குவோமாக என்ற அந்த பரந்த அன்புப் பார்வை உங்கள் அனைவரதும் மனத்தினுள் எழ வேண்டும்.

அப்படியானால் பிற மதக்காரர்கள் எங்கள் மதத்தைக் குற்றஞ் சொல்வதைக், குறையாகப் பேசுவதை பார்த்துக் கொண்டிருக்கச் சொல்கின்றீர்களா என்று நீங்கள் கேட்கலாம். இல்லைவேயில்லை. மனிதாபிமானத்துடன் நடந்து கொள்ளப் பழகுங்கள் என்று மட்டுமே கூறியுள்ளேன். மாக்கள் போல மலைத்து நில்லுங்கள் என்று நான் கூறவில்லை.

ஆதிசங்கரரை, ஆறுமுகநாவலரை அதிவிசேட மனிதர்கள் ஆக்கியது எது என்று பார்த்தீர்களானால் தேவையேற்பட்ட போது தமது சமயத்தின் தத்துவத்தை, மேலான நெறிகளை உலகுக்கு எடுத்துக் காட்டி பிற மதத்தினரின் வாய்களை அடங்கச் செய்தமையேயாகும். அதற்கு ஏற்ற விதத்தில் எங்கள் மதம் பற்றிய போதிய அறிவை நாங்கள் பெற்றிருக்க வேண்டும். தத்துவார்த்த அடிப்படையில், தருக்க முறையில் எமது சமயத்தின் சிறப்பை, உண்மையை உலகுக்கு எடுத்துக் காட்ட நாங்கள் எந்தத் தருணத்திலும் ஆயத்தமாக இருக்க வேண்டும். ஆனால் பொறாமையை, அசூயையை, கோபத்தை, பகைமையை வெளிக்காட்ட வேண்டிய அவசியம் எமக்குத் தேவையில்லை. இதற்குப் பொறுமை, புரிந்துணர்வு, போதுமான சமய அறிவு போன்றவை அத்தியாவசியம். அதேநேரத்தில் அஞ்சாமையும் மனதில் குடிகொண்டிருக்கவேண்டும்.

*நாமார்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம்*
*நரகத்தில் இடர்படோம் நடலையில்லோம்*
*ஏமாப்போம் பிணியறியோம் பணிவோம் அல்லோம்*
*இன்பமே எந்நாளும் துன்பமில்லை*
*தாமார்க்கும் குடியல்லா தன்மையான*
*சங்கரன் நற் சங்கவெண் குழையோர் காதிற்*
*கோமார்க்கே நாமென்றும் மீளா ஆளாய்*
*கொய்மலர் சேவடி இணையே குறுகினோமே.*

என்ற நாவுக்கரசரின் அடிகள் எமக்கு அஞ்சாமையையும் இறைவனுக்காகத் துஞ்சாது இருத்தலையும் போதிக்கின்றது. நாவுக்கரசர் கால தமிழகத்தின் பல்லவ பாண்டியப் பேரரசுகளின் அதிகார பீடத்தில் சமண மதஞ் செல்வாக்குப் பெற்றிருந்தது. அவ்வதிகாரத்தைப் பயன்படுத்திச் சைவ வைணவ மதங்களை அழித்தொழிப்பதிலேயே சமண மதம் தீவிரமாக ஈடுபட்டது. சிவாலயங்களை அழித்து அவ்விடங்களில் சமணப் பள்ளிகளை நிறுவுதல், சைவ மடங்களுக்குத் தீ வைத்தல், சிவ வழிபாட்டு நெறிகளை முறையாக பேணவிடாது தடுத்தல், சிவனடியாரைச் சித்திரவதை செய்து துன்புறுத்தல் போன்ற சைவ அழிப்பு முயற்சிகள் தொடர்ந்தன.

இத்தகைய சூழலிலே அந்நிய சமயஞ் சார்ந்த சமூகப் பொருளாதார, பண்பாட்டுச் சூழலின் தாக்கங்களுக்கு, மத்தியில் தமது சைவ வாழ்க்கையைக் கடைப்பிடிக்க வேண்டிய நிர்ப்பந்தம் சைவமக்களுக்கு ஏற்பட்டது. இந்த வரலாற்றுத் தேவையை நிறைவு செய்யும் விதத்திலேயே நாவுக்கரசரது சைவமீட்சி நிகழ்ந்தது. தமது சொல்லாற்றலாலுஞ் செயற்பாடுகள் மூலமும் சைவ பக்திப் பேரியக்கத்தை மக்கள் இயக்கமாக விரிவடைய உதவினார். அவரின் அதிகார மறுப்புக் குரலாகவே ''நாமார்க்குங் குடியல்லோம்'' பாடப்பட்டது. சித்திரவதைகளுக்கு ஆளானார் நாவுக்கரசர். ஆனால் சித்திரவதைகள் செய்வித்த மகேந்திரவர்ம பல்லவன்இறுதியில் தானே சைவனாக மதம் மாறினான்.

மேலும் ஒரு விடயத்தை உங்களுக்குக் கூறக் கடமைப்பட்டுள்ளேன். சிவதொண்டர்கள் என அழைக்கப்படும் போது நீங்கள் வெறும் தொண்டர்களாக அல்லாமல் சிவனின் தொண்டர்களாக அடையாளப்படுத்தப்படுகின்றீர்கள். சிவனின் தொண்டர்கள் செல்வத்திற்குங் காமத்திற்கும் அடிப்பணிய மாட்டார்கள். எளிய வாழ்க்கையில் நாட்டங் கொண்டிருப்பார். ஆகவே சிவதொண்டர் பயிற்சியானது எம்மை வாழ்வாங்கு வாழ வழியமைத்துக் கொடுக்கும் ஒரு பயிற்சியாக இருக்க வேண்டும். பணத்திற்கும், படாடோபத்திற்கும், பதவிகளுக்கும் பயனற்ற காமச்சிந்தனைகளுக்கும் இடம்கொடுக்கும் ஒரு மேலோட்டமான பயிற்சி நெறியாக இருக்க கூடாது. ஆழமான பயிற்சிமுறையாக அமைய வேண்டும். இவர் ஒரு சிவத்தொண்டர் என்றால் அவரைப் பார்த்ததும் அன்பும் மரியாதையும் எம்மனங்களில் மேலோங்க வேண்டும். அவ்வாறு மற்றவர்களின் மதிப்பு ஏற்பட வேண்டுமென்றால் சிவ தொண்டர்களின் மனோநிலை எவ்வாறு அமைய வேண்டும் என்பதற்கு பின்வரும் அப்பர் தேவாரம் பதிலிறுக்கின்றது.

**சங்கநிதி பதுமநிதி இரண்டுந்தந்து**
**தரணியொடுவானாளத் தருவரேனும்**
**மங்குவார் அவர் செல்வம் மதிப்போம் அல்லோம்**
**மாதேவர்க்கேகாந்த ரல்ல ராயின்**
**அங்கமெலாம் குறைந்தழுகு தொழுநோயாராய்**
**ஆவுரித்துத் தின்றுழலும் புலையரேனும்**
**கங்கைவார் சடைக்கரந்தார்க்கன்பராகில்**
**அவர் கண்டீர் நாம் வணங்குங் கடவுளாரே!**

அதாவது இறையன்பு கொள்ளாத ஒருவர் பணத்தையும் பதவியையும் எமக்குத் தந்தால் நாங்கள் அதை மதிக்க மாட்டோம். ஆனால் இன்னொருவர் இறையன்பு பூண்டிருந்து ஆனால் தொழுநோயால் பீடிக்கப்பட்டுப் பசுவதை செய்து அதன் மாமிசத்தை உண்பவராக இருந்தாலுங் கூட அவரையே நாங்கள் கடவுளாகக் கொண்டாடுவோம் என்கின்றார்.

அண்மையில் ஒரு மிக முக்கிய பதவியில் இருப்பவர் என் நண்பர் ஒருவருக்குக் கூறினாராம் – "எனக்குப் பணம் தான் முக்கியம். இன்று எத்தனை பேர்களை இந்தப் பணத்தால் வாங்கிவைத்திருக்கின்றேன் தெரியுமா? பணத்தைக் கொடுத்து இந்த உலகையே வாங்கிவிட முடியுந் தெரியுமா?" என்றாராம்.

ஆனால் சிவதொண்டரின் மனோநிலையை அவதானியுங்கள். குபேரனின் நவநிதிகளில் இரண்டான சங்கநிதி பதுமநிதி இரண்டைக் கூடத் தந்தாலும் நான் அசைய மாட்டேன். தருபவர் இறையன்பராய் இருக்க வேண்டும். அது தான் முக்கியம் என்கின்றார்.

இன்றைய காலகட்டத்தில் பணமும் பதவியும் முக்கியந்தான். ஆனால் சிவதொண்டர்களுக்குப் பண்பும் அன்புந்தான் முக்கியமாகப் படவேண்டும். அவ்வாறான மனோநிலையைக் கொண்டவர்கள் தான் மக்கள் சேவையில் மன நிறைவைப் பெறலாம்.

சிவதொண்டர்களை தபஸ்விகளாக, சந்யாசிகளாக ஆக்கப்பார்க்கின்றாரே நீதியரசர் என்று எண்ணிவிடாதீர்கள். எங்கள் மனந்தான் எல்லாம். நீறு பூத்த நெஞ்சங்களால்தான் உலகத்தை வெல்ல முடியும். உலக மக்களுக்குச் சேவை செய்ய முடியும் என்ற கருத்தையே உங்கள் முன் வைக்கின்றேன்.

இன்று பல சவால்களுக்கு முகங்கொடுத்து விட்டார்கள் எங்கள் மக்கள். அவர்கள் வாழ்வில் மறுமலர்ச்சி ஏற்பட வேண்டுமென்றால் அவர்களின் வாழ்க்கை மேன்மையான சிந்தனைகளையுந் திட்டமிட்ட வழிமுறைகளையும் எளிமை மிக்க வாழ்க்கை முறையையுங் கொண்டிருக்க வேண்டும். High thinking and simple living என்று ஆங்கிலத்தில் குறிப்பிடுவார்கள். இதனை அவர்களுக்கு அடையாளங் காட்டுஞ் சமயப் படையணியினராக சிவதொண்டர்கள் செயற்பட வேண்டும். தம் நலம் மறந்து செயற்பட முன்வரவேண்டும். அதைத்தான் நான் கூற வருகின்றேன்.

சுமார் அறுபது வருடங்களுக்கு முன்னர் வாழ்ந்த எம்மவரின் வாழ்க்கை முறையைப் பரிசீலித்துப் பார்த்தீர்களானால் அன்று வாழ்ந்த எம்மவர்கள் உயர்ந்த சிந்தனைகளையும் சிறந்த எளிய வாழ்க்கை முறையையுமே மேற்கொண்டிருந்தார்கள் என்பது தெரியவரும். எவ்வளவுதான் உயர்ந்த பதவிகளில் கொழும்பில் செயற்பட்டு வந்தவர்கள் கூட யாழ்ப்பாணம் வந்ததுந் தமது மேலைத்தேய உடைகளைக் களைந்து விட்டு வேட்டியை அணிந்து கொண்டு மக்களோடு மக்களாய் பழகியதை அவதானித்திருக்கின்றோம். நாட்டின் வருங்காலத்தையே நிர்ணயிக்கும் அவரா இவர் என்று பொது மக்கள் மூக்கின் மேல் கை வைக்கும் அளவுக்கு எளிய வாழ்க்கை முறையைக் கடைப்பிடித்தார்கள் அந்த அருந்தமிழ் அறிஞர்கள். இதற்குக் காரணம் சூழல். ஆறுமுகநாவலரின் அடியையொற்றி வந்த எம்மவர் வேற்று நாகரீகச் சூழலை எதிர்த்தவர்களாகச் செயற்பட்டார்கள். ஆனால் காலக்கிரமத்தில் சிந்தனைகளுஞ் சிதறுண்டன. வாழ்க்கை முறைகளுந் தடம் புரண்டன. சைவ வாழ்க்கை முறையில் இருக்கும் நல்லடையாளங்களை மீண்டும் எம் மக்களுக்கு நாம் புகட்டிக் கொடுக்க வேண்டிய கால கட்டந் தற்போது உருவாகியுள்ளது.

சுற்றுச் சூழலைப் பாதுகாப்பாக வைத்திருப்பது பற்றி இன்று வெளிநாடுகள் எமக்குப் பாடங்கள் புகட்டும் நிலை வந்துதித்துள்ளது. எமது சைவ வாழ்க்கை முறையிலேயே பாதுகாப்பான சூழலைப் பராமரிக்கும் முறை அடங்கியிருந்தது. எல்லாவற்றிலும் இறைவனைப் பார்க்கும் எம் பாரம்பரியம் சுற்றுச் சூழலை அசுத்தமாகவோ அசிங்கமாகவோ வைத்திருக்க இடங்கொடுக்காது. இயற்கையோடு இணைந்து வாழும் வாழ்க்கை முறையையே சைவம் உணர்த்தி வந்துள்ளது. இறப்பின் பின்னரும் இயற்கையோடு மனிதன் இணைவதையே வழிபாட்டு நடைமுறைகள் உணர்த்துகின்றன. இயற்கையோடு மனிதன் இணைவதையே வழிபாட்டு நடைமுறைகள் உணர்த்துகின்றன. இயற்கையின் ஆற்றல், மனித ஆற்றலை விஞ்சியதென்பதை உணர்ந்து இயற்கையை வழிபடும் நடைமுறைகளை எம்மவர் தம் வாழ்வியல் ஆக்கினர். எனவே சமய அறிவுடன் வாழ்வாங்கு வாழும் அறிவும் எமது சிவதொண்டர்களிடையே பரவி விரவி இருக்க வேண்டும்.

சிவதொண்டர்கள் அறிவின் இமயத்தைப் போன்றவர்கள். அன்பில் ஆழியை ஒத்தவர்கள், அரவணைப்பில் தாயை நிகர்ந்தவர்கள். பொறுமையில் பூமாதேவியை விஞ்சியவர்கள் என்று பெயர் எடுக்க வேண்டும். அவ்வாறு பெயர் எடுப்பதற்கு நான் இந்தச் சிற்றுரையில் கூறியிருக்கும் விடயங்கள் யாதெனப் பார்த்தால் முதலில் எங்கள் மீதுந் தெய்வம் மீதும் அசையாத நம்பிக்கை கொள்ளல். நம்பிக்கை சிவதொண்டர்கள் மனதில் வளர வேண்டும். தோல்விகளைக் கண்டு துவண்டு விடக்கூடாது. இறைவன் சித்தப்படி எல்லாம் நடக்கின்றது என்ற எண்ணம் மேலோங்கினால் தோல்விகள் எம்மை ஆட்டங் காணச் செய்யா. சிவதொண்டர்களுக்கு மனத்தூய்மை, நேர்மை, தைரியம் ஆகிய குணங்கள் மிகவும் அத்தியாவசியம். கறைபட்ட நெஞ்சங்கள் எம்மைக் காட்டிக்கொடுக்கவல்லன. சேவையில் ஈடுபடப் போகின்றவர்களுக்கு கறையற்ற நெஞ்சங்கள் அவசியம். அத்துடன் வரையற்ற அறிவும் அவசியம். எமது சமயத்தின் மேம்பாடுகளை விளக்கக் கூடிய அறிவு தேவை. அதேநேரம் பணம், பதவிகளுக்கு அடிபணியாத பவித்ரமுந் தேவை. மொத்தத்தில் எமது சிவதொண்டர்கள் எமது சமூகத்தின் கலங்கரை விளக்கங்களாக காட்சியளிக்க வேண்டும்.

இந்து மாமன்றம் தொடக்கி வைக்கும் இந்தக் கைங்கரியம் எமது இந்து மக்களிடையே ஒரு எழுச்சியை உண்டு பண்ணும் என்று எதிர்பார்க்கின்றேன். இளைஞர்கள் மத்தியில் மறுமலர்ச்சியையும் மக்கள் பால் அன்பையும் ஏற்படுத்தும் என்று எதிர்பார்க்கின்றேன். மனமுடைந்து நிற்கும் எமது சைவத்தமிழ் மக்களிடையே திசை தெரியாது தவிக்கும் எம் மக்களிடையே ஒரு ஒளிமிகும் எதிர்காலத்தை நோக்கிய பாதையை ஏற்படுத்தும் என்று எதிர்பார்க்கின்றேன்.

தன்னம்பிக்கையுடன் எங்கள் இளைஞர்கள் தமது மதம் பற்றி அறிந்து, தடம் புரளாமல் அன்பு வழியில் பயணித்தார்களானால் எமது சைவத் தமிழ்ச் சமூகம் மீண்டும் மகோன்னத நிலையை அடையும் என்பதில் எனக்கு எதுவித சந்தேகமுமில்லை.

*அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலர்*
*அன்பே சிவமாவதாரும் அறிகிலார்*
*அன்பே சிவமாவதாரும் அறிந்தபின்*
*அன்பே சிவமாய் அமர்ந்திருந்தாரே.*

என்ற திருமந்திரத்தை இத்தருணத்தில் நினைவுபடுத்தி எனக்கு இன்று பேச வாய்ப்பளித்த சகலருக்கும், குறிப்பாக திரு. நீலகண்டன் அவர்களுக்கும் எனது நன்றியைக் கூறி விடைபெற்றுக் கொள்கின்றேன்.

# யாழ் மண்ணில் இந்து மாமன்றம் நடத்திய சிவதொண்டர் மாநாடு

*அகில இலங்கை இந்து மாமன்றத்தின் ஏற்பாட்டில் கடந்தவைகாசி திங்கள் 14ஆம் 15ஆம் நாட்களில் யாழ்ப்பாணம் - நல்லூரில் நடைபெற்ற இருநாள் சிவதொண்டர் மாநாடு தொடர்பாக, மாமன்றத்தின் சைவ வித்தகர் பயிற்சிநெறியில் இணைந்துள்ள பயிற்சியாளர்களான க. முரளிதரன், ஆ. பிரசாந், சி. யோகன், யோ. கஜேந்திரா, யோ. மோகனதாசன், வெ. சசிகரன் ஆகியோர் எழுதியுள்ள விமர்சனக் கண்ணோட்டத்தில் குறிப்பிட்டுள்ள குறிப்புகளையும் கருத்துரைகளையும் உள்ளடக்கமாகக் கொண்டு தொகுக்கப்பட்டுள்ள நிகழ்வின் பார்வையாக இக்கட்டுரை அமைகிறது. சைவ வித்தகர் பயிற்சியாளர் க. முரளிதரன் எழுதியிருக்கும் சிறப்புக் கண்ணோட்டத்தையும் இவ்விதழில் காணலாம்.*

தொகுப்பு : அ. கனகசூரியர்

இலங்கை இந்து மன்ற அமைப்புகளினதும் ஆலய நம்பிக்கை பொறுப்புகளினதும் கூட்டமைப்பாக 1955 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதத்தில் தோற்றம்பெற்ற அகில இலங்கை இந்து மாமன்றம் "இறைபணி நிற்க" என்பதனை மகுடவாசகமாகக் கொண்டு சமய, சமூகநலப் பணிகளை முன்னெடுத்து வருவதுடன், 56 வருடங்களை நிறைவுசெய்துள்ள நிலையில் வைரவிழாவை நோக்கிய பாதையில் வெற்றிப் பயணத்தை மேற்கொண்டுள்ளது.

மாமன்றம் நாடளாவிய ரீதியில் ஆற்றிவரும் பணிகளை மேலும் இலகுபடுத்தும் வகையில் அமைக்கப்பட்ட முதலாவது பிராந்திய பணிமனை 2009 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 9 ஆம் திகதியன்று யாழ் மண்ணில் திறந்து வைக்கப்பட்டது. நல்லூர் கோயில் வீதி 211/17 ஆம் இலக்கத்திலுள்ள திருமதி பேரம்பலம் அம்மையார் அன்பளிப்பாக வழங்கிய நிலத்தில் யாழ். பிராந்திய பணிமனை கட்டப்பட்டு இப்போது செயற்பட்டுவருகிறது.

மாமன்றம் நாடளாவிய ரீதியில் ஏற்பாடு செய்து நடத்திவரும் சிவதொண்டர் மாநாடு தொடரில் மற்றுமொரு நிகழ்வாக கடந்த வைகாசி திங்கள் 14ஆம் 15ஆம் நாட்களில் (28.05.2011 – 29.05.2011) யாழ் மண்ணில் இருநாள் மாநாடு சிறப்பாக நடந்தேறியது. முதலாவது நாளான வைகாசி 14 ஆம் நாள் சனிக்கிழமை காலை மாமன்ற யாழ் பிராந்திய பணிமனையில் வேத பாராயணம் ஓதப்பட்டு, இந்து ஆராய்ச்சி நிலையம் திறந்து வைக்கப்பட்டதைத் தொடர்ந்து, வருகை தந்திருந்த பிரமுகர்கள், இந்து மக்கள் மற்றும் சிவதொண்டர்கள் அனைவரும் மங்கள வாத்தியம் முழங்க, நந்திக்கொடிகள் தாங்கிய வண்ணம் அங்கிருந்து ஊர்வலமாக அழைத்து வரப்பட்டு, நல்லூர் கந்தசுவாமி கோயிலை வலம் வந்து வணங்கிய பின்னர், நல்லூர் ஸ்ரீ துர்க்காதேவி மணிமண்டபத்தை வந்தடைந்தார்கள்.

ஸ்ரீ துர்க்காதேவி மணிமண்டபத்தின் நாவலர் அரங்கில் காலை 8.30 மணியளவில் மங்கள விளக்கேற்றல், வேதபாராயணம் திருமுறை ஓதல் என்பவைகளைத் தொடர்ந்து முதலாவது அமர்வாக மாமன்றத் தலைவர் மனிதநேயமாமணி, இந்து சிரோரத்தினம் வி. கயிலாசபிள்ளை அவர்களது தலைமையில் சிறப்புப் பேரரங்கு ஆரம்பமானது. நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் அவர்களும், இலங்கை இராமகிருஷ்ண மிஷன் தலைவர் சுவாமி சர்வரூபானந்தா மகராஜ் அவர்களும் ஆசியுரைகள் வழங்கினார்கள். இதனைத் தொடர்ந்து மாமன்ற பொதுச் செயலாளர் திரு. கந்தையா நீலகண்டன் அவர்கள் தொடக்கவுரையாற்றினார்கள். இதன்பின் மாமன்றத் தலைவர் மனிதநேயமாமணி வி. கயிலாசபிள்ளை ஆற்றிய தலைமையுரையைத் தொடர்ந்து, சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொண்ட யாழ். இந்திய உயர் ஸ்தானிகராலய இராஜதந்திர அலுவல்கள் நாயகம் கௌரவ வி. மகாலிங்கம் அவர்களும், இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் திருமதி சாந்தி நாவுக்கரசன் அவர்களும் வாழ்த்துரை வழங்கினார்கள். அமெரிக்காவிலிருந்து வருகை தந்திருந்த திரு. கி. பாலசுப்பிரமணியம் அவர்களும் இந்த நிகழ்வில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார்.

இதனைத் தொடர்ந்து மாமன்ற உப தலைவர் செஞ்சொற்செல்வர் ஆறு. திருமுருகன் அவர்கள் "சிவ தொண்டர் அணியின் மகிமையும், சைவவித்தகர் பயிற்சியும்" எனும் தலைப்பில் உரையாற்றினார். உரையைத் தொடர்ந்து இவருக்கு இந்து ஆராய்ச்சி நிலையத்தின் கௌரவ இயக்குநர் பதவிக்கான நியமனம் வழங்கப்பட்டதுடன், இவரது அகவை ஐம்பது நிறைவையொட்டிய (பொன்விழா) சிறப்புக் கௌரவ நிகழ்வும் இடம்பெற்றது. "ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன் மகனை சான்றோன் எனக் கேட்டதாய்" என்ற வள்ளுவர் குறளுக்கு அமைய தமிழ் கூறும் நல்லுலகத்தால் பாராட்டிப் போற்றப்படும் தனது புதல்வரின் பெருமையில் பெருமகிழ்வுறும், அவரது அன்னையாரையும் ஒன்றாக இணைந்திருக்கச் செய்து பொன்விழா நிகழ்வில் கௌரவம் வழங்கப்பட்டது ஒரு சிறப்பான வைபவமாகவே அமைந்திருந்தது. மாமன்ற முகாமைப் பேரவையினருடன், கல்விச் சமூகத்தினர் அறிஞர் பெருமக்கள் நண்பர்கள், உறவினர்கள் என்றெல்லாம் பெருமளவினர் செஞ்சொற்செல்வருக்கு பொன்னாடை போர்த்தி, மலர் மாலை அணிவித்து பாராட்டிப் போற்றியமை சிறப்புக்குரியது. இதன்போது நல்லை ஆதீன முதல்வர் "சைவ ஞானபானு" என்ற பட்டத்தை வழங்கி இவரைக் கௌரவித்திருந்தமையும் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது.

இந்த கௌரவிப்பு நிகழ்வைத் தொடர்ந்து மாமன்றத்தின் சைவ வித்தகர் பயிற்சி நெறிக்காக தெரிவுசெய்யப்பட்டவர்களுக்கான

நியமனங்கள் வழங்கப்பட்டு, அவர்கள் அறிமுகம் செய்யப்பட்டார்கள். இதன் பின்னர், மாமன்றக் காலாண்டிதழான "இந்து ஒளி – சிவதொண்டர் மாநாடு சிறப்பிதழ்" வெளியீடு இடம்பெற்றது. மாமன்ற விடுதிகள் குழுச் செயலாளர் திருமதி அ. கயிலாசபிள்ளை அவர்களிடமிருந்து தினக்குரல் நிறுவன முதல்வர் திரு. எஸ். பி. சாமி சிறப்பிதழின் முதற்பிரதியைப் பெற்றுக்கொண்டார். கிழக்குப் பல்கலைக்கழக முதுநிலை விரிவுரையாளர் சிவஸ்ரீ. ம. பாலகைலாசநாதசர்மா அவர்கள் வெளியீட்டுரையை நிகழ்த்தியிருந்தார். இந்த நிகழ்வைத் தொடர்ந்து சிறப்பு விருந்தினராக வருகை தந்திருந்த உயர் நீதிமன்ற ஓய்வுபெற்ற நீதியரசர் சி.வி. விக்னேஸ்வரன் அவர்களது பேருரைஇடம்பெற்றது. தொடர்ந்து நன்றியுரையுடன் சிறப்புப் பேரரங்கு நிகழ்வு நிறைவுபெற்றது.

மதிய போசனத்தை தொடர்ந்து பிற்பகல் 1.30 மணியளவில் தேசிய கல்வி நிறுவகத்தின் முன்னாள் பணிப்பாளர் நாயகம் கலாநிதி குமாரசாமி சோமசுந்தரம் அவர்களது தலைமையில் இரண்டாவது அமர்வு ஆரம்பமானது. இராமகிருஷ்ண மிஷன் தலைவர் சுவாமி சர்வரூபானந்தா மகராஜ் அவர்கள் "சுவாமி விவேகானந்தர் காட்டிய பாதையில் மக்கள் தொண்டு" எனும் பொருளில் சிறப்புரையாற்றினார்.

இவரது சிறப்புரையைத் தொடர்ந்து மாமன்றத்தின் சமூகநல சேவைத் திட்டத்தின்கீழ் அன்பளிப்பு வழங்கல் நிகழ்வு இடம்பெற்றது. பசுமாடு உதவித் திட்டம் தொடர்பாக மாமன்ற சமூகநலன் குழுத் தலைவர் விடைக்கொடிச்செல்வர் சின்னத்துரை தனபாலா அவர்களால் அறிமுகம் செய்யப்பட்டு, நலன்பெறுவோருக்கான நிதியுதவிகள் வழங்கப்பட்டன. இதன்பின் தையல் இயந்திரம் உதவித் திட்டம் தொடர்பாக மாமன்ற சமூகநலன் குழுச் செயலாளர் கலாநிதி முத்தையா கதிர்காமநாதன் அவர்களால் அறிமுகம் செய்யப்பட்டு, நலன் பெறுவோருக்கு தையல் இயந்திரங்கள் அன்பளிப்புச் செய்யப்பட்டன.

இதனைத் தொடர்ந்து கல்வித்துறை சார்ந்த அறிஞர்கள் கலந்து கொண்ட ஆய்வரங்கு இடம்பெற்றது. யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத் துறை விரிவுரையாளர் திரு. பொ. சந்திரசேகரம், யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறை முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி எஸ். செல்வரஞ்சிதம், சைவப்புலவர் சித்தாந்த பண்டிதர் திரு. வ. ஆ. தங்கமயில், யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறை பேராசிரியர் (திருமதி) கலைவாணி இராமநாதன், யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறை முதுநிலை விரிவுரையாளர் திருமதி நாச்சியார் செல்வநாயகம், யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறை விரிவுரையாளர் திருமதி விக்னேஸ்வரி பவநேசன், மற்றும் திரு. க. ஈஸ்வரன் ஆகியோர் இந்த ஆய்வரங்கில் கலந்து கொண்டு சிறப்பித்திருந்தார்கள்.

முதலாம்நாள் நிகழ்வின் மூன்றாவது அமர்வு மாலை 5.30 மணியளவில் தெய்வத்திருமகள் சிவத்தமிழ்ச்செல்வி அரங்கில் ஆரம்பமானது. யாழ். பல்கலைக்கழக வாழ்நாள் பேராசிரியர் பா. கோபாலகிருஷ்ண ஐயர் தலைமையில் பேரரங்கு இடம்பெற்றது. சப்ரகமுவ பல்கலைக்கழக முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன் தொடக்கவுரை நிகழ்த்தினார். இதனைத் தொடர்ந்து "செஞ்சொற்செல்வம்" சிறப்பு நூலின் வெளியீடு இடம்பெற்றது. மாமன்றப் பொருளாளர் திரு. வே. கந்தசாமி நூலை வெளியிட்டு வைத்தார். தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான நிர்வாக சபை உப தலைவர் திரு. ச. ஆறுமுகநாதன் முதற் பிரதியைப் பெற்றுக் கொண்டார். யாழ். பல்கலைக்கழக பேராசிரியர் சி. சிவலிங்கராஜா "செஞ்சொற் செல்வம்" நூலின் வெளியீட்டுரையை நிகழ்த்தினார்.

இதனைத் தொடர்ந்து தமிழ்நாட்டிலிருந்து வருகை தந்திருந்த முத்தமிழ் வித்தகி பேராசிரியை (திருமதி) டாக்டர் சரஸ்வதி இராமநாதன் "அறம் செய விரும்பு" எனும் பொருளில் பேருரையாற்றினார். தொடர்ந்து தமிழ்நாடு கலைஞர்களான நவராஜ் சாருமதி தம்பதிகள் வழங்கிய பாரம்பரிய நடன நிகழ்ச்சிகள் சிறப்பு அம்சமாக இடம்பெற்றன. நன்றியுரையுடன் முதலாவது நாள் நிகழ்வு நிறைவுபெற்றது.

இரண்டாவது நாள் நிகழ்ச்சிகள் 29 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 9.00 மணிக்கு நல்லூர் ஸ்ரீ துர்க்காதேவி மணி மண்டபத்தின் சுவாமி விபுலானந்தர் அரங்கில் ஆரம்பமானது. யாழ் பல்கலைக்கழக உபவேந்தர் செல்வி வசந்தி அரசரத்தினம் அவர்கள் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார். முதலாவது அமர்வாக செஞ்சொற்செல்வர் ஆறு. திருமுருகன் தலைமையில் இடம்பெற்ற ஆய்வரங்கில் யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறை பேராசிரியர் மா. வேதநாதன், யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி சுகந்தினி முரளிதரன், யாழ். பல்கலைக்கழக நுண்கலைத்துறை தலைவர் கலாநிதி என். கிருஷ்ணவேணி, யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் திரு. ஈஸ்வரநாதபிள்ளை குமரன், யாழ். பல்கலைக்கழக உதவி விரிவுரையாளர் திரு. ந. ஜெயக்குமார், யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறை முதுநிலை விரிவுரையாளர் திரு. ப. கணேசலிங்கம் ஆகியோர் கலந்து கொண்டு கருத்துரைகளை முன்வைத்தனர். கிழக்கு பல்கலைக்கழக முதுநிலை விரிவுரையாளர் சிவஸ்ரீ மா. பால கைலாசநாத சர்மா அவர்களது நன்றியுரையுடன் ஆய்வரங்கு நிறைவுபெற்றது.

மதிய போசனத்தின் பின் பிற்பகல் 1.30 மணியளவில் சிவஸ்ரீ ம. பால கைலாச நாதசர்மா அவர்களது தலைமையில் ஆரம்பமான இரண்டாவது அமர்வின்போது சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் திருமதி சாந்தி நாவுக்கரசன் அவர்களது உரையைத் தொடர்ந்து, அச்சுவேலி சிவஸ்ரீ குமாரசுவாமிக்குருக்கள் அவர்களால் ஆக்கப்பட்ட "சிராத்த தீபிகை" நூலின் வெளியீடு இடம் பெற்றது. சிவஸ்ரீ எஸ். வைத்தீஸ்வரக் குருக்கள் அவர்களது அறிமுக உரையின் பின்னர் நூலின் முதற் பிரதியை மாமன்ற சமய விவகாரக் குழுத் தலைவர் திரு. க. ஜெகதீசன் அவர்களிடமிருந்து திரு. இ. எஸ். பேரம்பலம் அவர்கள் பெற்றுக்கொண்டார். திருவாவடுதுறை ஆதீனத்தின் சைவப்புலவர் ஏ. அனுசாந்தன் அவர்கள்" பஞ்சபுராண விளக்கம்" எனும் பொருளில் ஆற்றிய சிறப்புரை நிகழ்வின் சிறப்பு அம்சமாக இடம்பெற்றது.

இதனைத் தொடர்ந்து மூன்றாவது அமர்வாக மாலை 3.00 மணியளவில் ஆரம்பமான சிந்தனை அரங்கு, "திருத்தொண்டர் புராணம் கூறும் வாழ்வியல்" எனும் பொருளில் இடம்பெற்றது. கம்பவாரிதி இ. ஜெயராஜ் தலைமையில் திரு. இரா. செல்வவடிவேல், திரு. உ. பாலசண்முகன், திரு. இரா. கேதீசன், திரு. ஸ்ரீ. பிரசாந்தன், திரு. ச. லலிசன் ஆகிய உரைஞர்கள் கலந்து கொண்டு சிந்தனை அரங்கை சிறப்பித்திருந்தார்கள்.

இரண்டாம் நாள் நிகழ்வின் நான்காவது அமர்வாக ஞானவித்தகர் விநாசித்தம்பி அரங்கில் மாலை 5.30 மணியளவில்

இடம்பெற்ற பேரரங்கு நிகழ்வுக்கு பேராசிரியர் அ. சண்முகதாஸ் தலைமைவகித்தார். மாமன்ற சிவதொண்டர் அணிக் குழுத் தலைவர் வைத்திய கலாநிதி மு. கதிர்காமநாதன் "சிவதொண்டர் அணியின் செயற்பாடுகள்–ஒரு கண்ணோட்டம்" எனும் பொருளிலும், தமிழ்நாடு பேராசிரியை (திருமதி) சரஸ்வதி இராமநாதன் "இசையும் இறைவனும்" எனும் பொருளிலும் சிறப்புரையாற்றினார்கள். தமிழ் நாட்டிலிருந்து வருகைதந்து சிவதொண்டர் மாநாட்டின் இருநாள் நிகழ்வுகளின்போது கலந்து கொண்டு சிறப்பித்த பேராசிரியை சரஸ்வதி இராமநாதன் அவர்களுக்கு மாமன்றத்தின் சார்பாக சிறப்புக்கௌரவம் வழங்கப்பட்டது. சிறுமிகள் ஏழுபேர் மலர்களைத் தூவிப் போற்றுதல் செய்ய, அன்னையர்கள் ஏழுபேர் மலர்களை அணிவித்து வாழ்த்திக் கௌரவித்த நிகழ்வு வருகை தந்திருந்த அனைவரையும் பரவசப்படுத்தியது. இதன் சிறப்பு அம்சமாக நல்லை ஆதீனம் 'ஞானவித்தகி' என்ற பட்டத்தை வழங்கி பேராசிரியை அன்னையை கௌரவித்திருப்பதை சிறப்பாகக் குறிப்பிடலாம். இதனைத்தொடர்ந்து, தெல்லிப்பழை துர்க்காபுரம் மகளிர் இல்லப் பிள்ளைகள் வழங்கிய "சத்தியவான் சாவித்திரி" இசை நாடகமும், தேவானந்த் நெறியாள்கையில் நாடக செயற்பாட்டு அரங்கத்தினர் வழங்கிய "இறவாத இன்ப அன்பு" (காரைக்கால் அம்மையார் சரிதம்) நாடகமும் நிகழ்வின் சிறப்பு அம்சங்களாக இடம்பெற்றன. நன்றியுரையுடன் இரண்டாவது நாள் நிகழ்வுகள் இனிதே நிறைவுபெற்றன.

### ஒரு சைவவித்தகர் பயிற்சியாளரின் கண்ணோட்டத்தில்.......

# இந்து மாமன்றமும் யாழ் சிவதொண்டர் மாநாடும்

க. முரளிதரன்

எமது இந்து மதமானது ஆதியும் அந்தமும் இல்லாதது. ஆகையால்தான் தலைநிமிர்ந்து தனிச்சிறப்புடன் விளங்குகிறது. இதன் பெருமை எல்லாம் நம் முன்னோர்களுக்கே சொந்தமானது. பல்வேறு அந்நிய மதங்களின் இடையூறுகளிலிருந்து நமது மதத்தை காத்தவர்கள் பலர். அதன் பிறகு நமது இந்து சமயத்தை காப்பாற்றுகின்ற பொறுப்பும், அதனை வழி நடத்துகின்ற பணியும் யார் கையில் உள்ளது என எதிர்பார்க்கப்பட்ட வேளையிலேயே அகில இலங்கை இந்து மாமன்றம் உருவானது.



இலங்கை இந்து மன்ற அமைப்புகளினதும் ஆலய நம்பிக்கை பொறுப்புகளினதும் கூட்டமைப்பான அகில இலங்கை இந்து மாமன்றம் 1955 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதத்தில் தோற்றம் பெற்றது. அதிலிருந்து துரித வளர்ச்சியடைந்து, கொழும்பில் மாமன்ற தலைமையகம் 1996 ஆம் ஆண்டு திறந்து வைக்கப்பட்டது. இதன் மூலம் இந்து சமயத்திற்கான செயற்பாடுகள் விஸ்தரிக் கப்பட்டது. மாமன்றம் இன்று 56 வருடங்கள் நிறைவு பெற்றுள்ள நிலையில் வைர விழாவை நோக்கிச் செல்லும் பாதையின் சிறப்பு அம்சமாக, யாழ்நகரில் கர வருடம் வைகாசித் திங்கள் 14 ஆம் 15 ஆம் நாளில் (28.05.2011, 29.05.2011) சிவதொண்டர் மாநாட்டை ஏற்பாடுசெய்து நடத்தியிருந்தது.

இந்து மக்களிடையே சமய விழிப்புணர்ச்சியை ஊட்டும் வகையிலும், இன்றைய தலைமுறையிடையே சமய நெறியினை மேம்படுத்தும் நோக்கிலும், எதிர்கால சந்ததியினர்களுக்கு பயனுள்ள வகையிலும் இந்து ஆராய்ச்சி நிலையம் அமைத்து சைவவித்தகர் பயிற்சிநெறியை ஆரம்பித்துவைத்ததுடன் சிவ தொண்டர் மாநாடும் நடைபெற்றது. யாழ் மண்ணிலே நல்லூர் பிரதேசத்தில் இரு நாட்கள் நடைபெற்ற சிவதொண்டர் மாநாடு, உள்நாட்டு மற்றும் இந்திய அறிஞர்களின் பெரும் பங்களிப்புடன் சிறப்பாக நடைபெற்றது என்பதை குறிப்பிட்டுச் சொல்லாம். இம் மாநாட்டிற்கு கொழும்பு, மன்னார், மலையகம், மற்றும் கிழக்கு மாகாணம் போன்ற பிரதேசங்களிலிருந்து இந்து மக்களும் சிவதொண்டர் அணியினரும் வருகைதந்து இம் மாநாட்டை சிறப்பித்திருந்தார்கள்.

இரண்டு நாட்களாக நடைபெற்ற சிவதொண்டர் மாநாட்டிலே கலந்து கொண்ட அறிஞர்கள் பல்வேறு கருத்துக்களை முன்வைத்தார்கள். நமது சமுதாயத்தில் இந்து சமயத்தின் வளர்ச்சிநிலை, இந்து சமயத்தை நாம் எவ்வாறு காக்க வேண்டும் மற்றும் புராண நூல்களிலே கூறப்பட்டிருக்கும் நீதி, விருந்தோம்பல், நல்லறம், அன்பு, பெண்ணியம், தொண்டர்களின் பெருமை போன்ற பல்வேறு விடயங்கள் மிகவும் சிறப்பாக எடுத்துக்காட்டப்பட்டன. இவற்றை நமது வாழ்க்கையில் கடைப் பிடிப்பதோடு, பிறர்க்கும் உதவவேண்டும், இதன் மூலம் நமது சமுதாயம் சிறந்து விளங்குவதோடு இந்து சமயமும் சிறந்த நிலையை பெற்றுக்கொள்ளும் என்ற கருத்தினை பல்வேறு அறிஞர்கள் வெளிப்படுத்தினர்.

இதற்கு அமைவாகவே வறுமை நிலையில் வாழும் குடும்பப்பெண் களுக்கு மாமன்ற சமூக நலத்திட்டத்தின் கீழ் பசுமாடு

வளர்ப்பதற்கான நிதியுதவி மற்றும் தையல் இயந்திரங்கள் என்பனவும் வழங்கப்படுகின்றன. வன்னியிலிருந்து இடம்பெயர்ந்து வவுனியா நலன்புரி முகாம்களில் தங்கியிருந்து விட்டு யாழ்.பல்கலைக்கழகம் திரும்பிய பட்டதாரி மாணவர்களுக்கும் நிதியுதவிகள் செய்யப்பட்டு வருகின்றன. இவ்வாறான பல சமூகநல சேவைகளை இந்து மாமன்றம் செய்து வருகின்றது. மேலும் இந்து சமயத்தவரான நாமும் தன்னலம் கருதாது உதவிகளை மேற்கொள்ள வேண்டும் போன்ற கருத்துக்கள் சிவதொண்டர் மாநாட்டின்போது எடுத்துக்காட்டப்பட்டன.

மேலும் சிவதொண்டர் மாநாட்டின் இன்னொரு சிறப்பு அம்சமாக சிவதொண்டர் அணியின் சேவைகள் பற்றி வைத்திய கலாநிதி மு.கதிர்காமநாதன் அவர்கள் படக் காட்சிகளுடன் எடுத்துக் காட்டி உரையாற்றினார். இதன் மூலம் சிவதொண்டர் அணியினர் மன்னார் மாவட்டத்திலே ஆற்றிவரும் சிறப்பான சேவைகள் தெளிவாக புலப்படுத்தப்பட்டது. இத்தகைய செயற்பாடுகளை இந்து சமயத்தவர்களான நாமும் தன்னலம் கருதாமல் பின்பற்ற வேண்டும் என்றும், அனைவரும் முன்னுதாரணமாக இருக்க வேண்டும் எனவும் மாநாட்டிலே அறிஞர்களால் எடுத்துக்காட்டப்பட்டன.

எல்லாவற்றிக்கும் மேலாக சிவதொண்டர் மாநாட்டிற்கு மணி மகுடமாக அமைந்தது, பொன்விழா கண்ட செஞ்சொற்செல்வர் அவர்களை உள்நாட்டு வெளிநாட்டு அறிஞர்கள் பொன்னாடை போர்த்தி கௌரவப்படுத்திய நிகழ்வாகும். செஞ்சொற்செல்வர் அவர்களின் சமய சமூகநல சேவைகள் எண்ணில் அடங்காதவை. இதனை பெருமைப்படுத்தும் வகையில் நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம் "சைவஞானபானு" என்ற பட்டத்தை இவருக்கு வழங்கி கௌரவித்தது. இத்தகைய பல பாராட்டுக்களை தனது அன்னையின் அருகிலேயே அமர்ந்திருந்து பெற்று வள்ளுவன் வாக்கிற்கு இணையாக

*"ஈன்ற பொழுதில் பெரிதுவக்கும் தன்மகனை*
*சான்றோன் எனக் கேட்டதாய்"*

என்ற குறளுக்கு ஏற்ப தன் தாய்க்கு பெருமை சேர்த்தவர் ஆறு.திருமுகன் அவர்கள். இவருக்கு நிகர் இவரே என்று சொல்லும் அளவிற்கு இவரின் சேவைகள் நமக்கு எடுத்துக்காட்டாக அமைகிறது.

**சைவ வித்தகர் பயிற்சிநெறி**

சைவ அறிஞர் பெருமக்களது பங்களிப்புடன் மாமன்றத்தின் உப தலைவரான செஞ்சொற்செல்வர் ஆறு திருமுருகன் அவர்களது வழிகாட்டலில் செயற்பட்டு வருகிறது.

இப் பயிற்சி நெறியின் தன்மை பற்றி செஞ்சொற்செல்வர் கூறும் பொழுது இலங்கை முழுவதும் சைவப்பிரசாரகர்ளையும், சைவ சமய சேவையாளர்களையும், ஆன்மீக தலைவர்களையும் உருவாக்கும் வகையில் பாடநெறி அமைக்கப்பட்டுள்ளது, இக் கற்கை நெறியில் சமய அனுட்டானம், வரலாறு, தத்துவம், உளவியல், சோதிடம், கணினிப் பயிற்சி, ஆங்கிலம் உட்பட பல்வேறு நவீன விடயங்கள் போதிக்கப்பட்டு வருகின்றன. இதன் மூலம் நாவலர் பெருமானின் கனவினை நனவாக்கும், செயற்பாடு இந்து மாமன்றத்தினால் நல்லூரில் ஆரம்பித்திருப்பது பாராட்டத்தக்கது என்றார்.

நல்லூர் ஸ்ரீ துர்க்காதேவி மணிமண்டபத்தில் நடைபெற்ற இவ்வாறான சிவதொண்டர் மாநாட்டினைப்போல ஏனைய மாவட்டங்களிலும் நடாத்தி மேலும் பல சைவத் தொண்டர்களை உருவாக்க வேண்டும். இத்தகைய பலம் பொருந்திய செயற்பாட்டின் மூலமே நமது இந்து மதமானது எதுவிதமான குறைவும் இல்லாமல் நிறைவாக எதிர்கால சந்ததியினரிடம் போய்ச்சேரும். வாயளவில் இருந்து விடாது நமது செயற்பாடுகளை தொடரவேண்டும். இப்பிறவியில் பிறந்த பயனை அடையவேண்டுமானால் நாம் நல்ல சமய, சமுதாய சேவைகளை செய்யவேண்டும்.

எந்த மதத்திற்கும் இல்லாத தனிப்பெருமை நமது மதத்திற்கு உள்ளது. இப்பெருமை காக்க வேண்டிய பொறுப்பு நமது கைகளிலேயே உள்ளது. ஆகவே நமது சமயத்தை அழிய விடாமல் காத்து மேன்மைகொள் சைவநீதியை உலகம் எல்லாம் விளங்கும் வகையில் செயற்பட்டுவரும் அகில இலங்கை இந்து மாமன்றத்துடன் இணைந்து அதன் வளர்ச்சிக்கும் சிறப்புக்கும் இந்து மக்கள் அனைவரும் தன்னலம் கருதாமல் தங்கள் சேவையைத் தொடர வேண்டும். இத்தகைய சிறப்பினை உணர்த்தும் வகையில் சிவதொண்டர் மாநாட்டினை இலங்கை முழுவதும் நடாத்தி சிறப்பு பெறுவோமாக!

# அகில இலங்கை இந்து மாமன்ற யாழ். பிராந்திய அலுவலகத்தில் சைவ வித்தகர் பட்டப்படிப்பு

மேற்படி பயிற்சி நெறி மாமன்ற யாழ். பணிமலையில் 2011 மே மாதம் தொடக்கம் நடைபெற்றுவருகிறது. இது ஒருவருடகாலப் பயிற்சி நெறியாகும். பயிற்சி நெறியைப் பூர்த்தி செய்பவர்களுக்கு இந்து கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அங்கீகாரத்துடன் சான்றிதழ் வழங்கப்படும்.

பயிற்சிக் காலத்தில், உணவு மற்றும் தங்குமிட வசதிகள் என்பன அகில இலங்கை இந்து மாமன்றத்தால் வழங்கப்படுவதுடன், மாதாந்தம் ஊக்குவிப்புக் கொடுப்பனவும் வழங்கப்படும்.

க. பொ. த (சா. த) பரீட்சையில் சித்தியடைந்த 20 வயதுக்கும் 30 வயதுக்கும் இடைப்பட்ட ஆண்கள் இப்பயிற்சி நெறிக்கு விண்ணப்பிக்கலாம். பயிற்சிப் பாடத்திட்டத்தில் சமய நெறியூடாக சமூகசேவை, ஆளுமைப்பயிற்சி, ஆங்கிலம் மற்றும் கணினிப்பயிற்சி என்பன உள்ளடக்கப்படும்.

இக் கற்கை நெறிக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் A4 தாளின் ஒரு பக்கத்தில் தயாரிக்கப்பட்ட சுய விபரங்கள் அடங்கிய விண்ணப்பத்துடன் இரு நற்சாட்சிப்பத்திரங்கள், தேசிய அடையாள அட்டை என்பவற்றின் பிரதிகளையும் இணைத்து இம்மாத முடிவுக்கு முன் பொதுச் செயலாளர், அகில இலங்கை இந்து மாமன்றம், 91/5 சேர் சிற்றம்பலம் A. கார்டினர் மாவத்தை, கொழும்பு -02 என்ற முகவரிக்கு அனுப்பவும், கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "சைவவித்தகர் பட்டப்படிப்புக்கான விண்ணப்பம்" என எழுதல் வேண்டும்.

# வாழ்த்துப்பா



**யாழ்ப்பாணத்தில் அகில இலங்கை இந்து மாமன்றம் நடத்திய சிவதொண்டர் மாநாட்டின் போது கௌரவம் பெற்ற, சைவஞானபானு செஞ்சொற்செல்வர் ஆறு. திருமுருகன் அவர்களுக்கு பேராசிரியர் சி. சிவலிங்கராஜா அவர்களால் 28.05.2011 இல் வழங்கப்பட்ட வாழ்த்துப்பா**

பள்ளிப் பருவ நாளிருந்து
பழகும் தமிழில், சைவத்தில்
உள்ளந் தன்னைப் பறிகொடுத்து
உயர்ந்த ஆறு திருமுருகா,
நீறு பொலியும் நெற்றியினான்
நீசத் தனங்கள் சிறுதுமிலான்ஆறுமுக!
அண்ணல் நல்ல ஆசிரியன்
அருமருந் தன்ன பண்பாளன்
ஒப்புயர் வில்லாச் சரஸ்வதி
உமையாள் ஒத்த திருவாட்டி
இருவரும் இணைந்த தவத்தாலே
இந்நிலம் வந்த பேராளன்
இனிய மனதுச் சீராளன்!

உற்றவர், ஊரார் உலகமெலாம்
உவக்கச் சமயப் பணிக்காக
அர்ப்பணிப் போடு பணியாற்றி
அறிவால் உயர்ந்த திருமுருகா – நீ
கல்விப் புலத்தில், காவினொழுகும்
சொல் விற்பனத்தில், சிவபூமி
செய்யும் தருமச் செயல்களிலும்
உன்னை இணைத்து உயர்வுற்றாய்!

வானில் பறந்திவ் வையமெல்லாம்
வாழும் சைவக் குலங்களுக்குத்
தேனில் குழைத்த தீந்தமிழால்
தெய்வச் சிறப்பை ஓதுகின்ற
ஞானச் செல்வா! நானிலத்தோர்
செஞ்சொற் செல்வர் எனப்போற்றி
நெஞ்சத் திருத்தித் துதிக்கின்றார்.
தருமம் தழைக்கத் தமிழ் தழைக்க
தானம் சிறக்கத் தாரணியில்
பெருகும் சைவ நெறிவளரப்
பெரிதும் உழைக்கும் பெம்மானே!

உண்மைத் தொண்டன் நீயென்று
உலகம் உவந்து உரைக்கிறது.
சிவனடி யார்கள் புகழ்பாடும்
செஞ்சொற் செல்வ!
சைவநெறி உன்புகழைப்பாடும்
உண்மையிது
நெஞ்சத்தாலும் பிறர்க் கின்னல்
நினைத் திடாத திருமுருகா!
பஞ்சம் பசியில் பட்டினியில்
பதறும் பாலர் தமைக்காத்துத்
தஞ்சமளித்த தங்கம்மா
தத்தெடுத்திட்ட தவப்புதல்வா
எல்லை இல்லா அருள்நல்கும்
தெல்லி நகரின் துர்க்கைதரும்
வல்லமையாலே வளர்கின்ற
வாடா மலராம் திருமுருகா ! ...நீ

நல்லவை யெல்லாம் பெற்றிந்த
நானிலம் பயன்பெற வாழ்கஎன(ச்)
சொல்லால், செயலால், உள்ளத்தால்
சொன்னேன் வாழி பல்லாண்டு!

## அகில இலங்கை இந்து மாமன்ற நடுத்தீர்ப்பு நிலையம்

ஓர் இந்து ஆலயம், அல்லது இந்து சமய நிறுவனம், அவற்றின் நம்பிக்கைப் பொறுப்பு தொடர்பாக ஏதேனும் பிணக்குகள் இருப்பின் அப்பிணக்கினை ஆற்றுப்படுத்தும் நோக்கத்திற்காக அகில இலங்கை இந்து மாமன்றம் "நடுத்தீர்ப்பு நிலையம்" ஒன்றினை நிறுவியுள்ளது என்பதனை சகலருக்கும் அறியத்தருகின்றோம்.

அகில இலங்கை இந்து மாமன்ற நடுத்தீர்ப்பு விதிகளுக்கமைவாக விசாரணை நடாத்தப்பட்டு நடுத்தீர்ப்பு வழங்கப்படும். இது சம்பந்தமான விதி முறைகளோ அல்லது வேறு விளக்கங்களோ தேவைப்படுவோர் அகில இலங்கை இந்து மாமன்றத்துடன் நேரிலோ, கடிதமூலமோ, தொலைபேசி (011 – 2434990), தொலைநகல் (011 2344720) மூலம் தொடர்பு கொள்ளலாம்.

மேலும் இந்து ஆலயம் இந்து சமய நிறுவனங்கள் தமது பிணக்குகளை நீதிமன்றங்களுக்கு எடுத்துச் செல்ல வேண்டிய அவசியமில்லை. இந்து சமய அறிவு மிக்க நடுவர்கள் மூலம் இப்பிணக்குகள் விரைவாகவும், இலகுவாகவும் தீர்க்கப்பட முடியும்.



# இந்து மாமன்ற விழாவில் ஆறு. திருமுருகனுக்கு கௌரவிப்பு

இலங்கை முழுவதிலும் வாழும் சைவத் தமிழ் மக்களிடையே சமய விழிப்புணர்ச்சியை ஊட்டும் வகையில், இளைய தலைமுறையிடையே சமய நெறியை மேம்படுத்தும் நோக்கில், இந்து சமய ஆராய்ச்சி நிலையம் அமைத்து, சைவ வித்தகர் பயிற்சி ஆரம்பிக்க அகில இலங்கை இந்து மாமன்றம் ஏற்பாடுகளைச் செய்ய ஆரம்பித்திருக்கிறது.

சமீபத்தில் யாழ்ப்பாணம், நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்தில் இரு நாட்கள், இந்து மாமன்றம் நடாத்திய சிவ தொண்டர் மகாநாட்டில் இவ்விதமான முக்கிய விஷயங்கள் அறிஞர்களால் பேசப்பட்டு. தீர்மானங்கள் எடுக்கப்பட்டன. நல்லை ஆதீனமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞான சம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் மற்றும் இலங்கை இராமகிருஷ்ண மிஷன் சுவாமிகள் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்ற பெருவிழாவில், யாழ்ப்பாணத்தில் மாமன்றப் பணிமனை அமைவதற்குக் காரணமாக இருந்த செஞ்சொற் செல்வர் ஆறு. திருமுருகன் அவர்களுக்கும் கௌரவம் அளிக்கப்பட்டது.

50 ஆவது அகவையில் காலடி வைக்கும் ஆறு திருமுருகனின் முக்கிய பணிகளுக்குச் சான்றாக விளங்கும் யாழ். சிவபூமி, கோண்டாவில் சிறுவர் மனவிருத்திப் பாடசாலை, சுழிபுரம் முதியோர் இல்லம் போன்றவற்றின் மூலமும், சிவத்தமிழ்ச் செல்வி விட்டுச் சென்ற பணிகளைப் பொறுப்பெடுத்து அவர் ஆற்றும் பணிகளையும் மகாநாட்டில் அறிஞர்கள் போற்றிப் பாராட்டினர்.

சமய சமூக நலப் பணிகளுடன் சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி அதிபராக அவர் இருந்து ஆற்றும் கல்விப் பணியையும் அறிஞர்கள் பாராட்டினர். ஆறுமுக நாவலர், சுவாமி விபுலானந்தர், சிவத்தமிழ்ச் செல்வி, அருட்கவி வினாசித் தம்பி ஆகிய நான்கு அரங்குகளில் அறிஞர்களால் ஆய்வுகள் நடாத்தப்பட்டன.

சிவத்தமிழ்ச்செல்வி அரங்கில் செஞ்சொற்செல்வர் ஆறு திருமுருகனது 50 ஆவது அகவையைக் குறிக்கும் வகையில், 'செஞ்சொற் செல்வம்' என்ற சிறப்பு நூல் வெளியீடு இலக்கியக் கலாநிதி, பேராசிரியர் க. கோபாலகிருஷ்ணன் தலைமையில் நடைபெற்றது. பாடசாலை வாழ்க்கை முதல் கம்பன் கழகத்தின் வளர்ச்சியில் திருமுருகன் ஆற்றிய பணிமுதல், பல்வேறு அவர் சம்பந்தப்பட்ட அரிய விஷயங்கள் எழுத்துக்களாக வெளிவந்துள்ளன.

கம்பன் கழக கம்பவாரிதி இ. ஜெயராஜ் உரையாற்றும் போது, இப்பணியை இளைய சமூகம் பொறுப்பேற்க தயாராக வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். அவர் வழிவந்த ஸ்ரீகாந்தனுக்கு டாக்டர் பட்டம் கிடைத்த மகிழ்ச்சியையும் இப் பெருவிழாவில் அறிஞர்கள் பகிர்ந்து கொண்டனர்.

தமிழக பேராசிரியை சரஸ்வதி இராமநாதன் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு, இந்து மாமன்றத்தின் பணியையும், திருமுருகனது மனித நேயத்தையும், பேச்சாற்றலையும் வியந்துரைத்தார்.

பிரதம விருந்தினர் உயர் நீதிமன்ற முன்னாள் நீதியரசர் சி.வி. விக்னேஸ்வரன், சிவஸ்ரீ கைலாசநாதசர்மா, இந்து மாமன்ற பொதுச் செயலாளர் கந்தையா நீலகண்டன் மற்றும் பல விரிவுரையாளர்கள், அறிஞர்கள் கலந்து சிறப்பித்தனர்.

(லண்டனுக்கு விடுமுறைக்காக வந்திருக்கும்
முன்னாள் பிரதி கணக்காளர் நாயகமும்,
இந்து மாமன்றத்தின் நெருங்கிய தொண்டருமான
**ஆ. இராஜரத்தினம்**
மேற்படி தகவல்களை தந்து உதவியுள்ளார்.)

**லண்டன் 'புதினம்'**
**(31.07.2011)**

# நல்லூரான் குறள்

1. நல்லூரான் நல்லருளான் நன்மனமே நல்லூரான்
நல்லூரான் என்றே நவில்.

2. நவில்வோர்க்கு நல்லூரான் நற்பாத இன்பம்
புவிமேலே நல்குவான் போற்று.

3. போற்று மடியார்கள் பொற்பாத இன்பமே
ஏற்று மகிழ்வார் இனிது.

4. இனிதாய நல்லூரான் இன்னடிகள் போற்றி
நனிவாழ்க என்றும் நயந்து

5. நயந்துநாம் நல்லூரான் நற்பதத்தை உன்ன
நயந்தருள்வான் நல்லூரான் நன்கு.

6. நன்குநாம் நல்லூரான் நல்லருள்தா என்றலுமே
இன்பா ரருளீவான் ஏற்று.

7. ஏற்றில் வருகின்ற எங்களிறை தன்மகனே
போற்றுநல்லூர் வாழ்வான் புகழ்.

8. புகழ்ந்தேநல் லூரான் புனிதவடி வாழ்த்த
உகந்தே அருள்வான் உரை.

9. உரைக்கும் உணர்வுக்கும் எட்டாநல் லூரான்
விரைப்பாத மேநீ விரும்பு.

10. விரும்பிநல் லூரான் விரைமலர்த்தாள் போற்றத்
தரும்நற் சிவஞானந் தான்.

## இரத்மலானை விடுதி நன்கொடைகள்

இரத்மலானை மாணவர் விடுதிக்கு சமைத்த உணவு, உப உணவுப் பொருட்கள், பால்மா, உடுப்பு வகைகள், மருந்து வகைகள், விளையாட்டுப் பொருட்கள், மற்றும் விடுதிக்குரிய பாவனைப் பொருட்கள், அத்தியாவசியப் பொருட்கள் போன்றவற்றை அன்பளிப்பாக வழங்கியவர்கள் விபரம் :

**ஏப்பிரல் மாதம் – 2011**

01. திருமதி பபிமோகன்
02. திருமதி எம். சிவஞானம்
03. திரு. ராகுலன் கனடா
04. திருமதி பிளோறன்ஸ்
05. செல்வி மாலினி
06. சாயி சமித்தி
07. விஷ்ணு கோயில்
08. திருமதி சிறிகாந்தன்
09. செல்வி எஸ். நாகலிங்கம்
10. முத்துகிருஷ்ண சுவாமி மிஷன்
11. திரு. S. குலசபாநாதன்

**மே மாதம் – 2011**

01. திருமதி பொன்னுச்சாமி, வெள்ளவத்தை
02. திருமதி ஆர். விக்னேஸ்வரன் கொழும்பு – 8
03. திருமதி எஸ். மகாதேவா
04. சக்தி மிஸ்
05. திருமதி கஜேந்திரன், கொழும்பு 6
06. திரு. ராகுலன், கனடா
07. சாயி சமித்தி
08. விஷ்ணு கோயில்
09. முத்துகிருஷ்ண சுவாமி மிஷன்

**யூன் மாதம் – 2011**

01. திரு. எஸ். கிருபானந்த மூர்த்தி, கொழும்பு – 6
02. பிசொப் கல்லூரி, கொழும்பு – 3
03. கந்தையா. மதிவதனி, சொய்சாபுரம்
04. திரு. வி. ராகுலன், கனடா
05. சாயி சமிர்த்தி
06. விஷ்ணு கோயில்
07. திருமதி தர்சி நரேந்திரன், தெஹிவளை
08. எம். எவ். பீ. நிறுவனம் நுகேகொட
09. முத்துக்கிருஷ்ணசுவாமி மிஷன்

## நல்லூரான் குறள்

தானே மறைப்பொருளைத் தந்தைக் குபதேசத்
தாலே உரைத்தானே தான்.

தானென்று நானென்று தன்மைவே றாகாது
தானென்றே நின்றான் சரண்.

அகில இலங்கை இந்து மாமன்றத்தின் பராமரிப்பிலுள்ள பிள்ளைகளின் இரத்மலானை மாணவர் விடுதிக்கு நன்கொடையாகவும், மாணவர்களது போசனத்திற்காகவும் கிடைத்த நிதிஉதவி விபரம் :

**ஏப்பிரல் மாதம் – 2011**

| | |
|---|---|
| 01. திருமதி S. திருவாதவூரன் | 25 000/= |
| 02. திருமதி மகாநாதன் | 15 000/= |
| 03. செல்வி S. அரவிந்தன் | 20 000/= |
| 04. திரு & திருமதி கயிலாசபிள்ளை | 20 000/= |
| 05. டொக்டர் (திருமதி) செல்லையா | 20 000/= |
| 06. திரு & திருமதி புஸ்பநாதன் | 20 000/= |
| 07. திருமதி இராஜபுவனேஸ்வரன் | 10 000/= |
| 08. திருமதி A. ஞானேஸ்வரி | 10 000/= |
| 09. திரு. ஈஸ்வரக்குருக்கள் | 1 500/= |
| 10. திருமதி அனுஷா ஸ்ரீநிவாசன் | 20 000/= |
| 11. திருமதி திருநாவுக்கரசு | 5 000/= |
| 12. திருமதி இரவிக்குமார் | 20 000/= |
| 13. திருமதி S. இரகுநாதன் | 20 000/= |
| 14. திரு. C.K சகாதேவன் | 5 000/= |
| 15. செல்வி தர்மினி & செல்வி சத்தியா | 20 000/= |
| 16. திரு R. இராஜ்சங்கர் | 20 000/= |
| 17. திரு K. சதானந்தன் | 20 000/= |
| 18. செல்வி அபிநயா | 25 000/= |
| 19. திரு & திருமதி கணேசராஜா | 20 000/= |
| 20. திரு இராமச்சந்திரன் | 3 000/= |
| 21. திரு & திருமதி பரராஜசிங்கம் | 20 000/= |
| 22. திரு T. தர்ஷன் | 6 000/= |
| 23. செல்வி விஜிபா | 20 000/= |
| 24. Dr. சிவபாலன் | 20 000/= |
| 25. திருமதி நிமலகுமாரன் | 20 000/= |
| 26. திருமதி நடராஜா | 15 000/= |
| 27. திருமதி நாகலிங்கம் | 40 000/= |
| மொத்தம் | 460 000/= |

**மே மாதம் – 2011**

| | |
|---|---|
| 01. Dr. T. ஆனந்தமூர்த்தி | 17 500/= |
| 02. திரு. குலசப்பாநாதன் | 5 000/= |
| 03. திரு & திருமதி திருக்குமரன் | 20 000/= |
| 04. திரு. N. விக்னராஜா | 55 000/= |
| 05. திரு. N. உதயன் | 20 000/= |
| 06. திரு & திருமதி சஞ்சீவ் | 20 000/= |
| 07. திரு. S. இராமச்சந்திரன் | 3 000 /= |
| 08. திரு C.K. சகாதேவன் | 5 000/= |
| 09. செல்வி சிவா. சுப்ரமணியம் | 10 000/= |
| 10. செல்வி வாணி | 20 000/= |
| 11. திரு S. அபராஜிதன் | 12 500/= |
| 12. திரு & திருமதி பேரின்பமணி | 20 000/= |
| மொத்தம் | 208 000/= |

யூன் மாதம் – 2011

| | | |
|---|---|---|
| 01. | திரு. இராஜேஸ்கண்ணா | 20 600/= |
| 02. | திருமதி B. சிறீதரன் | 20 000/= |
| 03. | திரு. A. மகேந்திரன் | 20 000/= |
| 04. | திருமதி இராகவன் | 20 000/= |
| 05. | திரு & திருமதி ஆறுமுகம்பிள்ளை | 20 000/= |
| 06. | செல்வி. தெயாவிழினி | 20 000/= |
| 07. | திரு. குலசபாநாதன் | 5 000/= |
| 08. | திருமதி ஜெயந்தி லூயிஸ் | 20 000/= |
| 09. | திருமதி இந்துமதி (U.K) | 32 175/= |
| 10. | திரு. R. இராஜலிங்கம் | 20 000/= |
| 11. | திருமதி ஞானாலோகநாதன் (AUS) | 33 500/= |
| 12. | திரு & திருமதி ஜெயசூரியா | 60 000/= |
| 13. | திரு.W.S. செந்தில் நாதன் | 20 000/= |
| 14. | மனித நேய நிதியம் | 1 020 000/= |
| 15. | திரு. K. அரவிந்தன் | 20 000/= |
| 16. | திருமதி K. சிவதாயினி | 20 000/= |
| 17. | திரு. க. செந்தூரன் | 35 000/= |
| 18. | திருமதி A. கயிலாசபிள்ளை | 20 000/= |
| 19. | செல்வி கஸ்தூரி | 35 000/= |
| 20. | திருமதி M. இரவிச்சந்திரன் | 20 000/= |
| 21. | திருமதி M.சிவாநந்தன் | 10 000/= |
| 22. | திருமதி A. இராமச்சந்திரன் | 20 000/= |
| 23. | திரு. M. கஜபரன் | 6 000/= |
| 24. | திரு. அமுதாஸ்கந்தன் | 25 000/= |
| 25. | திருமதி லலிதா நந்தகுமார் | 20 000/= |
| 26. | திரு C.K. சகாதேவன் | 5 000/= |
| 27. | திரு. V. ஆறுமுகம் | 20 000/= |
| 28. | திரு. கௌரீசன் | 20 000/= |
| 29. | திரு. C. சாம்பசிவம் | 20 000/= |
| 30. | திரு. சஞ்சு இராமச்சந்திரன் | 20 000/= |
| 31. | திருமதி சரஸ்வதி நாகேந்திரன் | 40 000/= |
| 32. | திரு. C. சாம்பசிவம் | 30 000/= |
| 33. | திரு. யோகநாதன் | 20 000/= |
| 34. | திரு. S. இராமச்சந்திரன் | 3 000/= |
| 35. | திருமதி. வைஷ்சவி | 20 000/= |
| 36. | திரு. S. சுதாகரன் | 20 000/= |
| 37. | Dr. S. மகேந்திரன் | 47 500/= |
| 38. | திருமதி S. கோமகள் | 20 000/= |
| 39. | திரு. V. ஆறுமுகம் | 1 000/= |
| 40. | திரு. N. கஜபரன் | 6 000/= |
| 41. | திருமதி கஸ்தூரி | 20 000/= |
| 42. | திரு. பாலகிருஷ்ணன் | 20 000/= |
| 43 | திரு M. கந்தையா | 20 000/= |
| 44. | திரு. ஞானபண்டிதன் | 17 500/= |
| 45. | செல்வி T. லுகர்ணா | 16 000/= |
| 46. | திரு. C. குரசபாநாதன் | 5 000/= |
| | மொத்தம் | 1 953 275/= |

# இரத்மலானை மாணவர் விடுதி

போர்ச் சூழ்நிலைகள் மற்றும் இயற்கை அனர்த்தங்களினால் பெற்றோர்களை இழந்தும், பாதிக்கப்பட்டுமுள்ள பிள்ளைகளின் நலன் கருதி அகில இலங்கை இந்து மாமன்றம் இரத்மலானையில் ஓர் இலவச விடுதியை ஆரம்பித்து நடத்திவருவதை உங்களில் பலர் அறிந்திருப்பீர்கள். 1998ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் ஆண் பிள்ளைகளுக்காக ஆரம்பிக்கப்பட்ட இவ்விடுதி பதின்மூன்று ஆண்டுகளை நிறைவுசெய்திருப்பது சிறப்புக்குரிய விடயம். அதனைத் தொடர்ந்து 2002ம் ஆண்டு ஜூன் மாதத்தில் பெண் பிள்ளைகளுக்காக 'சக்தி இல்லம்' என்ற பெயரில் மற்றுமொரு விடுதியும் ஆரம்பிக்கப்பட்டது.

மாமன்றத்தின் பராமரிப்பில் இயங்கிவரும் இவ்விரு விடுதிகளிலும் 150க்கும் மேற்பட்ட பிள்ளைகள் தங்கியிருக்கிறார்கள். இவர் அனைவரையும் இரத்மலானை இந்துக் கல்லூரியில் கல்வி பயில்வதற்கான வசதிகளுடன், மேலதிகமாக தனிப்பட்ட வகையில் கல்வி போதிப்பதற்காக பிரத்தியேக வகுப்புகளையும் மாமன்றம் ஏற்பாடு செய்துள்ளது. விடுதியில் மாதந்தோறும், ஒரு விடுமுறை நாளில் அந்த மாதத்தில் பிறந்த பிள்ளைகளது பிறந்தநாளும் கொண்டாடப் பட்டுவருகிறது.

இவ்விடுதியில் தங்கியிருக்கும் பிள்ளைகளுக்கு நீங்கள் அனைவரும் தாராளமாக உதவலாம். பிள்ளைகளுக்கு தினந்தோறும் உணவு, சிற்றுண்டிகளை வழங்குவதற்காக உங்கள் பங்களிப்பையும் எதிர்ப்பார்க்கிறோம்.

இதற்கான நன்கொடை விபரம் வருமாறு.

பிள்ளைகளின் உணவுக்கான நன்கொடை விபரம்.

| விபரம் | சாதாரணம் | விசேடம் |
|---|---|---|
| காலை உணவு | 12,500/= | 15,000/= |
| மதிய உணவு | 17,500/= | 20,000/= |
| இரவு உணவு | 17,500/= | 20,000/= |
| மாலைதேநீர்/சிற்றுண்டி | 12,500/= | 15,000/= |

உணவுக்கான நன்கொடை அல்லது மாணவர்களுக்கு உப உணவுப்பொருட்கள், பால்மா, உடுப்புவகைகள், மருந்து வகைகள் மற்றும் விடுதிக்குரிய பாவனைப் பொருட்கள், அத்தியாவசியப் பொருட்கள் போன்றவற்றை நன்கொடையாக தந்து உதவ விரும்புவோர் மாணவர் விடுதி மேற்பார்வையாளருடன் தொடர்பு கொள்ளலாம். தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கம் 011–2625588. அகில இலங்கை இந்து மாமன்றத் தலையகத்துடனும் தொடர்பு கொண்டு விபரங்களைப் பெறலாம்.
தொலைபேசி இல. 011–2434990
தொலை நகல். 011–2344720



# N. A.VAITHIALINGAM

## Chief Engineer who revamped the Railway

[The late Mr. N.A. Vaithialingam led our Building Committee advisers and worked with dedication to complete the Construction of ACHC HQ Building in Colombo ]

The seventh death anniversary of Namsivayam Arumugam Vaithialingam, the 12th Chief Engineer of the Ceylon Government Railways fell on July 7. Ceylon Railways history commences with laying rail tracks to the hill country to meet the requirements of the British planters. Thomas Drane, Capt W.S Moorsom, W.T Doyne, GL Molesworth and contractor W.T Faviel were the pioneers involved. The name of N. A Vaithialingam as the Chief Engineer who was the main partner in the "Technical leap forward in the Rampala period" will be recorded in golden letters along with these names by a writer of Railways history on a future date.

Vaithialingam was recruited by the crown agents when he was in England after his studies. Within a short time after his assuming duties the technical officers and staff in the subordinate grades observed that he was more benevolent, marking a difference from his predecessors who were mereimitators of the colonial masters. He got into stride when he assumed duties as District Engineer NANUOYA in 1949. His first task was to ameliorate the conditions of the labour grade, most of them were labour grade, most of them were descendants of the Indian labour that were brought down by the Britishers for the construction of the Railway, who were living in line rooms with their families. He made them more spacious, pipe borne water by daming streams that were flowing down from the hills. Toilets and other facilities were provided.

The day he moved out on transfer from Nanuoya, the grateful workers were so moved, they gathered at every station from Nanuoya to Peradeniya with their families with bouquets of flowers and tears in thier eyes, clasping their hands worshipping him and shouting "Sami. Sami".

His ability to work was shown when Rampala appointed him as the Engineer in charge of Reconstruction and Rehabilitation after the disastrous floods in December 1957. 740 miles (1184km) of the total network of 900 miles (1440km) were damaged and made unsafe for traffic. After marking some aerial surveys he planned out his work. Transport Minister Maithripala Senanayake was skeptical about the restoration within six months. With the fullest co-operation of the staff Vaithialingam handled the work and the last link from Ella ot Budulla was completed in February 1958. For the first time in Railway history he arranged to provide dry rations at the worksites to prepare their meals.

After the complete restoration, he prepared a comprehensive five year programmee. Cottage type quarters for the workmen, quarters for officers, restrooms for staff who had to stay overnight were built. Stations buildings with limited facilities were rebuilt with better facilities for commuters. New station buildings with retiring rooms and canteens at Anuradhapura, Jaffna (now damaged), Kandy, Nawalapitiya, Galle and Trincomallee came up under this programme. It was his concept that architecture of Station Buildings should keep with the historical architecture of the place.

The relaying of the Bangadeniya, Puttalam track with extension to Periyanagavillu to meet the requirement of the Cement Factory was another achievement. Even the construction Engineers at the initial stages to avoid extra problems of cutting and filling have laid rail tracks even in Northern and Batticaloa area with curves entailing speed restrictions. Under his development programme many of these curves were made straight or flatter curves.

The love and affection the staff had for him were displayed when farewell parties were held for a full month spread in the Railway. The most spectacular party was held in Jaffna organised by the Nothern District employees. The venue was the quadrangular in front of Jaffna Station, built under his directions.

A massive stage gaily decorated and illuminated. Tamil and Sinhala dances with interludes of recitals. Heenbaba Dharmasiri's troupe a bevy of Sinhalese girls on the stage won rounds of applause from the crowd. A replica of Jaffna Station made out of 30 gold sovereigns was presented to him. He was 92 years when he passed away.

This tribute written by Mr. B. B. Perera appeared in Daily News of 13.07.2011 at Page 11

BB PERERA

# நீங்காத நினைவில் பாலா

கந்தையா நீலகண்டன்
மாமன்ற பொதுச்செயலாளர்



அகில இலங்கை இந்து மாமன்றக் கட்டடத்தைப் பார்க்கும் போது அது வெறுமனே மாமன்றப் பணிகளை எடுத்துச் செல்வது மட்டுமே என்று எண்ணத்தோன்றாது. கட்டிடம் அமைவதற்கு யாரெல்லாம் தோளோடு தோள் கொடுத்து உதவினார்கள் என்பதே நினைவுக்குவரும். அந்த இக்கட்டான வேளையில் கைகொடுத்த மறக்கமுடியாத மாமனிதர்கள் அனுபவித்த துன்பங்கள், இன்னல்கள், மன உழைச்சல்கள், சோர்வுகள், ஏக்கங்கள் சொல்லும் தரமன்று. அவர்களது உழைப்பு, முயற்சி, திறமை, நேர்மை என்பதோடு அவர்கள் சிந்திய வியர்வையே கட்டிட வளர்ச்சிக்கு வித்திட்டது. இன்று கொழும்பு மாநகரில் உயர்ந்த கட்டிடங்களுள் ஒன்றாக நிமிர்ந்து நிற்கிறது அகில இலங்கை இந்து மாமன்றம் என்றால் அதற்கு அத்திபாரமிட்டவர்களுள் அதிக ஆர்வம்காட்டி, முழு அளவில் செயற்பட்டவர்களில் நம் கண்முன் நீங்காத நினைவாக நிற்பவர் மாமன்றத்தின் முன்னாள் தலைவர் அமரர் வே. பாலசுப்பிரமணியம் அவர்களே! இவரது சமய, சமூகப்பணியின் மகுடமாகக்குறிப்பிடக் கூடியது தலைமையகக் கட்டிடமாகும். மாமன்றத்திற்கான காணி கிடைத்தும் கட்டிடம் அமைப்பதற்கான வேளை மட்டும் வரவில்லை. அந்தக்கட்டிடவேலைகள் ஆரம்பிக்கப்படாத வேளையிலே மாமன்றத் தலைவராக 'பாலா' பொறுப்பேற்றார். மாமன்றத் தலைவராகவிருந்த நீதியரசர் வி. சுப்பிரமணியம் அவர்களின் மறைவினாலும், நாட்டின் நிலைமைகளாலும் நொந்து போயிருந்த உள்ளங்களுக்கு 'பாலா' வின் பதவியேற்பு உற்சாகத்தையும், நம்பிக்கையையும் தந்தது. அந்த வேளை எத்தனையோ பெரிய மனிதர்கள் முயற்சித்தும் இருபது வருடங்களாக இந்து மாமன்றக் கட்டடத்தை எழுப்ப முடியவில்லை. இவரால் முடியுமா என எண்ணியவர்களும் உண்டு. தலைவர் பதவியை திரு வே. பாலசுப்பிரமணியம் 26.10.1987 இல் ஏற்றார். மாமன்றக் கட்டிடத்தை எப்படியாவது கட்டிமுடிப்பது என்ற எண்ணக்கரு மனதுக்குள் விதையாக இருந்தது. அந்த வீரிய விதை அதன் வினைத்திறனைக் காட்டியது. 19.04.1987 அன்று தலைமையக வளவில் சாந்தி பூஜை ஒன்றை நடத்தி தன் முயற்சி திருவினையாக்க ஆண்டவன் அருளை வேண்டி நின்றார். தன் முயற்சிக்கு உறுதுணையாக இருப்பதற்கு பரோபகாரிகளையும், இந்துப்பெரியோர்களையும், பிரமுகர்களையும் 28.07.1988 தன் இல்லத்துக்கு அழைத்து வரவேற்று தேநீர் விருந்துபசாரம் செய்து அவர்களின் ஆதரவையும், மாமன்ற கட்டிட வளர்ச்சிக்கு கோரி நின்றார். அனைவரதும் ஆசியுடனும் ஆதரவுடனும் முதற் கட்டவேலை ஆரம்பிக்க எண்ணி தனது குடும்பத்தின் சார்பாக நிதியுதவி வழங்கினார். கிடைத்த நிதியுடன் 31.10.1990 நண்பகலில் அடிக்கல் நாட்டும் வைபவம் நடைபெற்றது. இந்து மக்களின் மனம் குளிரும் வண்ணம் மழை 'சோ' வென்று பொழிந்தது. சுகவீனமுற்றிருந்த வேளையிலும் மாமன்றத் தலைவர் வே. பாலசுப்பிரமணியம் அவர்கள் கொட்டும் மழையிலும் குடைபிடித்த வண்ணம் அந்த இனிய நிகழ்வில் கலந்து கொண்டார். குறுகிய காலத்தில் தனது குடும்பப் பணத்தைக் கொண்டு முதல் மாடிக்கட்டடத்தை முடித்து அடுத்த மாடிகள் அமைய வழிகோலியவர் வள்ளல் பாலா. அந்த எழில்மிகு மாமன்ற கட்டடத்தின் நடுநாயகமாக பாலாவின் படமும், கட்டிட வளர்ச்சிக்கு உற்ற துணையாக விளங்கியவர்களின் படங்களும் திரைநீக்கம் செய்யப்பட்டிருப்பது இத்தலைமுறையின் நன்றியின் வெளிப்பாடா கும். வடமராட்சியின் நடுநாயகமாக விளங்கும் கரவெட்டி தந்த 'பாலா' நிமிர்ந்த நடையும், நேர்கொண்ட பார்வையும் கொண்டவர். தன் ஊருக்கு மட்டுமல்ல நம் நாட்டுக்கே பெருமை தேடித்தந்த ஒரு செயல் வீரர். மாமன்ற கட்டடவேலைகள் சிறப்பாக நடைபெறும் வேளை 15.07.1992 அன்று மாமன்றத் தலைவர் காலமானார். இறக்கும் வரை மாமன்றக் கட்டிட வேலையிலேயே அவர் மனம் லயித்திருந்தது.

அமரர் பாலசுப்பிரமணியத்தின் இடத்தை தலைவராக நிரப்பிய மனிதநேயர், இந்துசிரோரத்தினம் திரு. வி. கயிலாசபிள்ளை தலைமையில் அவரது குடும்பத்தார், பிரதித்தலைவர் திரு. மா. தவயோகராஜாவின் குடும்பம், திரு. திருக்குமார் நடேசன், அமரர் க. குணரத்தினம் குடும்பம் தந்த தாராளமான நிதியுதவியுடன் 1996 ஆம் ஆண்டு அகில இலங்கை இந்து மாமன்றக் கட்டடம் முழு உருப்பெற்றது.

இன்று மாமன்றம் யாழ் நகரில் மூன்றுமாடிக் கட்டிடத்தினை கட்டி பிராந்திய அலுவலகம் ஒன்றினை அமைத்து சைவ வித்தகர் பயிற்சி நிலையம், இந்து ஆராய்ச்சி நிலையம் என்பவற்றை நடத்துகிறது. இந்நாட்டில் சைவசமயப் பிரசாரகர்களையும், சமயத்தொண்டர்களையும், சமயத் தலைவர்களையும் உருவாக்கும் நோக்கில் அகில இலங்கை இந்து மாமன்றம் சைவவித்தகர் பட்டப்படிப்பு நெறியினை சைவப்பிரசாரகர் நிலையத்தினூடாக ஆரம்பித்துள்ளது. இந்து மக்கள் தங்கள் சமய அறிவினை விருத்தி செய்யவும், சமய, கலாசார விழுமியங்களை ஐயந்திரிபற தெரிந்துகொள்ளவும் இந்து ஆராய்ச்சி நிலையம் உதவுகின்றது. ஏ9 வழியில் வவுனியா சிந்தாமணி பிள்ளையார் ஆலய அன்னதான மடம், மட்டக்களப்பு விபுலானந்தர் வயோதிபர் இல்லம் என நாட்டின் பல பகுதிகளிலும் மாமன்றத்தின் பணிகள் தொடர்கின்றன. இவையெல்லாம் அமரர் பாலசுப்பிரமணியம் அவர்கள் அடி எடுத்துக் கொடுத்ததுதான் என்றால் மிகையாகாது. என்றும் மனிதநேயப்பணி என்பதே மாமன்றத்தின் நோக்கம். பாலாவின் நினைவாக மாமன்றம் 14.07.2011 வியாழக்கிழமையன்று பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நினைவுப் பேருரையினை ஏற்பாடு செய்து நடாத்தியிருந்தது.. யாழ் பல்கலைக்கழக தமிழ்த்துறை பேராசிரியர் சி. சிவலிங்கராஜா அவர்கள் "கவிதை –சில தரிசனங்கள்" எனும் பொருளில் நினைவுப்பேருரையாற்றினார்.

கொழும்பு இந்து மகளிர் சங்கத்தின் தலைவியான அமரர் பாலாவின் மனைவி திருமதி சாந்தி பாலசுப்பிரமணியம் அவர்களும் கணவர் காட்டிய பாதையில் சமய, சமூக, கலை இலக்கிய மன்றங்களினூடாக பணியாற்றி அத்துறைகளை வளர்த்து வருவது இன்றைய தலைமுறையினருக்கு கிடைத்த வரப்பிரசாதமாகும்.

# அகில இலங்கை இந்து மாமன்றம் யாழ்ப்பாணத்தில் மே மாதம் நடாத்திய சிவதொண்டர் மாநாட்டிற்கு தமிழ்நாட்டிலிருந்து வருகைதந்த பேராசிரியை சரஸ்வதி இராமநாதன் அவர்களோடு இடம்பெற்ற கலந்துரையாடல்



பேராசிரியை சரஸ்வதி இராமநாதன் அவர்கள் சிவதொண்டர் மாநாட்டில் 'அறம் செயவிரும்பு' எனும் தலைப்பில் உரையாற்றினார்கள். கருத்தாழம், இலக்கிய நயம், சொற்தெளிவு, நகைச்சுவை, திரைப்படப்பாடல் என பல்வேறு வகையில் தனது உரையில் கலவை செய்து சபையோரை கவர்ந்து இழுத்த பேராசிரியை சரஸ்வதி இராமநாதனுடன் கலந்துரையாட வைத்தது. அவர் பேசிய சிலவற்றை முதலில் தந்து விட்டு கலந்தரையாடலுக்கு வருவது சிறப்பு என நினைக்கிறேன்.

சைவமும் , தமிழும் நடமாடிய இடம் யாழ்ப்பாணம். நாவலர் பெருமான் இந்த மண்ணில் தடம் பதித்ததால் சைவமும், தமிழும் இங்கே பெருக்கெடுத்து ஓடுகிறது. தமிழ்த் தெய்வம் நல்லூர் முருகனின் சந்நிதானத்திற்கு மிக அருகாமையில் நின்று பேசுவதற்கு நான் புண்ணியம் செய்திருக்கிறேன். இந்த இடத்தில் 'அறம் செய விரும்பு' எனப் பேசக்கிடைத்ததையிட்டு பேருவகை அடைகின்றேன். தென்னை மரத்தைப் பாருங்கள் மரத்தில் மட்டை இருக்கிறது. ஆறு அல்லது ஏழு மாதங்களின் பின்னர் அந்த மட்டை காய்ந்து மரத்திலிருந்து நிலத்தில் விழுகிறது. அந்தக் காய்ந்த மட்டை விழுந்த பிறகு அந்த மட்டை இருந்த தென்னைமரத்தில் மட்டையின் தழும்பு ஒன்று அடையாளமாக இருக்கிறது. வரிவரியாக தென்னை மரத்தில் காணப்படும் அந்த தழும்புகள் மட்டை இருந்ததற்கான அடையாளமே. ஆனால் அறுபது எழுபது வருடங்களாக இந்த மண்ணில் வாழ்ந்த மனிதன், தான் வாழ்ந்ததற்கான அடையாளமாக எதனை விட்டுச் செல்கிறான்? அதுதான் ஒன்று அன்பு, மற்றது தொண்டு. இந்த இரண்டும் தான் சிவத்தொண்டிற்கான அடையாளமும், இலட்சியமும். மனிதன் எவ்வளவு காலம் வாழ்ந்தான் என்பதல்ல கேள்வி. அவன் எப்படி வாழ்ந்தான் என்பதே கேள்வி ! அதுவே முக்கியம். நமக்குத்தேவை அன்பு. தேவையில்லாதது பொறாமை. இந்து என்பவன் யார்? எவருக்கும் இம்சை தராதவனும், இம்சைகளைப் பொறுத்துக் கொள்பவனும் தான் இந்து. மனிதன் என்பவன் தெய்வமாகலாம் வாரிவாரி வழங்கும்போது வள்ளலாகலாம் என சினிமாப்பாடலையும் அழகுறப்பாடி வந்திருந்த பார்வையாளர்களை உற்சாகப்படுத்தி, தன் வசமாக்கினார். வந்திருந்த ஏராளமான சபையோரின் கரஒலி அவரது பேச்சால் மண்டபத்தை அதிரவைத்தது. பாட்டுத்திறன், அவையறிந்து பேசும்திறன், சபையோரை உற்சாகமாக தன்பால் ஈர்த்துவைத்திருக்கும் ஆற்றல் கொண்ட பேராசிரியையுடன் கலந்துரையாடினேன்.

## ✦கலந்துரையாடியவர்: மயில்வாகனம் சர்வானந்தா✦

கேள்வி : பேராசிரியை சரஸ்வதி இராமநாதன் அவர்களே சபையோரை உங்கள் வசம் வைத்திருக்கும் திறனைக்காணும் போது எமக்கு ஆச்சரியமாக இருக்கிறது.

பதில் : (சிரிக்கிறார்) பேசுவது என்பது ஒரு கலை. அந்தக் கலையைப் பெற்றவர்கள் கலைவாணியின் கடாட்சம் பெற்றவர்கள் என்பதே என் நினைவு. என்னுள்ளும் இந்த ஆற்றல் இருப்பதை உணர்ந்தேன். பிறர் பேசுவதைக் கேட்கும் போது எனது ஆற்றல் அதிகரித்தது. திருமுருக கிருபானந்தவாரியார் அவர்களது பேச்சில் நான் மயங்கியதுண்டு. அவரல் குரல், சாரீரம், சொல்வளம், கற்பனை என்பன என்னைக் கவர்ந்தவை. அத்தோடு கி.வா.ஜெகநாதன் பேராசிரியர் ராதாகிருஷ்ணன், ஆசான் தமிழ்க்கடல் ராய சொக்கலிங்கனார் ஆகியோர் எனது மனம் கவர்ந்த பேச்சாளர்கள். எத்தனை பேச்சாற்றல் பெற்றாலும் தலைக்கனம் இருக்கக் கூடாது. புதிய பேச்சாளர்களின் பேச்சை, கருத்தை செவிமடுக்க வேண்டும். அப்போதுதான் எமது பேச்சை தற்போதைய சந்ததிக்கு நல்ல முறையில் வழங்க முடியும்.

✦ கேள்வி : பாட்டுத் திறனும், பேச்சுத்திறனும், அபிநயத்திறனையும் பார்க்கும் போது வியப்பாக இருக்கிறது, இது எப்படி உங்களுக்கு கைவந்த கலையாயிற்றது.

பதில் : சிறுவயதுமுதலே பரதநாட்டியம் பயின்றேன், எனவே உணர்ச்சியின் வெளிப்பாடு அபிநயமாகிறது. இது தவிர கர்நாடக இசையையும் பயின்றேன். மற்றுமோர் ஆசிரியரிடம் திருமுறைப் பாடல்களையும் கற்றேன். இதனால் ஒன்பது வயதிலேயே மேடையேறி கச்சேரி செய்தேன். அதில் ஒரு சந்தோசமான செய்தியைக் கூறவேண்டும், அந்தக் கச்சேரிக்கு வயலின் வாசித்தவர் குன்னக்குடி வைத்திய நாதன் அவர்கள், அப்போது அவருக்கு வயது பன்னிரெண்டு.

✦ கேள்வி : பாட்டுத்திறனோடு, பேசுகின்ற ஆற்றலை எப்படிப் பெற்றீர்கள்?

பதில் : சிறுவயதுமுதலே படித்ததை அப்படியே ஒப்புவிப்பேன். அதனால் வார்த்தைகளுக்கு பஞ்சமிருக்கவில்லை. எனது முதலாவது பேச்சு உத்தமபாளையம் கல்லூரியில் குன்றக்குடி அடிகளார் தலைமையில் இடம்பெற்றது. எனது முதல்பேச்சே அச்சம் போக்கிய 'பாரதி' எனும் தலைப்பிலேயே பேசினேன்.

சபையோரின் கரஒலி என்னை உற்சாகப் படுத்தியது. அதனோடு எனது பேசும் ஆற்றலையும் வளர்த்தது. எனது பேச்சுத்திறனை மெச்சி 'செந்தமிழ்த்திலகம்' எனும் பட்டத்தினை குன்றக்குடி அடிகளார் வழங்கினார்கள். அப்போது எனக்கு வயது இருபத்தியிரண்டு.

✦ கேள்வி : எந்தக் கல்லூரியில் கற்று பட்டங்களை பெற்றீர்கள்?

பதில் : (சிரித்துக் கொண்டே பதில் சொன்னார்) நான் கல்லூரிக்கே போகவில்லை. நான் பள்ளி ஆசிரியையாக இருந்துகொண்டே எனது B.A பட்டத்தையும், M.A பட்டத்தையும் பெற்றேன் அதன் பின் கலாநிதிப் பட்டத்தையும் முடித்தேன். எனது முயற்சி, உழைப்பு, படிப்பு இவையே நான் பேராசிரியையாக உதவியது.

✦ கேள்வி : உங்கள் திறமை மக்களிடையே அங்கீகரிக்கப் பட்டுள்ளது என்பதற்கு எதனை உதாரணம் காட்டுவீர்கள்?

பதில் : பல உதாரணங்கள் உண்டு. நான் தமிழர்வாழும் நாடெல்லாம் அழைக்கப்பட்டிருக்கிறேன். எனது பேச்சுக்கள், உரைகள், பத்திரிகைகளில், புத்தகங்களில் வெளிவந்திருக்கின்றன. சொற்பொழிவின் பயனாக காவியக்கலைமாமணி, முத்தமிழ் பேரரசி, இசைமணி, இசைச் செல்வம் என பல பட்டங்களைப் பெற்றிருக்கின்றேன். இதைவிட திருவையாற்றில் நடைபெறும் தியாகராஜ உற்சவத்தில் 1985 ம் ஆண்டு பேசவும் பாடவும் வாய்ப்புக் கிடைத்தது அது இன்று வரை தொடர்கிறது. தியாகராஜ உற்சவத்தில் ஒன்றேகால் மணிநேரம் பேசியும், பாடியும் வருகிறேன். இதனையே எனக்குக் கிடைத்த அங்கீகாரம் எனக் கருதுகிறேன்.

✦ கேள்வி : நீங்கள் எந்தெந்த நாடுகளுக்கு விஜயம் செய்திருக்கின்றீர்களா?

பதில் : இங்கிலாந்து, அமெரிக்கா, மலேசியா, சிங்கப்பூர், கனடா போன்ற நாடுகளுக்கு பல தடவை சொற்பொழிவாற்ற சென்றிருக்கின்றேன். அதேபோல ஸ்ரீ லங்காவுக்கு பல தடவை வந்திருக்கின்றேன்.இப்போது சிவதொண்டர் மாநாட்டில் கலந்துகொள்ள யாழ்ப்பாணம் வந்தது மட்டில்லா மகிழ்ச்சியாக இருக்கிறது.

✦ கேள்வி : சமயப்பணிக்கு உங்களை அர்ப்பணித்த நீங்கள் சமூகப்பணியிலும் ஈடுபடுகின்றீர்களா?"

பதில் : நாம் சமயம் சார்ந்த பேச்சோடு நம்மை மட்டுப்படுத்திக் கொள்ளக் கூடாது ஏதோ பேசினோம், பணம் சம்பாதித்தோம் நல்ல வாழ்க்கையை அமைத்துக் கொண்டோம் என்று மட்டும் நின்று விடாமல் சமூகத்துக்கு என்ன செய்தோம் என்ற கேள்வியை நம்முள் எழுப்பவேண்டும். பேச்சோடு நிற்காது செயலிலும் செய்ய வேண்டும். பேச்சாளன் மட்டுமல்ல, பணியாளனும் கூட என்ற நற்பெயர் பெறவேண்டும்.

நான் இராமநாதன் அறக்கட்டளை பிள்ளைகள் கல்வி பயில பல வழிகளில் உதவுகின்றேன். உதாரணமாக அவர்களுக்குத் தேவையான சீருடைகளை வழங்குகின்றேன். ஆறு ஆலயங்களுக்கு திருப்பணித் தலைவராக இருந்து தொண்டாற்றிவருகின்றேன். இது தவிர பயன்தரு பதினாறு நூல்கள் எழுதியிருக்கின்றேன். பலநூறு கட்டுரைகளை எழுதி சமயப் பணி செய்திருக்கின்றேன்.

✦ கேள்வி: சிவதொண்டர் மாநாடு, அது தவிர சிவதொண்டர்கள் மற்றும் சபையோர் பற்றி உங்கள் கருத்து என்ன?

பதில் : அகில இலங்கை இந்து மாமன்றம் யாழ்ப்பாணத்தில் நடத்திய சிவதொண்டர் மாநாட்டில் பங்குபற்றியதில் எனக்கு மட்டில்லா மகிழ்ச்சி. இரு நாட்கள் நடந்த கருத்துரைகள், ஆய்வரங்குகள், பேரரங்குகள், சிந்தனை அரங்குகள் என எத்தனை அரங்குகள். தமிழ் தேனாய்ப் பாய்ந்தது, சமய மணம் தென்றலாய் வீசியது. பண்ணிசைகள் செவியை நிரப்பியது. சமய ரீதியான விழாவுக்கு வந்த மக்கள் வெள்ளம் கண்டு திகைத்தேன். அகில இலங்கை இந்து மாமன்றம் சமயமே மக்களை நெறிப்படுத்தும் என்பதை உணர்ந்து, சிவதொண்டர் மாநாட்டை நடத்திவெற்றியும் கண்டுள்ளது.

சபையோரைப் பற்றி நிச்சயமாகக் கூறவேண்டும். அவர்கள் தந்த உற்சாகம் அவர்களது ரசனை என்னை உற்சாகப்படுத்தியது. சிறுவர்கள் முதல் வயோதிபர்வரை ஆர்வத்தோடு சொற்பொழிவைக் கேட்டார்கள்.

✦ கேள்வி: மாநாட்டுக்கு வருகைதந்த உங்களை கௌரவித்து 'ஞானவித்தகி' என்ற கௌரவப்பட்டத்தை வழங்கிய நல்லை ஆதீன முதல்வரைப் பற்றி என்ன சொல்ல விரும்புகின்றீர்கள்?

பதில்: அதை எனது பாக்கியமாகக் கருதுகின்றேன். நான் இங்கு வந்து ஆற்றிய சொற்பொழிவை கௌரவமாக நினைக்கின்றேன். அடுத்தது சிறுமியர் எனக்கு மலர்தூவி வரவேற்றது, ஏழு தாய்மார்கள் மாலை அணிவித்தது, ஆறு.திருமுருகன் ஐயா அவர்கள் வாழ்த்துப்பா பாடியது எல்லாம் என்னை மெய்சிலிர்க்கவைத்தது. இந்த மாநாடு என் வாழ்நாளில் மறக்க முடியாத ஒன்றாகி விட்டது.

பேராசிரியை சரஸ்வதி இராமநாதன் அவர்கள் பேசிய பேச்சின் சிறுபகுதியை மீண்டும் தருகிறேன்: " ஔவை கூறியதை நினைத்துக் கொள்ளுங்கள். அறம் செயவிரும்பு. அன்பு காட்டுதலும் தொண்டு செய்வதுமே சிவத்தொண்டு. மனிதன் பாதி தெய்வம் பாதி மிருகம். அவன் எதை நினைக்கிறானோ அதுவாகவே மாறுகின்றான். புதிதாகத் திருமணம் செய்தவர்களைப் பார்த்து மதுரையா, சிதம்பரமா என்று கேட்பார்கள். மதுரை என்றால் மீனாட்சி, சிதம்பரம் என்றால் நடேசர். இதில் நீ யார் இப்படி ஒருவனைக் கேட்ட போது அவன் சொன்னான் அர்த்தநாரீஸ்வரர் என்று ! அதாவது சிவன் பாதி –சக்தி பாதி. எவ்வளவு சாமர்த்தியமான பதில்!

கர்ணனைப் பார்த்து கண்ணன் உனக்கு என்ன வேண்டும் என்று கேட்டபோது, எத்தனை பிறவி எடுத்தாலும் வந்தோருக்கு இல்லை என்று சொல்லாத மனதைக் கொடு என்று கர்ணன் சொன்னான். 'பாசமுள்ள பார்வையிலே கடவுள் வாழ்கிறான்' என்கிறது சினிமாப்பாடல். அன்பே சிவம் என்கிறது நமது சமயம். எது தேவையோ அதை நாம் தேடவேண்டும். சபையோர் ஆரவாரம் செய்தனர். கரகோசம் செய்தனர். சத்தம் மண்டபம் எங்கும் எதிரொலித்தது.

## அகில இலங்கை இந்து மாமன்ற யாழ். பிராந்திய அலுவலகத்தில் தங்குமிட வசதி

அகில இலங்கை இந்து மாமன்ற யாழ் பிராந்திய அலுவலகத்தில் தங்குமிடவசதி உண்டு. அறையொன்றுக்கு நாளாந்தம் 1000/= ரூபா அறவிடப்படும். இது சம்பந்தமாக மேலதிக தகவல்களைப் பெற 021–2221075 எனும் தொலைபேசி இலக்கத்தில் யாழ். பணிமனை நிர்வாக அலுவலர் திரு. வி. ஜெயசிங்கம் அவர்களுடன் அலுவலக நேரத்தில் தொடர்புகொண்டு முன்பதிவுகளைச் செய்து கொள்ளலாம்.

பொதுச் செயலாளர், அகில இலங்கை இந்து மாமன்றம்

# மாமன்றத்தின் அனுதாபம்

## அகில இலங்கை இந்து மாமன்ற அறங்காவலர் சபைத் தலைவர் மூதறிஞர் நமசிவாயத்தின் மறைவு இந்துக்களுக்கு பேரிழப்பு



அகில இலங்கை இந்து மாமன்ற கௌரவ உறுப்பினரும், மாமன்ற அறங்காவலர் சபைத் தலைவரும், திருக்கேதீஸ்வர ஆலயத் திருப்பணிச் சபைத் தலைவருமான சிவநெறிக்காவலர் இ. நமசிவாயம் அவர்களின் மறைவு இந்து மக்களுக்கு பேரிழப்பாகும். திருக்கேதீஸ்வர ஆலயத்தை புனருத்தாரணம்செய்யவும், சைவசித்தாந்தத்தைப் பேணவும் இவர் அயராது உழைத்தவர். திருக்கேதீச்சர ஆலய திருப்பணிக்காக நிதி சேகரிக்க சிறியோர், பெரியோர் என்ற வேறுபாடு இல்லாமல் எல்லோரிடமும் கையேந்தி நின்றார். பொருள் தேடுவதில் சளைக்காது திருப்பணியையே குறிக்கோளாகக் கொண்டு அயராது, இறுதிவரை உழைத்த பெருமகன். ஆலயம் அனைத்து வகையிலும் குறைவிலாது நிறைவுடையதாய் இருக்க வேண்டுமென்ற பேரவாக்கொண்ட பெருந்தகை.

சிவநெறியே தனித்துவம், சிவமே பரத்துவம், சிவனே முதற்பொருளெனும் திடங்கொண்ட செந்நெறியாளர். திருப்பணிவேலைகள் சிறிதும் முடங்காது தொடர தமிழ் நாடு அரசு, ஆந்திர அரசு, பாண்டிச்சேரி அரசு அமைச்சர்களை நாடியும் தமிழகத்துத் தனவந்தகர்களையும் அணுகி நிதிசேகரித்து மாமல்லபுரத்து அரசினர் சிற்பக்கலைக் கல்லூரியில் திருக்கேதீச்சர திருக்கோவிலுக்கு என பல ஆண்டுகளாக செதுக்கப்பட்ட சிற்பக்கலைத் தூண்களுக்கு ஒரு பகுதி நிதியினை வழங்கியவர்.

1976 ஆம் ஆண்டு நடைபெற்ற பெருஞ்சாந்தி விழாவைத் தொடர்ந்து ஐந்து தேர்களின் கட்டுமானப் பணிகளை ஆரம்பித்து நிறைவுசெய்தவர்.

1990 முதல் இன்று வரை ஆலயச்சிதைவுகள், சூழலிலுள்ள மடங்கள், மனைகளின் அழிவுகள் அனைத்தையும் சீர்செய்யவும், மீள்செப்பனிடவும் அயராது உழைத்து வெற்றி கண்டவர். தொண்ணூறைக் கடந்த நிலையிலும் சோர்வின்றிப் பணிகளை முன்னெடுத்து அலைந்து திரிந்த அந்தப் பெருந்தகை தனது 99 ஆவது வயதில் (30.07.2011) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார். கடந்த திருக்கேதீச்சர தேர்த்திருவிழாவில் தனது தள்ளாத வயதிலும் சிவனருள் வேண்டி வருகைதந்திருந்தார்.

இந்து மாமன்ற அறங்காவலர் சபைத் தலைவராக பல பணிகளையாற்றிய அப்பெருமகனின் ஆத்மா சாந்தியடைய அருள்மிகு சிவகாமி அம்பாள் சமேத ஸ்ரீ நாடராஜ பெருமானை பிரார்த்திக்கின்றோம்.

## உலகளாவிய தமிழ்ச் சமூகத்திற்குப் பேரிழப்பு பேராசிரியர் சிவத்தம்பியின் மறைவுக்கு அகில இலங்கை இந்து மாமன்றத்தின் அனுதாபச் செய்தி




வடக்கு, கிழக்கு மட்டுமல்லாது உலகளாவிய தமிழ்ச் சமூகத்திற்கும், சைவசமயத்திற்கும் பெருமை சேர்த்த பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பியின் மறைவு ஒரு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும். அவர் தனது தமிழ்ப்புலமையால் தன் ஆற்றலை பல வடிவங்களில் வெளிக்கொணர்ந்தவர். பத்திரிகை, வானொலி, தொலைக்காட்சி என ஊடகங்கள் வாயிலாகவும் தமிழின் பெருமையையும், தமிழ்ச் சமூகத்தின் உணர்வுகளையும் வெளிப்படுத்தியவர்.

சைவமரபு சார்ந்த குடும்பமொன்றில் பிறந்த பேராசிரியர் எந்த அளவுக்கு மனிதநேயக் கொள்கையுடன் இருந்தாரோ அந்தளவுக்கு சைவமரபையும் நேசிப்பவராக இருந்தார். பேராசிரியரது அறிவும், ஆற்றலும் நமக்கு மட்டுமல்ல, உலகளாவிய தமிழ்ச் சமூகத்திற்கும், சைவ மதத்திற்கும் பெருமை சேர்த்திருக்கிறது.

கொழும்பில் 2004 ஆம் ஆண்டு இந்துப் பாரம்பரியம் சம்பந்தமாக ஓர் ஆய்வு செய்வதற்கு தலைமைத்துவம் தந்து ஆய்வின் வெளியீடாக வடகொழும்பு இந்து பரிபாலன சங்கத்தின் பொன்விழா மலரை வெளியிடுவதற்கு அயராது உழைத்ததுடன் அந்த ஆய்வில் எம்மையும் ஈடுபடுத்தியிருந்தார் என்பதை இவ்வேளை நினைவுகூர்கின்றோம். அவரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல சிவகாமி அம்பாள் சமேத ஸ்ரீ நடராஜப் பெருமானை பிரார்த்திக்கிறோம்.

## அகில இலங்கை இந்து மாமன்றத்தின் அனுதாபச் செய்தி

### அமரர் பெ. கருப்பையா



அகில இலங்கை இந்து மாமன்றத்தின் முன்னாள் உப பொருளாளராகக் கடமையாற்றிய திரு. பெ. கருப்பையா சமீபத்தில் திடீர் மரணமான செய்தி அறிந்து அகில இலங்கை இந்து மாமன்றம் அதிர்ச்சியடைகின்றது.

கொழும்பு விவேகானந்த சபையில் நீண்டகாலம் பல அரிய பணிகள் ஆற்றிய திரு. கருப்பையா மாமன்றத்தின் முகாமைப் பேரவையில் விவேகானந்த சபையின் பேராளராக சுமார் இருபது ஆண்டுகள் பணியாற்றியவராவார். அன்னார் பல இந்து சமய மறுமலர்ச்சி நிகழ்ச்சிகளில் மலையகத்திலும், இலங்கையின் ஏனைய இடங்களிலும் கலந்து சிறப்பித்தவர். அவரின் மறைவு இந்து சமூகத்திற்குப் பேரிழப்பாகும்.

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினர்க்கு அகில இலங்கை இந்து மாமன்றம் சார்பாக ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய அருள்மிகு சிவகாமி அம்பாள் சமேத ஸ்ரீ நடராஜப் பெருமானை பிரார்த்திக்கிறோம்.

## மாமன்றம் வாழ்த்துகிறது

# மணிவிழா காணும் விடைக்கொடிச்செல்வர் சின்னத்துரை தனபாலா



அகில இலங்கை இந்து மாமன்றத்தின் உபதலைவரும் மாமன்ற சமூகநலன் குழுத் தலைவருமான விடைக்கொடிச் செல்வர் சின்னத்துரை தனபாலா அவர்களுக்கு மாமன்றம் இதயங்கனிந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறது.

இவர் நீண்டகாலமாகவே மாமன்ற முகாமைப் பேரவையில் இணைந்திருப்பதுடன், மாமன்றத்தின் வளர்ச்சிக்கும், சிறப்புக்கும் பெரிதும் துணைபுரிந்து வருகிறார். மாமன்றத் தலைமையகத்திற்கான கட்டிடப் பணிகள் ஆரம்பமான காலத்தில், மாமன்ற கட்டிடக் குழுவில் உறுப்பினராகவிருந்து, கட்டிட வேலைகள் முழுமை பெறுவதற்கு தனது ஆக்கபூர்வமான பங்களிப்பை வழங்கியிருந்தமையை சிறப்பாகச் சொல்லலாம். தொடர்ந்து மாமன்ற சமூகநலன் குழுவிலும் இணைந்திருந்து, மாமன்றத்தின் சமூகநல சேவைகளை வெற்றிகரமாக முன்னெடுத்துச் செல்வதற்கு பெரிதும் உழைத்து வருவதையும் குறிப்பிட வேண்டும். கடந்த சில வருடங்களுக்கு முன்னர் நிகழ்ந்த ஆழிப்பேரலை அனர்த்தத்தின் போதும், கடந்த காலத்தில் கிழக்கு மாகாணத்திலும் மற்றும் மலையகப் பகுதிகளிலும் ஏற்பட்ட பெருவெள்ளம், சூறாவளி போன்ற இயற்கை அனர்த்தங்களின்போதும் பாதிக்கப்பட்டவர்களை நேரில் சென்று பார்த்து, மாமன்றத்தின் சார்பாக நிவாரணப் பொருட்களை கையளிப்பதற்காக அமைக்கப்பட்ட மாமன்றக் குழுவுக்கு விடைக்கொடிச்செல்வர் சின்னத்துரை தனபாலா அவர்களே தலைமை தாங்கியிருப்பதுடன், இது தொடர்பான பல செயற்பாடுகளையும் இவர் சிறப்பான வகையில் நிறைவேற்றியிருக்கிறார்.

கடந்த போர்க்காலச் சூழ்நிலைகளின்போது வன்னிப் பகுதியிலிருந்து இடம்பெயர்ந்து பலவிதமான கஷ்டங்களுக்கு மத்தியில் வவுனியா நலன்புரிமுகாம்களில் தங்கியிருந்தவர்களுக்கு மாமன்றம் நிவாரண உதவிகளை வழங்கிய வேளையிலும், மேற்படி முகாம்களில் தங்கியிருந்த இந்து மத குருமார்களுக்கும், அவர்களது குடும்பத்தினருக்கும் மாமன்றம் உணவு வழங்கும் ஏற்பாடுகளை செய்திருந்த வேளையிலும், வவுனியா நலன்புரி முகாம்களில் தங்கியிருந்த ஆதரவற்ற முதியோர்களை அழைத்துச் சென்று மன்னாரில் விசேடமாக அமைக்கப்பட்ட முதியோர் இல்லத்தில் தங்க வைப்பதற்கான ஏற்பாடுகளை மாமன்றம் செய்திருந்த வேளையிலும் மாமன்ற சமூகநலன் குழுத் தலைவர் என்ற வகையில் விடைக்கொடிச் செல்வர் சி. தனபாலா அவர்கள் வழங்கிய முழுமையான ஆதரவு, மற்றும் ஒத்துழைப்பினூடாக மாமன்றத்தின் சமூகநல செயற்திட்டங்களை வெற்றிகரமாக செயற்படுத்த முடிந்தது என்பதில் மாமன்றம் திருப்தியும் மகிழ்ச்சியும் அடைகிறது. அண்மைக்காலத்தில் உள்நாட்டிலுள்ள சமூகநலன் நிறுவனங்களினதும் மற்றும் தனிப்பட்டவர்களினதும், வெளிநாட்டு அன்பர்களினதும் நிதியுதவியுடன் கொள்வனவு செய்யப்பட்ட வலுவிழந்தோருக்கான முச்சக்கர வண்டிகளை யாழ்ப்பாணம் மற்றும் வன்னிப் பகுதிகளில் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கிய நல்லதொரு கைங்கரியத்திலும் இவரது பங்களிப்பு சிறப்பாக குறிப்பிடத்தக்கது.

சைவசமயத்தின் சின்னமான நந்திக்கொடிகளை இந்து மக்களுக்கும், இந்துமத நிறுவனங்கள், ஆலயங்கள் மற்றும் பாடசாலைகள் என்பவைகளுக்கும் இலவசமாக வழங்கும் ஒரு சிறப்பான கைங்கரியத்தையும் விடைக்கொடிச்செல்வர் தனபாலா ஒரு தனிமனித முயற்சியாக, கடந்த சில வருடங்களாக செய்து வருகிறார். இலங்கையில் மட்டுமல்ல வெளிநாடுகளிலும் சமய நிகழ்வுகளின்போதும், ஆலய உற்சவங்களின்போதும் நந்திக்கொடிகள் ஏற்றிவைக்கப்படுவதற்கும், வெளிநாட்டு இந்து ஆலயங்களில் நந்திக் கொடிகள் பறந்து கொண்டிருப்பதற்கும் இவரே காரணகர்த்தாவாக இருப்பது பெருமைக்குரிய விஷயம். இவர் நந்திக்கொடிகளை மட்டும் வழங்குவதுடன் நின்று விடாது, கடந்த காலங்களில் நந்திக்கொடிகள் சம்பந்தமாக பத்திரிகைகள், சஞ்சிகைகளில் வெளிவந்துள்ள கட்டுரைகளைத் தொகுத்து 2008 ஆம் ஆண்டில் ''நந்திக்கொடியின் முக்கியத்துவமும் பெருமைகளும்'' என்ற பெயரில் நூலொன்றையும் வெளியிட்டிருக்கிறார்.

நந்திக்கொடிகளை வழங்கிவரும் நற்பணிவை போற்றும் வகையில் இந்தியா பேரூர் ஆதீனம் ''விடைக்கொடிச்செல்வர்'' என்ற பட்டத்தை வழங்கி கௌரவித்துள்ளது. இதுதவிர, ஏனைய பல இந்து மத நிறுவனங்களும் இத்தகைய சேவையை மதிக்கும் வகையில் வெவ்வேறு பட்டங்கள் பலவற்றை இவருக்கு வழங்கியிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

இவர் கொழும்பு சைவ முன்னேற்றச் சங்கம், கதிர்காம யாத்திரிகர் தொண்டர் சபை, கொழும்பு மனிதநேய நிதியம் என்பனவற்றின் அறங்காவலர் சபைகளில் இணைந்திருப்பதுடன், உலக சைவப் பேரவையின் இலங்கைக் கிளை, திருக்கேதீஸ்வர ஆலய திருப்பணி சபை, கொழும்பு விவேகானந்த சபை ஆகியவற்றின் உப தலைவராகவும், இந்து வித்தியா விருத்திச் சங்கம், இந்து கலாசார நிதியம் என்பனவற்றின் ஆளுநர் சபை உறுப்பினராகவும், இந்து –பௌத்த நட்புறவு சங்கத்தின் அங்கத்தவராகவும் மற்றும் பௌத்த சங்கங்களின் காப்பாளராகவுமிருந்து பெரும் பணியாற்றி வருகிறார்.

பிரபல தொழிலதிபராக விளங்கியவரும், லீலா பஞ்சாங்க சித்திரக் கலண்டர் என்ற பெயரில் சித்திரக் கலண்டரொன்றை முதன் முதலாக அறிமுகம் செய்த பெருமைக்குரியவருமான சிந்தனைச் சிற்பி என போற்றப்படும் அமரர் சி. த. சின்னத்துரை அவர்களின் புதல்வரான விடைக்கொடிச்செல்வர் தனபாலா அவர்கள், தந்தை வழிநின்று சமய, சமூகநலப் பணிகளை செய்துவருகிறார் என்பதை சிறப்பாகச் சொல்லலாம்.

மணிவிழா காணும் இவர் சுக நலத்துடன் வாழ்ந்து சமய, சமூகநலப் பணிகளை மேலும் சிறப்பாகத் தொடருவதற்கு அருள்மிகு சிவகாமி அம்பாள் சமேத ஸ்ரீநடராஜப் பெருமானின் திருவருள் துணைநிற்க வேண்டி மாமன்றம் பிரார்த்தித்து இனிதே வாழ்த்துகிறது.

## மாமன்ற முன்னாள் தலைவர் அமரர் வே. பாலசுப்பிரமணியம் நினைவுப் பேருரை (14.07.2011)

(பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் இடம் பெற்றது)




யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் எஸ். சிவலிங்கராசா ''கவிதை - சில தரிசனங்கள்'' எனும் தலைப்பில் நினைவுப் பேருரையாற்றுகிறார்.




மாமன்றத்தின் பொருளாளர் திரு. வே. கந்தசாமி அவர்கள் பேராசிரியர் எஸ். சிவலிங்கராசா அவர்களுக்கு மாலை அணிவிக்கிறார்.



நிகழ்வின் ஆரம்பத்தில் மாமன்றத் தலைவர் இந்துசிரோரத்தினம், மனிதநேயமாமணி வி. கயிலாசபிள்ளை, பேராசிரியர் எஸ். சிவலிங்கராசா, திருமதி சாந்தி பாலசுப்பிரமணியம், பிரதித் தலைவர் மா. தவயோகராஜா ஆகியோர் மௌனாஞ்சலி செலுத்துவதைக் காணலாம்.



நினைவுப் பேருரை நிகழ்வு எஸ். இரத்தினபிரகாசம் அவர்களின் தேவாரபாராயணத்துடன் நிறைவு பெற்றது. அருகில் மாமன்ற பொதுச் செயலாளர் திரு. கந்தையா நீலகண்டன், மாமன்றத் தலைவர் மனிதநேயமாமணி வி. கயிலாசபிள்ளை ஆகியோர் நிற்கின்றனர்.

## இந்து வித்தியா விருத்திச் சங்கத்தின் வைரவிழா நிகழ்வு (04.06.2011)





வைரவிழா சிறப்புச் சொற்பொழிவுத் தொடரில் பேராசிரியை சரஸ்வதி இராமநாதன் அவர்கள் உரையாற்றுகிறார்.

## லண்டன் (லூசியம்) திருவருள்மிகு சிவன் திருக்கோயில் மகா கும்பாபிஷேகம்





அண்மையில் மகா கும்பாபிஷேகம் செய்யப்பட்ட லண்டன் லூசியம் திருவருள்மிகு ஸ்ரீசிவன் திருக்கோயிலின் முகப்புத் தோற்றத்தையும், மகாகும்பாபிஷேக நிகழ்வில் கலந்து கொண்ட மாமன்ற உப தலைவர் விடைக்கொடிச் செல்வர் சின்னத்துரை தனபாலா மற்றும் மேற்படி ஆலய செயலாளர், திரு. கணேசமூர்த்தி, திரு. வி.கே. கிருஷ்ணானந்தராஜா, ஆகியோர் கலசங்களுடன் நிற்கும் காட்சியையும், அருகே ஆலய சிவாச்சாரியார் சிவஸ்ரீ சிறிம சுந்தரக் குருக்கள் அவர்களையும் காணலாம்.

## லண்டன் (வெம்பிளி) அருள்மிகு சிவன் ஆலய மகா கும்பாபிஷேகம்






## ஆலையடிவேம்பு – மீள் குடியேற்ற நிவாரணப் பணிகள்.






ஆலையடிவேம்பு இந்து மாமன்றத் தலைவர் திரு. வே. சந்திரசேகரம் அவர்களும், செயலாளர் திரு. சரவணபவன் அவர்களும் பாதிக்கப்பட்டவர்களுக்கு மீள் குடியேற்ற நிவாரணப் பொருட்களை கையளிக்கிறார்கள்.

# யாழ். சிவதொண்டர் மாநாடு நிகழ்வுகள் (28.05.2011, 29.05.2011)



இந்திய உயர் ஸ்தானிகராலய யாழ். இராஜதந்திர அலுவல்கள் நாயகம், திரு. வி. மகாலிங்கம் அவர்களுக்கு மாமன்றத் தலைவர் பொன்னாடை போர்த்திக் கௌரவிப்பதைக் காணலாம்.




சைவஞானபானு, செஞ்சொற்செல்வர் ஆறு. திருமுருகன் அவர்களின் அன்னையார் திருமதி சரஸ்வதி ஆறுமுகம் அவர்களை, திருமதி அ. கயிலாசபிள்ளை, திருமதி கனகரத்தினம் ஆகியோர் கௌரவம் செய்கிறார்கள்.



மனநிறைவுடன் காணப்படும் பொன்விழா கண்ட சைவஞானபானு, செஞ்சொற்செல்வர் ஆறு. திருமுருகன்.



இந்து ஒளி - சிவதொண்டர் மாநாடு சிறப்பிதழ் முதற்பிரதியை தினக்குரல் நிறுவன முதல்வர் திரு. எஸ். பி. சாமி அவர்களுக்கு, மாமன்ற விடுதிகள் குழுச் செயலாளர் திருமதி. அ. கயிலாசபிள்ளை வழங்குகிறார்.



சிவதொண்டர் மாநாட்டில் கலந்து கொண்டு சிறப்பித்த பிரமுகர்களுடன் மாமன்ற முகாமைப் பேரவையினர்.



மாமன்றத்தின் சைவ வித்தகர் பயிற்சிநெறியில் இணைந்து கொண்ட மாணவர்கள்.





மாமன்றத்தின் சார்பாக மாமன்றத் தலைவர் மனிதநேயமாமணி வி. கயிலாசபிள்ளை அவர்களும், மாமன்ற சமூக நலன்குழுத் தலைவர் விடைகொடிச்செல்வர் சின்னத்துரை தனபாலா அவர்களும் மகளிர் இருவருக்கு தையல் இயந்திரங்களை அன்பளிப்பாக வழங்குகிறார்கள். அருகே மாமன்ற சமூகநலன் குழுச் செயலாளர் கலாநிதி முத்தையா கதிர்காமநாதன் அவர்கள்.

HINDU OLI - REGISTERED IN THE DEPARTMENT OF POSTS OF SRI LANKA UNDER NO. QD/147/NEWS/2011

# யாழ். சிவதொண்டர் மாநாடு நிகழ்வுகள் (28.05.2011, 29.05.2011)



ஆரம்ப நிகழ்வின்போது சுவாமி சர்வரூபானந்தா, நல்லை ஆதீன முதல்வர், கௌரவ வி. மகாலிங்கம், மாமன்றத் தலைவர், நீதியரசர் சி. வி. விக்னேஸ்வரன், திரு. கி. பாலசுப்பிரமணியம், திருமதி சாந்தி நாவுக்கரசன்.



சைவஞானபானு செஞ்சொற்செல்வர் ஆறு. திருமுருகன் அவர்களும் அன்னையாரும் கௌரவிக்கப்பட்ட நிகழ்வின்போது.








இராமகிருஷ்ண மிஷன் தலைவர் சுவாமி சர்வரூபானந்தா ஆசியுரை வழங்குகிறார். இந்திய உயர் ஸ்தானிகராலய யாழ். இராஜதந்திர அலுவல்கள் நாயகம் திரு. வி. மகாலிங்கம், பிரதம விருந்தினர் நீதியரசர் சி. வி. விக்னேஸ்வரன் ஆகியோர் உரையாற்றுகின்றனர்.







இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் திருமதி சாந்தி நாவுக்கரசன், தமிழ்நாடு பேராசிரியர் திருமதி சரஸ்வதி இராமநாதன், மாமன்றப் பொதுச் செயலாளர் திரு. கந்தையா நீலகண்டன் ஆகியோர் உரையாற்றுகிறார்கள்.



## சிவநெறிக்காவலர் அமரர் இ. நமசிவாயம்

திருக்கேதீஸ்வர ஆலயத்தை புனருத்தாரணம் செய்யவும், சைவசித்தாந்தத்தைப் பேணவும் இவர் அயராது உழைத்தவர். திருக்கேதீச்சர ஆலய திருப்பணிக்காக நிதி சேகரிக்க சிறியோர், பெரியோர் என்ற வேறுபாடு இல்லாமல் எல்லோரிடமும் கையேந்தி நின்றார். பொருள் தேடுவதில் திருப்பணியையே குறிக்கோளாகக் கொண்டு அயராது இறுதிவரை உழைத்த பெருமகன். ஆலயம் அனைத்து வகையிலும் குறைவிலாது நிறைவுடையதாய் இருக்க வேண்டுமென்ற பேரவாக் கொண்ட பெருந்தகை. இப்பெருமகனின் ஆத்மா சாந்தியடைய இந்து மக்கள் அனைவரும் இறைவனைப் பிரார்த்திப்போமாக !

[illegible] காலாண்டிதழ் இல. 486, புளுமெண்டால் வீதி, கொழும்பு - 13, யுனி ஆர்ட்ஸ் (பிறைவேட்) லிமிட்டட் நிறுவனத்தில் அச்சிடப்பட்டு அகில இலங்கை இந்து மாமன்றத்தினால் வெளியிடப்பட்டது